விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 11 புதன்கிழமை (27.11.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 343

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## நெடுந்தீவு பிரதேசசபைத் தலைவர் மர்மமான முறையில் உயிரிழப்பு

(நெடுந்தீவு)

தலையில் அடிகாயங்களுடன் மர்மமான முறையில் அவரது வீட்டில் உயிரிழந்து கிடந்த நெடுந்தீவு பிரதேச சபையின் தலைவர் டானியல் றெச்சியானின் (ராஜீவ் தோழர்) சடலத்தை பொலிஸார் மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் மீட்கப்பட்ட இவரது சடலம் புங்குடுதீவு வைத்தியாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் நேற்றிரவு 7.50 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில்

20-ம் பக்கம் பார்க்க

## உயர் கோபுரங்களுக்கு இராணுவம் பாதுகாப்பு

வட பகுதியில் உள்ள உயர்ந்த தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கு இராணுவத்தினர் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவீரர் தினம் இன்று 27 ஆம் திகதி புதன்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் மன்னார் பனங்கட்டுக்கோட்டு பகுதியில் உள்ள எமிழ்

20-ம் பக்கம் பார்க்க

### மகிந்த உருவப்படம் கிழிப்பு

## கைதான 4 இளைஞர்களுக்கு புனர்வாழ்வு அளிக்க முடிவு!

ஜனாதிபதியின் உருவப் படம் பொறித்த பதாகையினை கிழித்தெறிந்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட தெல்லிப்பழையைச் சேர்ந்த நான்கு இளைஞர்களுக்கும் புனர்வாழ்வு அளிக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் நாள் இன்று அனுஷ்டிக்கப்படும் நிலையில் நேற்று முன்தினம் இரவு குறித்த நான்கு தமிழ் இளைஞர்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியதோடு அவர்களைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட நான்கு இளைஞர்களும் நேற்றுப் பொலிஸாரினால் பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் இவர்கள் வவுனியாவிற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் எனவும் தெரிய வந்துள்

20-ம் பக்கம் பார்க்க

# வடக்கில் இன்று பதற்றமான சூழ்நிலை

*தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவீரர் தின நிகழ்வுகள் வடக்கில் இன்று இடம்பெறுவதனைத் தடுக்கும் நோக்கில் இராணுவமும் பொலிஸாரும் அதிகளவான எண்ணிக்கையில் அஞ்சலி செலுத்தப்படும் இடங்களில் ஆயுதம் தரித்தவாறு குவிக்கப்பட்டுள்ளனர்.*

*இதனால் வடபகுதி எங்கும் இன்று ஏதேனும் அசம்பாவிதங்கள் இடம் பெறலாம் என்ற அச்சநிலை நீடித்துள்ளது.*

## வவுனியா விபத்தில் குடும்பஸ்தர் பலி

(வவுனியா)

வவுனியா, குருமன்காட்டுப் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

குருமன்காடு கோவில் வீதியில் பயணித்துக் கொண்டிருந்தவர்கள் மீதே வான் மோதியுள்ளது. குடும்பஸ்தர் வீதியில் வீழ்ந்ததுடன் சம்பவத்தையடுத்து வான் நிறுத்தாமல் தப்பிச் சென்றுள்ளதாகவும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

விபத்தில் சிக்கிய குடும்பஸதரை அங்கிருந்தவர்கள் வவுனியா பொது வைத்தியசாலைக்கு உடனடியாக கொண்டு சென்ற போதிலும் அவர் இடைநடுவிலேயே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் விபத்தில் பலியானவர் தொடர்பான விபரங்கள் நேற்றிரவு தெரியவில்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (செ-11)

## செங்கல்பட்டு சிறப்பு முகாமில் மாவீரர் நாள் அனுசரிக்க தடை

### சின்னங்களை இடித்து அகற்றியது பொலிஸ்

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழ் அகதிகள் மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க பொலிஸ் தரப்பினர் தடைவிதித்துள்ளனர்.

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்ட ஈழத் தமிழர்கள் ஆண்டுதோறும் மாவீரர் நாளில் போரில் இறந்த சொந்தங்களை நினைவு கூர்வது வழக்கம். அதற்காக அவர்கள் சிறப்பு

20-ம் பக்கம் பார்க்க

### ராஜீவ் காந்தி கொலை வழக்கு

## தூக்குத் தண்டனையை ரத்தாக்க வேண்டும் - வைகோ

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் நீதி தூக்கிலிடப்பட்டுவிட்டது. மேலும் அநீதி நிகழாமல் மூவரின் தூக்குத் தண்டனை ரத்தாக வேண்டும் என்று மதிமுக பொதுச் செயலாளர் வைகோ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

குற்றவாளிகள் தப்பிக்கலாம். ஆனால், நிரபராதிகள் தண்டிக்கப்படக்கூடாது என்பதுதான் உலகமெல்லாம் ஜனநாயகத்தில் நீதித்துறையின் அடிப்படை தத்துவமாகும். ஆனால் ராஜீவ்காந்தி கொலை வழக்கில், அச்சம்பவத்தில் எள்ளளவும் தொடர்பில்லாத நிரபராதிகள் தண்டிக்கப்பட்டு விட்டார்கள்.

20-ம் பக்கம் பார்க்க

## இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்து!

### ஒருவர் பலி; மூவர் படுகாயம்



(புத்தூர்)

யாழ்ப்பாணம், புத்தூர் சந்தியில் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்ற மோசமான விபத்தொன்றில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இதில் பாரதி வீதி, அச்சுவேலியைச் சேர்ந்த கந்தசாமி ரனோஜன் (வயது 19) என்ற இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. அச்சுவேலியிலிருந்து

20-ம் பக்கம் பார்க்க

## பல்கலையை சூழ படையினர் குவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தைச் சுற்றி பெருமளவான படையினர் நேற்றுக் குவிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் யாழ் மாவட்டத்திலுள்ள வீதிகளில் வழமைக்கு மாறாக படையினர் நேற்று பகலில் இருந்து இரவு வரை வீதிச் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மாவீரர் தினத்தை ஒட்டி ஏதாவது அஞ்சலி நிகழ்வுகள் நடத்தப்படலாம் என்ற சந்தேகத்திலேயே பொலிஸாரும் இராணுவத்தினரும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் குவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை யாழ் பல்கலை மாணவர்கள்

20-ம் பக்கம் பார்க்க

## இராணுவக் கெடுபிடிகள் வடக்கில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் இன்றைய மாவீரர் நாள் அனுஷ்டிப்பை தடுத்து நிறுத்தும் நோக்கில் வடக்கில் இராணுவத்தினரின் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.


கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்பு ஐந்து வருடங்களாக வடக்கில் மாவீரர் நாள் அனுஷ்டிப்பதற்கு இலங்கை அரசாங்கமும் பாதுகாப்புத் தரப்பினரும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருவதோடு பலரைக் கைது செய்து தடுப்புக் காவலிலும் வைத்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த வருடம் மாவீரர் நாள் அனுஷ்டிப்பதற்கு முயற்சி மேற் கொண்ட யாழ். பல் கலைக்கழக மாணவர்கள் மீது இராணுவத்தினரும் பொலிஸாரும் அடக்கு முறைகளைப் பிரயோகித்ததோடு அடக்கு முறைகளை எதிர்த்து போராட்டம் நடத்திய

20-ம் பக்கம் பார்க்க

up to 25% CONDITIONS APPLY
Special offer
நத்தார் மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் விலைக்கழிவு.
For Quality Tiles & Sanitaryware
Ranjanas CERAMIC
(C-5576)
# 212, Palaly Road, Jaffna / #05, Stanley Road, Jaffna.
Tel:- 021 222 0033 / 021 222 4777

# இந்தியக் கடற்படைத்தளபதி கோத்தபாயவுடன் சந்திப்பு




(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் தேவேந்திர குமார் ஜோஷி நேற்று முன்தினம் திங்கட்கிழமை பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இலங்கையின் கடற்படை வருடம் தோறும் நடத்தி வரும் சர்வதேச கடல்சார் பாதுகாப்பு கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக அவர் கொழும்புக்கு விஜயம் செய்திருந்த நிலையிலேயே இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பின் போது இருதரப்பு விவகாரங்கள் குறித்து இருவரும் பேசியதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. காலி வெளிச்சவீட்டு விடுதியில் நேற்று முன்தினம் ஆரம்பமாகிய இலங்கை கடற்படையின் கடல்சார் பாதுகாப்புக் கருத்தரங்கில், ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் வளர்ந்து வரும் கடல்சார் ஆர்வங்கள் ஒரு இந்திய நோக்கு என்ற தலைப்பில் இந்தியக் கடற்படைத் தளபதி ஆய்வுக் கட்டுரை ஒன்றைச் சமர்ப்பிக்கின்றமை தெரிந்ததே. இந்தியக் கடற்படையின் 21-வது தளபதியாக அட்மிரல் தேவேந்திர குமார் ஜோஷி கடந்த ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி பதவி ஏற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# சிறுவர் இல்ல துஷ்பிரயோகம்; மேலும் ஒருவர் கைதானார்

(வவுனியா)

வவுனியா எட்டம் பகஸ்கட செதசெவன சிறுவர் இல்லத்து சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சித்திரவதை தொடர்பான வழக்கில் சம்பந்தப்பட்டவர் என்ற சந்தேகத்தின்பேரில் 24 வயதுடைய கோணேஸ்வரன் காங்கேசன் என்பவரை பொலிஸார் கைது செயதுள்ளனர்.

எட்டம் பகஸ்கட சிறுவர் இல்லத்தின் நிர்வாகியாகிய கல்யாண திஸ்ஸ தேரோவின் உதவியாளராக அந்த இல்லத்தில் இவர் பணியாற்றி வந்துள்ளார். வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் இந்த சந்தேக நபர் ஆஜர் செய்யப்பட்டதையடுத்து, நீதவான் இவரை இரண்டு வாரம் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இந்த சிறுவர் இல்லத்தின் நிர்வாகியான பௌத்த மதகுரு வரும் டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி வரையில் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய ஏற்கெனவே தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், இந்த சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த மற்றுமொரு சிறுவன் மீது சித்திரவதை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளிடமும், பொலிஸாரிடமும் முறையிடப்பட்டிருக்கின்றது.

இதேவேளை, இந்த சிறுவர் இல்லத்தில் இருந்து சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகளினால் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்த சிறுவர்களில் 19 பேர் வவுனியா சிறுவர் நன்னடத்தைப் பிரிவினரிடம் நீதிமன்றத்தினால் ஒப்படைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் முல்லைத்தீவில் உள்ள அரச அனுமதி பெற்ற சிறுவர் இல்லம் ஒன்றில் வைத்துப் பராமரிக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இந்த சிறுவர்களில் 8 பேர் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய அவர்களுடைய பெற்றோரிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்த சிறுவர்கள் பாடசாலை சென்று கல்வி கற்பதற்கு வசதியாக சைக்கிள்கள் மற்றும் புத்தகங்கள், உபகரணங்கள் என்பனவும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினரால் வழங்கப்பட்டிருக்கின்றது. (செ-11)

# அவுஸ்திரேலிய பிரதமரின் கருத்து திரும்ப பெறப்பட வேண்டும்

## மனித உரிமை கண்காணிப்பகம் கோரிக்கை

(கொழும்பு)

சித்திரவதைகள் குறித்த அவுஸ்திரேலிய பிரதமரின் கருத்து வாபஸ பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென மனித உரிமை கண்காணிப்பகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை மனித உரிமை நிலைமைகள் மற்றும் சித்திரவதைச் சம்பவங்கள் தொடர்பில் அண்மையில் அவுஸ்திரேலிய பிரதமர் டோனி அப்போட் கருத்து வெளியிட்டிருந்தார்.

எனினும், இந்தக் கருத்துக்கள் ஏற்புடையவை அல்ல எனவும் அவற்றை உடனடியாக வாபஸ் பெறுக்கொள்ளப்பட வேண்டும் எனவும் மனித உரிமை கண்காணிப்பகம் உள்ளிட்ட மனித உரிமை அமைப்புக்கள் எழுத்து மூலம் பிரதமர் அபோடிடம் கோரியுள்ளன.

கடந்த 15ம் திகதி இலங்கையின் கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வில் பங்கேற்ற போது அப்போட் இந்தக் கருத்தை வெளியிட்டிருந்தார்.

நெருக்கடியான நிலைமைகளில் நெருக்கடியான சூழ்நிலைகளில் இடம்பெறும் சம்பவங்களை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என அப்போட் சித்திரவதை சம்பவங்களுக்கு நியாயம் கற்பிக்கும் வகையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

சித்திரவதைச் சம்பவங்கள் எந்தவொரு சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், அதனை நியாயப்படுத்த முடியாது எனவும் மனித உரிமைக் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

எனவே இலங்கை மனித உரிமை நிலைமைகள் குறித்து அப்போட் வெளியிட்ட கருத்து உடனடியாக வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென மனித உரிமை கண்காணிப்பகம் உள்ளிட்ட மனித உரிமை அமைப்புக்கள் கோரியுள்ளன. (செ-11)

# பொலிஸார் தாக்குதல்

## காயமடைந்த நால்வர் ம.உ.ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

பொலிஸாரின் தாக்குதலில் காயமடைந்த நால்வர் நேற்று அச்சுறுத்தல் காரணமாக யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை கரவெட்டி இராஜ கிராமம் பகுதியில் சந்தேக நபர் ஒருவரை கைது செய்ய சென்றபொழுது ஏறபட்ட தாக்குதல் அசம்பா விதத்தில அப் பகுதியை சேர்ந்த கண்ணன் தனுசியா (வயது 15) கண்ணன் சிவலட்சுமி (வயது 39) சுமன் புஸ்பராணி (வயது 36) நந்த குமார் நிறோஜன் (வயது 19) ஆகி யோர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் அச் சம்பவத்தில் அவர்களது உறவினர்களும் சிறுசிறு காயங்களுக்கு உள்ளாகியிருந்தனர். இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதேவேளை நேற்றுமுன்தினம் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையில் மாதாந்த பொதுக் கூட்டத்தில் நெல்லியடிப் பொலிஸாருக்கு எதிராக கண்டனத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை காயமடைந்தவர்கள் தங்களுக்கு அச்சுறுத்தல் காணப்படுவதாக தெரிவித்து வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையில் தெரிவித்ததோடு கிராம சேவகர் ஊடாக யாழ்மனித உரிமை ஆணைக் குழுவிலும் நேற்றையதினம் முறைப்பாடு செய்துள்ளனர். (செ-11)

# இராசகுமாரன் மீது மீண்டும் ரி.ஐ.டியினர் விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் அமிர்தலிங்கம் இராசகுமாரன் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் (ரி.ஐ.டி) விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

மாவீரர் தின அனுஷ்டிப்பு தொடர்பில் வலம்புரி பத்திரிகைக்கு தெரிவித்த செய்தி தொடர்பிலேயே இராசகுமாரன் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தினூடாக ஆசிரியர் சங்கத் தலைவரினை விசாரணைக்குட்படுத்தப்படவேண்டியுள்ளது. ஆகையினால் இன்று (நேற்று) பி.ப. 2 மணிக்கு நாவலர் வீதியிலுள்ள ரி.ஐ.டியினரின் அலுவலகத்திற்கு வருமாறு கூறப்பட்டது.

இதனையடுத்தே ஆசிரியர் சங்க தலைவர் ரி.ஐ.டி. அலுவலகத்திற்கு சென்றுள்ளார்.

இதன்போது வலம்புரி பத்திரிகைக்கு மாவீரர் தினம் தொடர்பில் கூறிய கருத்து தொடர்பில் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கடந்த 25 ஆம் திகதி வெளியாகிய வலம்புரி பத்திரிகையில் மாவீரர் தினம் தொடர்பில் ஆசிரியர் சங்கத்தின் கருத்து வெளியாகியிருந்தது.

மேலும் இச் செய்தி தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவரும் தேடப்பட்டு வருகிறார் என தெரியவருகின்றது.

கடந்த வருடம் மாவீரர் வாரத்தின் போதும் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தலைவர் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினால் வவுனியா அலுவலகத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தார்.

இதன்படி அங்கு விசாரணைக்காக சென்ற இராசகுமாரன் நேற்று இரவு பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (செ-4)

# மட்டு. பொதுமக்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல்

(மட்டக்களப்பு)

தமிழினத்திற்காக தங்களது உயிரையும் பெரிதாக மதிக்காது தியாகங்களை செய்த மாவீரர்களை நினைவு கூர வேண்டும் என்று வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தினைக் காட்டி, அப்பாவி மக்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்திய சம்பவம் மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை மயிலம்பாவெளி முருகன் கோயிலுக்கு முன்பாக ஒட்டப்பட்டிருந்த துண்டுப் பிரசுரத்தினை தமது கைகளிலே எடுத்த இராணுவத்தினர், அவ் வீதியால் சென்ற மக்களை பெரிய தடிகள் கொண்டும், கூரிய ஆயுதங்கள் கொண்டும் தாக்கியுள்ளனர்.

அதிகாலை வேளையில் லொறியில் கல் ஏற்றிவந்தவர்களை வாகனத்தில் இருந்து கீழ் இறக்கி அவர்களை தடிகளினால் தாக்கியது மாத்திரமல்ல இவர்களுடன், சேர்த்து வீதியால் வந்தவர்களையும் ஆலய நிருவாகத்தினரையும் மூன்று மணித்தியாலங்களாக முழங்காலில் வைத்து தண்டனை கொடுத்த சம்பவமும் இடம பெற்றுள்ளது. (எ-11)


## வீடு வாடகைக்கு

4 அறை வீடு யாழ்.நகரப்பகுதியில் உடனடியாகவாடகைக்குண்டு. அலுவலகப்பாவனைக்கும் உகந்தது வாகன தரிப்பிட வசதியுண்டு.

தொடர்பு : 0714408794,0714797357

## பிள்ளையார் இன்

தினமும் உருளைக்கிழங்கு கறியுடன்

- பூரி, சப்பாத்தி, தோசை 30/- மட்டுமே
- மசாலா தோசை 120/- மட்டுமே

தொடர்புகளுக்கு:
இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2829 (சி-5570)


# மரண அறிவித்தல்



## திருமதி மார்க்கண்டு சரஸ்வதி

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Deuil Ju Barre ரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மார்க்கண்டு சரஸ்வதி (25.11.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் செல்லாச்சி (குட்டிப்பிள்ளை) தம்பதியினரின் அன்புமிகு மகளும் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் லட்சுமி (தம்பதியினரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற மார்க்கண்டு அவர்களின் ஆருயிர் மனைவியும், விஜயராஜா (விஜயன்), ஜெயராஜா (சின்னபொடி), சந்திரகலா (சந்திரா), தியாகராஜா, சிவராஜா (சிவா), பிரேமகலா (சுசிலா), அருள்ராஜா (அருள்) ஆகியோரின் அன்புத் தாயாரும். காலஞ்சென்றவர்களான தங்கமுத்து, கந்தையா, சிவப்பிரகாசம், கனகரெத்தினம், பார்வதி, வள்ளியம்மை, ஏகாம்பரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மயில்வாகனம், யோகம்மா, பொன்னம்மா, பாக்கியம், காலஞ்சென்ற இராசம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.11.2013 (வியாழக்கிழமை) பிரான்ஸில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்கிறோம்.

இராஜவீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல் :
பா.பவானி (பெறாமகள்)
077 021 6620

(4592)

# இன்று ஒரு தகவல்

## சித்தர்களின் சிந்தனை

மனித உடம்பில் 72 ஆயிரம் நாடி நரம்புகள் இருப்பதாக சித்தர்கள் சொல்கிறார்கள்.

இதில் முக்கியமானவை 24 நாடி நரம்புகளாம். இந்த 24 நாடி நரம்புகளும் மற்ற நரம்புகள் போலல்லாமல் உறக்கத்திலேயே இருக்கிறதாம்.

இவற்றில் 10 நாடிகள் மேல் நோக்கியும் 10 நாடிகள் கீழ் நோக்கியும் இருக்கும். எஞ்சிய 4 நாடிகளும் இரு பக்கமும் இரண்டாக பிரிந்து போய் பாம்பு போன்று சுற்றி வளைத்துக் கொண்டிருக்கிறதாம்.

இத்தகைய நாடி நரம்புகளில்தான் உயிரின் ஜீவ ஆற்றல் அறிதுயில் செய்கிறதாம்.

இந்த 24 நாடிகளிலும் 10 நாடிகள் மிகவும் முக்கியம். அந்த 10 நாடிகளிலும் 3 நாடிகள் மிகமிக முக்கியம்.

இந்த 3 நாடிகளுக்குள்தான் அந்த இரகசியமான உறக்கம் பொதிந்து கிடக்கிறதாம். இவை நம் உயிரை உடம்புடன் இணைத்துக் கொண்டு இயங்குகிறதாம்.

இந்த நாடிகளின் 3 வாயுக்களுக்கும் 3 பெயர் உண்டு. இடகலை, பிங்கலை, சுழுமுனை.

சந்திரன் – சூரியன் – அக்கினி என்றும் இதைச் சொல்வதுண்டு.

இடது நாசியில் இழைகிற மூச்சு இடகலை.

வலது நாசியில் இயங்கும் மூச்சு பிங்கலை.

சுழுமுனை என்பது இரண்டு நாசியிலும் வந்து போய் இயங்கும் சுவாசம்.

இந்த 3 மூச்சுக்களின் இயக்கத்தைப் பற்றி நம் சித்தர் கள் சொல்லியிருக்கும் இரகசியத்தையெல்லாம் வெளிநாட்டவர்கள் ஆராய்ச்சி செய்கிறார்கள்.

சிறிது காலத்துக்கு முன் லெனின் கிராட் பல்கலைக் கழகத்திலிருந்து டாக்டர் மெஸ்ஸிங் என்று ஒருத்தர் இந்தியாவுக்கு வந்தாராம்.

விஞ்ஞானப் பேராசிரியரான அவர் இமயமலைச் சாரலில் வந்து சிறிது காலம் தங்கினாராம். அங்குள்ள சில யோகிகளிடம் பழகினாராம். Self induced cataleptic state என்ற மூச்சு வித்தையைப் பற்றி தெரிந்து கொண்டு போனாராம். அவர் என்ன சொல்கிறார் தெரியுமா?

“இந்தியாவில் இருக்கும் சித்தர்கள் பல வாரங்கள் மூச்சுவிடாமல் – மரக்கட்டை மாதிரி – உயிர் இருந்தும் இல்லாதது போன்று – ஒரு யோக சமாதி நிலையில் இருக்கிறார்கள். என்னால் இப்பொழுது 3 நாட்கள் வரைக்கும் அப்படி இருக்க முடிகிறது. அதற்கு மேலேயும் அது மாதிரி இருப்பதற்கு ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறேன்” என்று சொன்னாராம்.

இந்த 3 மூச்சுக்களைப் பற்றி சித்தர்களின் நூலில் இன்னும் சில இரகசியம் இருக்கிறதாம்.

வளர்பிறை முதல் 3 நாட்கள் – அதாவது அமாவாசை கழித்து மறுநாளிலிருந்து 3 நாட்கள் – காலையில் எந்தநாசி எப்படி இயங்கும் என்ற கணக்கை கண்டுபிடி த்து சொல்லியிருக்கிறார்களாம்.

நான்காம் நாளிலிருந்து 6 ஆம் நாள் முடிய இது மாறும். அதன் பின் 7 ஆம் நாளிலிருந்து முதல் 3 நாட் கள் மாதிரி மறுபடியும் இயங்கும். இப்படியே மும் மூன்று நாட்களுக்கு இந்த இடகலையும் பிங்கலையும் மாறி மாறி ஒரு சட்டதிட்டத்தின்படி வேலை செய்கிறது.

இப்படி இருந்தால் அந்த உடம்பு ஆரோக்கியமாக இருக்கிறது என்று அர்த்தம்.

இந்த இரண்டும் தவிர சுழுமுனை என்ற மூன்றாவது மூச்சு எப்படி இயங்குகிறது என்பதற்கும் ஒரு வாய்ப்பாடு இருக்கிறது. அதெல்லாம் இருக்கட்டும். காலையில் எழுந்ததும் மூச்சு எந்த நாசியில் எப்படி இழைகிறது என்பதை வைத்து சில விடயங்களை புரிந்து கொள்ள முடியுமாம்.

இப்பொழுது உதாரணத்துக்கு ஒருநாள் இரவு முழு வதும் ஒரு நாசியில் மூச்சு ஓடிக்கொண்டிருந்தால் அந்த உடம்புக்கு 3 வருடத்துக்கு மேல் உயிராற்றல் இல்லை என்று முடிவு செய்து கொள்ளலாமாம்.

இரவு முழுவதும் இடகலையும் – பகல் முழுவதும் பிங்கலையும் மாறாமல் நடந்து கொண்டிருந்தால் அந்த மனி தன் 6 மாதத்தில் மரணத்தை நெருங்குகிறான் என்று அர்த்தம்.

ஆகாயத்திலுள்ள நட்சத்திரம் பார்வைக்கு தெரியா விட்டால் ஐந்து நாட்களில் மரணமாம். மூக்கு நுனி தெரியவில்லை என்றால் 3 நாட்களில் முடிவாம் இப்படியெல்லாம் சொல்லுதாம் சித்தர் இலக்கியம்.

நாமெல்லாம் இதை முடிந்தளவுக்கு புரிந்து கொண்டால் நீண்ட நாட்களுக்கு ஆரோக்கியமாக இருக்க முடியுமாம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வாக்களித்தல், வாக்கு எண்ணுவதில் புதிய யோசனைகள் முன்வைப்பு

தேர்தலை எதிர்காலத்தில் வினைதிறன் மிக்கதாக நடத்தும் வகையில் வாக்களித்தல் மற்றும் வாக்கு எண்ணும் முறைகளில் பல புதிய யோசனைகளை தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரிய முன்வைத்துள்ளார்.

இந்த யோசனைகள் குறித்து அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடியதன் பின்னரே இவற்றை நடைமுறைப்படுத்துவது குறித்து இறுதி தீர்மானத்துக்கு வரவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவற்றுக்கு மேலதிகமாக தேர்தல் தொடர்பில் உள்வாங்கப்பட வேண்டிய புதிய கருத்துகள், யோசனைகள் மற்றும் தேர்தல்கள் திணைக்களத்தின் குறைபாடுகள் என்பவற்றை பொதுமக்களிடமிருந்து எழுத்து மூலமாக வரவேற்பதாகவும் கூறினார்.

தேர்தல்கள் ஆணையாளர் நேற்றுமுன்தினம் காலை செய்தியாளர்களுடனான சந்திப்பின் போதே புதிய யோசனைகள் குறித்து தனது கருத்துகளைப் பகிர்ந்துகொண்டார்.

அவையாவன ;

பாரிய மாவட்டம் தொகுதி வாரியாக பிரிக்கப்படல்; அசம்பாவிதங்களை தவிர்க்கும் வகையில் வாக்காளர் ஒரு வேட்பாளருக்கு மாத்திரமே வாக்களிக்கும் முறைமை; மனிதர்களால் ஏற்படக்கூடிய அநாவசிய பிழைகளைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில் வாக்கு எண்ணும் நிலையங்களின் எண்ணிக்கையினை அதிகரித்தல்; வாக்கு எண்ணுதலை இலகுபடுத்தல் மற்றும் நேர விரயத்தை தவிர்க்கும் வகையில் வாக்குச் சீட்டின் நீளத்தைக் குறைத்தல்; வாக்கு எண் ணும நிலையத்திற்கு தற்போது போட்டியிடும் அரசியல் கட்சி மற் றும சுயேட்சைக் குழு வொன்றின் சார்பில் ஒரு பிரதிநிதி மட்டுமே அனுமதிக்கப்படுகின்றார்.

இதற்கு மேலதிகமாக ஒவ்வொரு வேட்பாளர் சார்பிலும் ஒரு பிரதிநி தியை அவர்களது மடிக் கணனியுடன் அனுமதிப்பதன் மூலம் தாமாகவே தமது வேட்பாளரின் விருப்பு வாக்குகளை கணக் கிட்டுக் கொள்ளக் கூடிய தாகவிருக்கும்.

தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு மேலதிகமாக, வாக்கு எண்ணும் நிலையத்திற்குள் தேர் தல் மற்றும் அரசியலுடன் எவ் வகையிலும் தொடர்புபடாத தொழில் சார் அதிகாரிகளை விசேட கண் காணிப்பாளர்களாக நியமித்தல், இதற்காக வைத்தியர்கள், பொறியியலாளர்கள், தாதியர்கள்மற்றும்ஊடக வியலாளர்களைத தெரிவு செய்தல். பிளாஸ்டிக் பெட்டி இலகுவில் வெடித்துவிடக் கூடிய அபாயமுடை யதால், குறைந்த விலையில்இலங்கைக்கே உரிய பாணியில் உள்ளூ ரிலேயே மரத்தாலான தரமான வாக்குப் பெட்டிகளை தயாரிதல் ஆகியவையாகும். (அ-2)

# தவிசாளர்கள் வீடு மீதான தாக்குதல் கோழைத்தனமானவர்களின் வேலை

## வடக்கு மாகாண உறுப்பினர் சிவாஜிலிங்கம்

வடமராட்சியில் நேற்று அதிகாலை தமிழ்தேசியக் கூட்டமைப்பின் கரவெட்டி பிரதேச சபைத் தவிசாளர் பொ.வியாகேசு மற்றும் வல்வெட்டித்துறை நகரசபையின் உப தவிசாளர் க.சதீஸ் ஆகியோரின் வீடுகளில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வடமாகாண சபை உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் பொ. வியாகேசின் வீட்டின் மீதும் வாகனத்தின் மீதும் இனந்தெரியாத நபர்களால் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேபோன்று வல்வெட்டித்துறை நகரசபையின் உப தவிசாளரின் வீட்டின் மீதும் அன்றையதினம் கற்களை வீசி இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.இத் தாக்குதல்கள் அரச படைகளினால் திட்டமிட்டு நடத்தப்பட்டு வருகின்றன.

குடாநாட்டில் எமது மக்களை தொடர்ந்தும் அடக்கி ஒடுக்கி அச்சுறுத்தி வைத்திருப்பதே இராணுவத்தின் முக்கிய நோக்கமாகவுள்ளது.சட்டத்தை மதிக்காத கோழைகளே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதாக தான் உணர்வதாகவும் இது தொடர்பில் இதுவரையில் எவரும் கைது செய்யப்படவில்லையெனவும் அவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-9-24)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 30 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 60 | 120 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 65 | 80 | 80 | 100 |
| தக்காளி | 40 | 40 | 60 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 40 | 40 |
| கோவா | 25 | 30 | 40 | 50 |
| கரட் | 40 | 40 | 70 | 70 |
| பூசணி | 20 | 30 | 40 | 50 |
| புடோல் | 20 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 45 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 190 | 210 | 200 |
| பெரிய வெங்காயம் | 160 | 170 | 190 | 200 |
| பாகற்காய் | 60 | 80 | 70 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 20 | 30 | 50 |
| கருணைக் கிழங்கு | 30 | 30 | 40 | 60 |
| பயற்றங்காய் | 30 | 40 | 40 | 50 |
| லீக்ஸ் | 60 | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 20 | 30 | 30 | 60 |
| கறிமிளகாய் | 100 | 60 | 90 | 120 |
| முருங்கைக்காய் | 50 | 50 | 80 | 80 |
| போஞ்சி | - | 100 | 100 | 120 |
| கீரை – 1 பிடி | 10 | 15 | 20 | 25 |
| தேசிக்காய் | 100 | 120 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 25 - 50 | 50 | 40 | 35-45 |

# இராசி பலன்

27.11.2013
(கார்த்திகை 10, புதன் கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
நவமி முற்பகல் 11.25 மணிவரை
பூரம் காலை 7.22 மணிவரை
இராகுகாலம் 12.12-1.42 மணிவரை
சுபநேரம் 4.42-6.12 மணிவரை
மெய்ப்பொருளாளர் குருபூசை

**மேடம்** மனமகிழ்ச்சியோடு செயற்படும் நாள், பிள்ளைகளின் தேவையறிந்து செயற்படுவீர்கள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், இறைசிந்தனை மேலோங்கும் நாள்.

**இடபம்** மனமகிழ்ச்சியோடு செயற்படும் நாள், பிள்ளைகளின் தேவையறிந்து செயற்படுவீர்கள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்,இறை சிந்தனை மேலோங்கும் நாள்.

**மிதுனம்** நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், யோசிக்காமல் செய்த காரியங்களில்கூடவெற்றி கிடைக்கலாம், பயணங்களால் பலனுண்டு, கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** குடும்பத்தினரின் தேவையைப் பூர்த்தி செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், காலையில் தடைப்பட்ட காரியங்கள் மாலையில் கைகூடும்.

**சிங்கம்** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், புதிய திட்டங்கள் கைகூடும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி** விரும்பிய உணவுப் பொருட்களை சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**துலாம்** புகழ் மிக்கவர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, செலவுகள் அதிகரித்தாலும் அதற்காக கவலைப்பட மாட்டீர்கள், தொழில் நலன்கருதிய பயணமொன்று ஏற்படலாம்.

**விருச்சிகம்** பெரிய மனிதர்களின் உதவிகள், ஒத்தாசைகள் என்பன கிடைக்கலாம், தேவைகள் பூர்த்தியாகும், பயணங்களால் பலனுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**தனுசு** உற்றார், உறவினர் உங்களின் முன்னேற்றமகண் ஆச்சரியப்படுவீர்கள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், எதிலும் அதிக பிரயர்சை காட்டுவீர்கள்.

**மகரம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்,சந்தித்தவர்களால் சந்தோசங்கள் கூடும், தவறவிட்ட பொருளொன்று மீண்டும் கைக்கு கிடைக்கலாம்.

**கும்பம்** காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்புமாக அமையலாம், தொழிலில் கூட்டாளிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, நல்லவர் என நினைத்த ஒருவரும் உங்களுக்கு விரோதமாக செயற்படலாம்.

**மீனம்** இனசன வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், நீண்ட நாளைய விருப்பங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, மாலையில் புதிய பொருட்களின் சேர்க்கையுண்டு.

வளவன்

# இவ்வாண்டுக்கான வரவு செலவுகளை சமர்ப்பியுங்கள்

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்குபிரதேச சபையின் இவ்வாண்டுக்கான வரவு செலவுகள் சமர்ப்பிக் கப்பட்டதன் பின்னர்தான் 2014 ஆம் ஆண் டிற்கான வரவு செலவுத் திட்ட விவாதத்துக்கு தாம் உடன்படப் போவதாக பிரதேச சபையின் உறுப்பினர்கள் ஏகமனதாக தீர்மானித்துள்ளனர்.


கரவெட்டி பிரதேச சபையின் மாதாந்த கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்ற போதே, சபை உறுப்பினர்களினால் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டின் வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படையில் வேலைத்திட்டங்களுக்காக பிரதேச சபையிலுள்ள 18 உறுப்பினர்களுக்கும் தலா 2 இலட்சம் ரூபா வீதம் 36 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆயினும், பிரதேச சபையினால் குறித்த 36 இலட்சம் ரூபா நிதிக்கான வேலைத் திட்டங்கள் நிறைவேற்றுவது தொடர்பில் 10 மாதங்கள் கடந்த நிலையிலும் இதுவரை எதுவும் தீர்மானிக் கப்படவில்லை.

இந்நிலையில் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட விவாதம் தற்போது மேற்கொள் ளப்படுவதை சபை உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

எனவேதான் இவ்வாண்டின் வரவு செலவு களை சமர்ப்பித்து விட்டு 2014 ஆம் ஆண்டுக் கான வரவு செலவுத்திட்ட விவாதத்தை ஆரம் பிக்க வேண்டுமென சபை உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர். (அ-9-60)




நன்றி மிரர்

# வடக்கு அமைச்சுக்களுக்கு செயலாளர்கள் நியமனம்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சு ஆகிய வற்றுக்கு புதிய செயலாளர்களை வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி நியமித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஆளுநர் அலுவலகத்தில்நடைபெற்றஆளணி மீளாய்வு கூட்டத்தி லேயே இந் நியமனங்கள் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாண முதலமைச் சரின் செயலாளராக திருவாகரன் நியமிக்கப் பட்டுள்ளார். அத்துடன் வடக்குமாகாண முதலமைச் சரின் செயலாளராகவிருந்த ஆர். வரதீஸ்வரன் வடக்கு மாகாண மீன் பிடி அமைச்சர் டெனிஸ் வரனின் செயலா ளராக நியமிக்கப்பட்டுள் ளார். (அ)

# தவிசாளர்களின் வீடுகளின்மீது இனம்தெரியாதோர் தாக்குதல்



(கரவெட்டி)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை யின் தவிசாளர் பொ.வியாகேசின் வீடு மற்றும் ஹயஸ் வாகனம் என்பன இனந்தெரியா தோரால் அடித்து நொருக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை அதிகாலை 3.30 மணியள வில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதா வது,

உடுப்பிட்டிச் சந்திக்கு அருகாமையிலுள்ள தவிசாளரின் வீட்டினுள் புகுந்த இனந் தெரியாத கும்பலொன்று வீட்டின் கண்ணாடிகளையும் ஹயஸ் வாகனத்தின் அனைத்து கண்ணாடி களையும் அடித்து நொருக்கி சேதமாக்கி விட்டுச் சென்றுள்ளது.

இக் கும்பல் மோட்டார் சைக்கிள்களிலும் வாகனம் ஒன்றிலும் வந்து இறங்கியே தாக்கு தலை மேற்கொண்டுள்ளது.

அச்சமயம் வீட்டினுள் தவிசாளரும் மனை வியும் இருந்த போதிலும் அச்சம் காரணமாக அவர்கள் வெளியில் வரவில்லை.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற மாதாந்த கூட்டத்தில் மாவீரர்களுக்கு சுடரேற்றி அகவணக்கம் செலுத்தப்பட்டதையடுத்து, சபையின் தவிசாளர் அன்றைய தினம் மாலை 6 மணி வரை பொலிஸாராலும் இராணுவத்தி னராலும் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தார்.

தாக்குதல் சம்பவத்தை வடமாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத் தில் இத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை வல்வெட்டித்துறை நகர சபையின் உப தவிசாளர் க.சதீசின் வீட்டில் இனந் தெரியாதோர் கற்களை வீசி தாக்குதல் நடத் தியுள்ளனர். இச்சம்பவம் நேற்று அதிகாலை 4 மணிக்கு இடம்பெற்றது. மோட்டார் சைக் கிள்களிலும் வாகனத்திலும் வந்த இனந் தெரியாத கும்பல் வல்வெட்டித்துறை கொம் மாந்தறையிலுள்ள உபதவிசாளரின் வீட்டிற்கு வெளியே நின்று பாரிய கற்களை வீசி தாக்கு தல் நடத்தியுள்ளனர். வீட்டின் சீற், கூரை சேதமாக்கப்பட்டுள்ளது. வல்வெட்டித்துறை நகரசபையின் மாதாந்தக் கூட்டம் இன்று நடைபெறவிருந்த வேளையில் இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது. (அ-9-60-24)

# 2012/2013 இற்கான வரித் திரட்டுக்களை விரைவாக சமர்ப்பிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வருமான வரி செலுத்துவோர் வரி மதிப்பீட் டாண்டான 2012/2013 ஆம் ஆண்டுக்கான வருமான வரி விபரத்திரட்டுக்களை எதிர்வரும் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய வரி கொடுப்பனவுக்கான பணம் செலுத்தும் படிவத்துடன் உள்நாட்டு இறைவரித் திணைக் களத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென உள்நாட்டு இறைவரித் திணைக்கள யாழ்.பிராந்திய பிரதி ஆணையாளர் பா.சிவாஜி அறிவித்துள்ளார்.

2006 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 106 (1) ஆம் பிரிவின் கீழ் இறைவரித் திணைக்களத்தின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் வருமான வரிக் கோவைகளை வைத்திருப்போர் யாழ். பிராந்திய அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இச்சட்டத்தின்படி வரி மதிப்பாண் டுக்கான வரிக் கொடுப்பனவுகளை கடந்த செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும் என்று வருமான வரி செலுத்துவோருக்கு ஏற்கனவே அறிவிக்கப் பட்டிருந்தது.

இதுவரை வரியை செலுத்தாதவர்கள் அதனை உரிய முறையில் இலங்கை வங்கியில் செலுத்தி வரி விபரத்திரட்டுடன் சமர்ப்பிக்க வேண்டும். இந்தசட்டத்தின்படிவியாபாரம்அல்லது வர்த்தக இலாபங்கள் மற்றும் வருமானங் களை வெளிப்படுத்துவோர் வரி விபரத்திரட்டு டன் தமது நிதி ஆண்டுக்கான இறுதிக் கணக்கு கூற்றையும் இணைக்க வேண்டும். இது தொடர் பில் பிரச்சினைகள் ஏதும் இருக்குமாயின் பிரதி ஆணையாளருடன் கலந்து ஆலோசிக் கலாம்.

மேற்படி வரி மதிப்பாண்டுக்கான வருமான வரிக்கு பொறுப்புடையவர்களாக இருந்தும் இதுவரை வரிக் கோவைகள் வைத்திருக்காத வர்களும் தாமாக முன் வந்து வரிக் கோவை களைத் திறந்து உரிய வரிகளை செலுத்தி வரி விபரத் திரட்டுக்களை குறித்த திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கலாம். புதிதாக வரி செலுத்த முன் வரு வோரின் கடந்த கால வருமான விபரங்களை பற்றி எதுவும் கோரப்படமாட்டாது.

வரியை செலுத்தாமல் அன்றி வரி விபரத் திரட்டை சமர்ப்பிக்காமலோ தட்டிக் கழிக்கப்படும் இடத்து தண்டப்பணம் அறவிடுவதற்கான ஏற்பாடுகளும் உள்நாட்டு இறைவரிச்சட்டத்தில் இடமுண்டு.

யாழ்.பிராந்திய அலுவலகம் அமைந்துள்ள வீரசிங்கம் மண்டபத்தின் கீழ் மாடித்தளத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 8.30 தொடக்கம் மாலை 5 வரை வருமான வரி திரட்டுக்களை சமர்ப்பிப்பதற்குரிய விசேட கரும பீடமொன்றை அமைப்பதற்கான ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே உரிய வேளையில் வரிக் கொடுப் பனவுடன் வரி விபரத்திரட்டையும் சமர்ப்பித்து தண்டப்பணம் செலுத்துவதிலிருந்து தவிர்த்துக் கொள்ளுமாறு பிரதி ஆணையாளர் கேட்டுள் ளார். (அ)






யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தமிழ்ச் சங்கம் நடத்திய தமிழ்மொழித்தின விழா கடந்த 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கல்லூரியின் குமார சுவாமி மண்டபத்தில் இடம்பெற்றது. கல்லூரியின் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் அ.திருமருகன் தலைமையிலும் கல்லூரியின் அதிபர் வீ.கணேசராசாவின் முன்னிலையிலும் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண விவசாய, கமநலசேவைகள், விலங்குவேளாண்மை, நீர்ப்பாசனம், சுற்றுச்சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டார். இந் நிகழ்ச்சியின் போது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)

# வெங்காய விதை உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்படும் அபாயம்

எதிர்காலத்தில் வெங்காய விதை உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தேசிய விதை நடுகை பொருட்களின் அபிவிருத்தி நிலையம் தெரிவித்துள்ளது.

தேசிய சந்தையில் உள்நாட்டு பெரிய வெங்காயத்தின் விலை அதிகரித்தமையே இதற்கு காரணம் என நிலையத்தின் மேலதிக பணிப்பாளர் எஸ்.சீ.வணிகசூரிய கூறுயுள்ளார்.

பெரிய வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளமையால் விவசாயிகள் தமது அனைத்து அறுவடைகளையும் விற்பனை செய்வதற்கு தயாராகியுள்ளதாக தேசிய விதை நடுகை பொருட்களின் அபிவிருத்தி நிலையம் சுட்டிக்காட்டுகின்றது.

இதனால் குறுகிய கால பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் எனவும், அடுத்த போகத்திற்கு வெங்காய விதைகளை வைத்துக் கொள்ளுமாறு நிறுவனத்தின் மேலதிக பணிப்பாளர் விவசாயிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையில் விதை உற்பத்தியை மேம்படுத்தும் நடவடிக்கைகளை விவசாய அமைச்சு மற்றும் விவசாயத் திணைக்களம் ஆகியன முன்னெடுத்துள்ளதாக அவர் கூறினார். தற்போது சந்தையில் வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளமையால், அடுத்த போகத்தின்போது வெங்காயத்திற்கு அதிக கேள்வி நிலவும் எனவும் எதிர்பார்ப்பதாக வணிகசூரிய மேலும் தெரிவித்தார். (அ-2)


## காணி விற்பனைக்குண்டு

திருநெல்வேலி சந்தைக்கு அருகாமையில் 2 பரப்பு காணி உடன் விற்பனைக் குண்டு.

(4590) ***தொடர்புகளுக்கு 0773170038***



## கிளி/ முருகானந்தா கல்லூரி- ஆசிரியர் விபரம் கோரல்

கிளி/ முருகானந்தா கல்லூரியின் பவளவிழா 2014 ஆம் ஆண்டு கொண்டாடப்படவுள்ளது. இந்நிகழ்வில் எமது கல்லூரியில் கல்வி கற்பித்து ஓய்வு பெற்ற, இடமாற்றம் பெற்று வேறு பாடசாலைகளில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் ஆசிரியர்களை கௌரவிக்க எண்ணியுள்ளோம். எனவே ஓய்வு பெற்ற, இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள் தங்கள் விபரங்களை தபால் மூலமோ அல்லது tvarathan 66 @gmail.com, kn.muruganadacollege@gamil.com எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டு நிற்கிறோம்.

அதிபர்
கிளி/முருகானந்தா கல்லூரி


# லலித், குகன் காணாமற்போன வழக்கு 2014 பெப்ரவரி மாதத்திற்கு ஒத்திவைப்பு





(யாழ்ப்பாணம்)

கடந்த 2010 ஆம் ஆண்டு மனிதவுரிமைகள் தினத்திற்கு முன்பாக காணாமற் போன மக்கள் போராட்ட இயக்கத்தின் உறுப்பினர்களான லலித், குகன் ஆகியோரது வழக்கு விசாரணை அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எம்.ரி.வி.குழுமத்தின் பணிப்பாளர் கந்தவேள் மயூரனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையையடுத்தே குறித்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மக்கள் போராட்ட இயக்கத்தின் உறுப்பினர்களான லலித், குகன் ஆகியோர் கடந்த 2010 ஆம் ஆண்டு உலக மனித உரிமைகள் தினத்தில் காணாமற் போனோரை மீட்கக் கோரி ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது ஆவரங்கால் பகுதியிலிருந்து இவர்கள் காணாமற் போயிருந்தனர்.

இக் காணாமற் போன சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் கொழும்பு நீதிமன்றில் நடைபெற்ற நிலையில் சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கை யொன்றை சமர்ப்பிக்குமாறு யாழ். நீதிமன்றுக்கு கொழும்பு நீதிமன்றம் பணித்திருந்தது.

இந்நிலையில் குறித்த வழக்கு யாழ். நீதிமன்றில் நீதவான் பெ. சிவகுமார் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக் வெலவினால் எம்.ரி.வி. நிறுவனத்திற்கு லலித், குகன் காணாமற் போகவில்லை என்ற பேட்டி தொடர்பான விசாரணை எம்.ரி.வி. நிறுவனத்தின் பணிப்பாளரிடம் நேற்றைய தினம் மேற்கொள்ளப்பட்டது. இவ்விசாரணை முடிவுற்றதும் குறித்த வழக்கு அடுத்த வருடம் பெப்ரவரி 12 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (அ-4-6)


## பிள்ளையார் இன்

தினமும் நிறைவான மதிய உணவு (புஃவே) 11.30 மணி தொடக்கம் 3.00 மணிவரை

- சைவ உணவு -150/= மட்டுமே
- அசைவ (கோழி) உணவு 180/= மட்டுமே

தொடர்புகளுக்கு:- இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 2829

(க/5541)



## சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பதிவு இல:- J/ 1594 பதிவுத் திகதி - 11.03.1972

பதவி வெற்றிட விண்ணப்பம் கோரல்

| | | |
|---|---|---|
| 01. | பதவி | - களஞ்சிய முகாமையாளர் (03) |
| | குறியீட்டு இல. | -208/14 |
| | சம்பள அளவுத் திட்டம் | -9700-80X10-85X10-11350 |
| | வயதெல்லை | -18-45 வரை |
| | பால் | -ஆண் |

**தகைமைகள்:-**

1.கூட்டுறவுப் பணியாளர் 15வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணிப்பாளர் 16வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவி யொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

2. கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த. (சாதாரண தரம்) கணிதம் அல்லது வர்த்தக, எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தி.

குறிப்பு:-

1. சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.
2. சங்கங்களில் கடமையாற்றுவோர் சங்கத்தினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.
3. சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவங்களை மாத்திரம் பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் சங்க காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் கட்டணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
4. பிறப்புச் சான்றிதழ், நற்சான்றிதழ், கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், தொழிற் தகைமைச் சான்றிதழ்கள் என்பவற்றின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.
5. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கு அமைவாக நிர்வாகத்தால் விதிக்கப்படும் ரொக்கப் பிணையும் ஆதனப்பிணையும் செலுத்துதல் வேண்டும்.

நெறியாளர் குழுவின் ஆணைப்படி
கூட்டுறவுச் சேவையிலுள்ள
கி.பூபாலசிங்கம்
தலைவர்

விண்ணப்பங்களை ***"தலைவர், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். டச்சு வீதி, சாவகச்சேரி"*** எனும் முகவரிக்கு விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக நேரடியாகவோ/பதிவுத் தபாலிலோ அனுப்பி வைத்தல் வேண்டும். உரிய காலத்திற்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி:- 20.12.2013**



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து (V)<br>நட்சத்திரம்: விசாகம் 2<br>கி.பா: 23 செவ் 8 ல<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: MSc / Engineer (UK - PR)<br>தொ.இ: B/280 | பிறப்பு: 1975 இந்து (Kurumar)<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 24 செவ் 8 ல்உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA / ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/1242 |
| பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 4<br>கி.பா: 17உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BBA, MSc / Store Manager (UK - Not PR)<br>தொ.இ: B/281 | பிறப்பு: 1985 இந்து (V)<br>நட்சத்திரம்: அனுசம் 4<br>கி.பா: 16 ½ சூரி செவ் 11 ல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc / Demoster<br>எதிர்பார்ப்பு: விவாகரத்து வெற்றவரும் ஏற்றுக்கொள்ளப்படும்.<br>தொ.இ: G/1249 |
| பிறப்பு: 1969 இந்து (V)<br>நட்சத்திரம்: சித்திரை 2<br>கி.பா: 30 செவ் 7 ல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: கணக்கியல் டிப்ளோமா / வங்கி (கனடா PR)<br>தொ.இ: B/285 | பிறப்பு: 1979 இந்து (V)<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: 43 ¼ உயரம்: 5'<br>தகைமை/தொழில்: AB / ஆசிரியர்<br>தொ.இ: G/1250 |
| பிறப்பு: 1978 கிறீஸ்தவம் (Pa)<br>நட்சத்திரம்: உத்தராடம் 2கி.பா: 14 சூரி செவ் 5 ல்உயரம்: 5'தகைமை/தொழில்: BA /விரிவுரையாளர்<br>தொ.இ: B/286 | பிறப்பு: 1985 இந்து (V)<br>நட்சத்திரம்: அத்தம் 2<br>கி.பா: 54 ¼உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSc Agri / Field Officer<br>தொ.இ: G/1255 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

# நாட்டின் அதிக வரட்சி காரணமாக தேங்காய் உற்பத்தியில் வீழ்ச்சி

இலங்கையில் கடந்த ஆண்டில் நிலவிய வறட்சி காரணமாகவும் தேங்காய் பொருட்களின் ஏற்றுமதிக்கான கேள்வி அதிகரித்துள்ளதாலுமே தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக இலங்கை தென்னை ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

தென்னை உற்பத்தி மாவட்டங்களில் கடந்த ஆண்டில் 8 மாதங்களாக நிலவிய வறட்சி காரணமாக தேங்காய் உற்பத்தி குறைந்தது என்பதைவிட உற்பத்தியான தேங்காய்களின் அளவு வெகுவாக சிறுத்துமுள்ளது.

இதனால் ஒரு தொன் கொப்பரைத் தேங்காய் உற்பத்திக்கு தேவையான தேங்காய்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது என்றார் ஜயந்த குணதிலக்க.

இலங்கையில் ஆண்டுக்கு 2 ஆயிரத்து 700 மில்லியனாக உள்ள தேங்காய் உற்பத்தியை 2016ஆம் ஆண்டாகும்போது 3ஆயிரத்து 650 மில்லியனாக அதிகரிக்கும் இலக்கில் கடந்த சில ஆண்டுகளாக அரசாங்கம் வேலைத் திட்டங்களை முன்னெடுத்தது.

ஆனால்முன்னதாகவேஇருந்ததைவிடவும் 300 மில்லியன் அளவுக்கு தேங்காய் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளதாக தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் ஜயந்த குணதிலக்க தெரிவித்தார்.

எனினும், அண்மைய காலங்களில் நாட்டின் பல பாகங்களிலும் 6 முதல் 7 மில்லியன் அளவுக்கு புதிய தென்னம்பிள்ளைகள் நடப்பட்டுள்ளதால்இன்னும்4 ஆண்டுகளில் அதன் பலாபலன்களை எதிர்பார்க்க முடியும் என்றும் அவர் கூறினார்.

2016ஆம் ஆண்டுக்குள் 3ஆயிரத்து 650 மில்லியனாக தேங்காய் உற்பத்தியை அதிகரிக்க அரசு திட்டங்களை வகுத்துள்ளது

குறைந்த மழைவீழ்ச்சி, அதிகரித்த வெப்பநிலை காரணமாக பாதிக்கப்பட்ட தேங்காய் உற்பத்தி அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதமளவில் முன்னேற்றமடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் தென்னை ஆராய்ச்சி நிலையம் கூறுகிறது.

பாரம்பரியமாக தென்னை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுவந்த முக்கோண வலயமான புத்தளம், குருநாகல், கம்பஹா ஆகிய மாவட்டங்களில் வேறு அபிவிருத்தி செயற்றிட்டங்கள் காரணமாக தென்னைப் பயிர்ச்செய்கைக்கான நிலப்பரப்பு குறுகிவிட்டதெனவும் அரசாங்கம் தற்போது வடக்கு கிழக்கு பிர தேசங்களிலும் தென்னைப் பயிர்ச் செய்கையை விஸ்தரிக்கும் வேலைத் திட்டங்களில் இறங்கியுள்ளதாகவும டாக்டர் ஜயந்த குணதிலக்க தெரிவித்தார்.

“இலங்கையில் 70 வீத தேங்காய் பாவனை உணவுக்கானது, மிகுதி 30 வீதம் தான் தொழிற்துறை தேவைக்கானது. உள்நாட்டு தேங்காய் எண்ணெய் உற்பத்திக்காகவும் ஏற்றுமதிக்கான துருவிய தேங்காய், தேங்காய்ப் பால்மா போன்ற தயாரிப்புகளுக்காகவும் தான் இந்த 30 வீத தேங்காய்கள் தேவைப்படுகின்றன என்றார் அவர்.

வெளிநாட்டிலிருந்து வரும் பாம் எண்ணெய் இறக்குமதியை குறைக்கவும்உள்நாட்டுதேங்காய்எண்ணெய விலையை மக்களுக்கு வசதியான அளவுக்கு வைத்திருக்கவுமே கொப்பரைத் தேங்காய்களை இறக்குமதி செய்யும் திட்டத்தை அமைச்சு முன்வைத்திருப்பதாகவும் இலங்கை தென்னை ஆராய்ச்சி நிறுவனம் கூறியது.

முன்னதாக, சுமார் 30ஆயிரம் மெட்ரிக் தொன் கொப்பரைத் தேங்காய்களை இறக்குமதி செய்வதற்கு வரிச்சலுகைகளை கோரி அமைச்சரவை பத்திரத்தை தென்னை அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஷ்பகுமார முன்வைத்துள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சிரோசிஸ் நோயினால் 5,573 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

மதுபாவனை மூலம் ஏற்படும் ஈரல்கரையும்நோயினால்(சிரோசிஸ்) கடந்த 5 வருட காலத்தில் 5ஆயிரத்து 573 பேர் இறந்துள்ளதாக பிரதி சுகாதார அமைச்சர் லலித் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த 5 வருட காலத்தில் சிரோசிஸ் நோயினால் 56ஆயிரத்து 348 பேர் பாதிக்கப்பட்டதோடு 37ஆயிரத்து 268 பேர் மனநோயினால் (சைகோசியா) பீடிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாய்மூல விடைக்காக புத்திக பத்திரண எம். பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மது பாவனையால் ஏற்பட்ட பாதிப்பு குறித்தும் இறந்தோர் தொகை தொடர்பாகவுமே பத்திரண கேள்வி எழுப்பியிருந்தார்.

அது தொடர்பில் பிரதி அமைச்சர் மேலும் கூறியதாவது,

மது பாவனையினால் ஈரல் சார்ந்த சிரோஸிஸ் நோயினால் 2005 இல் 15ஆயிரத்து 145 பேரும் 2006 இல் 11ஆயிரத்து 413 பேரும் 2008 இல் 10ஆயிரத்து 878 பேரும் 2009 இல் 9ஆயிரத்து 729 பேரும் 2010 இல் 9ஆயிரத்து 183 பேரும் பாதிக்கப்பட்டனர்.

மனநலம் சார் நோயினால் 2005 இல் 8 ஆயிரத்து 274 பேரும் 2006 இல் 7 ஆயிரத்து 481 பேரும் 2008 இல் 7 ஆயிரத்து 597 பேரும் 2009 இல் 6 ஆயிரத்து 424 பேரும் 2010 இல் 7 ஆயிரத்து 492 பேரும் பாதிக்கப்பட்டனர்.

சிரோஸிஸ் நோயினால் 2005 இல் ஆயிரத்து 497 பேரும் 2006 இல் ஆயிரத்து 32 பேரும் 2008 இல் ஆயிரத்து 82 பேரும் 2009 இல்989 பேரும்2010 இல்973 பேரும் இறந்துள்ளனர். மதுபோதையில் வாகனம் செலுத்துவதாலும் அநேகர் இறக்கின்றனர்.

மதுபாவனையினால் நோய் வாய்ப்படுபவர்களுக்கென சிகிச்சையளிக்க அதிக பணம் செலவிடப்படுகிறது. மது பாவனையினால் பக்கவாத நோய்க்கு இலக்கானவருக்காக 5ஆயிரத்து800 ரூபாவும இருதயம் சார்ந்த நோய்க்காக 9ஆயிரத்து100 ரூபாவும் செலவிடப்படுகிறது.

எதிர்காலத்தில் ஒவ்வொரு நோயாளிக்கும் அரசாங்கம் செலவிடும் தொகையை அறிவிக்க திட்டமிட்டுள்ளோம் என்றார்.(அ-2)

# அதிவேக நெடுஞ்சாலையில் தனியார் பேருந்து சேவை

கொழும்பு கட்டுநாயக்க அதிவேக வீதியில் தனியார் பேருந்து போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மேல் மாகாண போக்குவரத்து அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தற்போது கொழும்பில் இருந்து நீர்கொழும்பிற்கு 12 பேருந்துகள் சேவையில் ஈடுபடுவதாக மாகாண போக்குவரத்து அமைச்சர் உபாலி கொடிகார தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் மேலும சில பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பயணிகளின் வசதிகளைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மேல் மாகாண போக்குவரத்து அமைச்சர்உபாலி கொடிகார மேலும் கூறியுள்ளார். (அ-2)

# யுத்தத்தின் பின்னரான அபிவிருத்தி பற்றி கூட்டமைப்பு விளங்கிக்கொள்ள வேண்டும்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தின் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு புரியாமை வருத்தமளிப்பதாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டம் தொடர்பில் பாராளுமன்றில் நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வை புறக்கணித்திருந்ததாகத் தெரிவித்துள்ளார். எனினும், அமர்வுகள் வெற்றிகரமாக நிறைவடைந்தன.

பொதுநலவாய மாநாட்டின போது யுத்தத்தின் பின்னர் நாடு அடைந்துள்ள அபிவிருத்தியை பல நாடுகள் பாராட்டியுள்ளன. ஆயினும இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புரிந்து கொள்ளத் தவறியுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின்ஆட்சிக்காலத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஒன்பது வரவு செலவுத திட்டங்களும் தேசிய பொருளாதார இலக்கு ஒன்றை நோக்கி நகர்த்தும் வகையிலேயே அமைந்துள்ளன.

தேசிய அபிவிருத்தியை நிலைநாட்டும் நோக்கில் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. தற்போது நாட்டின் தாய், சேய் மரண எண்ணிக்கை வழ்ச்சியடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# த.போ.சேவையை கண்காணிக்க பேருந்து நிலையத்தில் கமரா

(கொழும்பு)

தனியார் போக்குவரத்து சேவை, தேசிய போக்குவரத்து ஆணைக் குழு பெஸ்த்தியன் மாவத்தை பேருந்து நிலையம் ஆகியவற்றை ஒரு பாதுகாப்பு கமரா முறையின் கீழ் கொண்டுவரவுள்ளதாக தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சு கூறியுள்ளது.

இதன்மூலம் புறக்கோட்டையிலுள்ள பேருந்து நிலையங்களை கண்காணிக்க முடியுமெனவும் இதனால் இந்த பேருந்து நிலையங்களில் காத்திருக்கும் பயணிகளுக்கு தொந்தரவு செய்வோரை கண்காணிக்க முடியுமெனவும் அமைச்சர் சி.பீ.ரத்னாயக்க கூறியுள்ளார்.

தனியார் பேருந்துகளில் பயண சீட்டுகளுக்கு பதிலாக முற்கொடுப்பனவு அட்டைகளை பயன்படுத்துமாறு தேசிய போக்குவரத்து ஆணைக் குழு ஒன்றரை வருடங்களுக்கு முன்னரே பணித்துள்ள போதிலும் அது நிறைவேற்றப்படவில்லை. இதை கட்டாயமாக்குவதற்கு தனியார் போக்குவரத்து சேவை அமைச்சர் ஒரு அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிக்கவுள்ளார் என அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார். (அ-2)

# கசினோவுக்கு எதிராக ஒன்றிணையுங்கள்

கசினோ சூதாட்ட மையங்களுக்கு எதிராக அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டுமென மாதுலுவே சோபித தேரர் தெரிவித்துள்ளார். நல்லொழுக்கமுடைய சமூகமொன்றை கட்டியெழுப்ப விரும்பும் அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து கசினோ சூதாட்ட மையங்களுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளதோடு கசினோ சூதாட்ட மையங்கள் சட்ட ரீதியாக அனுமதிக்கப்படுவதை எதிர்த்து போராட்டம் நடத்தப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க பல்வேறு சூதாட்டங்களுக்கு எதிராக போராடியவர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கசினோ சூதாட்டமையங்களினால்இளைய தலைமுறையினர் பெரிதும் பாதிக்கப்படுவரே என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பயணிகள் காசோலை வழங்கும் நடவடிக்கை உடன் நிறுத்தம்

பயணிகள் காசோலை வழங்கும் நடவடிக்கை உடனுக்கு அமுல்வரும் வகையில் நிறுத்தப்பட்டுள்ளது என இலங்கை வங்கிகள் சங்கம் தெரிவித்தது.

மத்திய வங்கியில் நடைபெற்ற கூட்டத்தில் பயணிகள் காசோலைகளை வழங்குவதை நிறுத்திவிட சகல வங்கிகளும் உடன்பட்டதாக இலங்கை வங்கிகள் சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார்.

இன்று பயணிகள் காசோலைகளை பயன்படுத்துவதற்கான விருப்பம் வெகுவாக குறைந்துள்ளது. அநேகமான பயணிகள் கடன் அட்டைகள் அல்லது செலவு அட்டைகளை அல்லது பணத்தை எடுத்து செல்லவே விரும்புகின்றனர்“ எனவும் அவர் கூறினார்.

இந்த தீர்மானம் பற்றி பொதுமக்களுக்கு அறிவிக்கும் பொறுப்பை மத்திய வங்கி ஏற்றுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)



கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையம் மற்றும் குமரன் விளையாட்டுக்கழகத்தின் பொன்விழாவும் அற்புத பொன் மலர் வெளியீட்டு நிகழ்வும் அண்மையில் கோண்டாவில் ஆச்சிமட அரசடி விநாயகர் மணிமண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் போது விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் மலரின் முதற்பிரதியை சண்.வாமதேவன் வெளியிட்டு வைக்க தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் பெற்றுக் கொள்வதையும் இடம்பெற்ற கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)

# சந்தை புனரமைப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் செல்லும் நிலையில்

(மல்லாவி)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கீழ் இயங்கும் மாங்குளம் பொதுச் சந்தையின் புனரமைப்புக்கென நெல்சிப் திட்டத்தின் நிதியுதவியுடன் கடந்த 2001 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட 57 மில்லியன் ரூபா நிதி இதுவரையில் குறித்த வேலைத்திட்டம் ஆரம்பிக் கப்படாத நிலையில், திறைசேரிக்கு திரும்பிச்செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.**

இது தொடர்பில் தெரியவருவதாவது,

போர் நடவடிக்கைகள் காரணமாக பாதிக்கப்பட்ட நிலையில் இறுதி யுத்தத்தின் போது முற்றாக அழிக் கப்பட்ட பொதுச் சந்தையானது 2009 ஆம் ஆண்டு மக்கள் மீள் குடியேறிய நிலையில் இருந்து இன்று வரை எவ்வித வேலைத்திட் டங்களும் ஆரம்பிக்கப்படாத நிலையில் பற்றைக்காடாகவேயுள்ளது.

இச்சந்தையை நம்பியிருக் கின்ற பல ஆயிரக்கணக்கான குடும் பங்கள் பொருட்களை வாங்கவோ, அல்லது விற்கவோ முடியாத நிலையில் பல மைல் தூரங்களில் உள்ள கிளிநொச்சி, மல்லாவி பொதுச் சந்தைகளுக்கு செல்கின்றனர்.

மீன் வியாபாரிகள் மாங்குளம் சந்தியில் வீதியோரத்தில் வைத்து விற்பனை செய்கின்றனர்.

இவ்வாறு பல்வேறு அவல நிலைகளுடன் இயங்கும் இச் சந்தையை 57 மில்லியன் ரூபா செலவில் நவீன முறையில் நிர்மாணிப் பதற்கு நிதிகிடைத்திருந்தவேளை, புதுக்குடியிருப்பு பிரதேச சபையின ரால் சந்தைக் கட்டடம் தொடர்பான மாதிரி படம் தயாரிக்கப்பட்டு செலவீடு களும் மதிப்பீடு செய்யப்பட்ட நிலையில் கேள்வி கோரல் மேற்கொள்வ தற்காக வடமாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் அனுப்பி வைக்கப்பட்டது.

இதுவரை இத்திட்டம் செயற்ப டுத்துவதற்குரிய அனுமதியோ அல் லது அறிவுறுத்தல்களோ பிரதேச சபைக்கு கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதனால் குறித்த காலப்பகுதிக் குள் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நிறைவு செய்யப்படாமையால் எதிர் வரும் டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி யுடன் அரச செயலகங்களில் முடி வுறுத்தப்படவுள்ள வரவு செலவுத் திட்டத்தின் மூலம் இந்நிதி திரும்பி அரச நிறைசேரிக்கு செல்லவுள் ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-15)




# விவசாயிகள், கால்நடை வளர்ப்போரின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வு

(குருமன்காடு)

வடமாகாண விவசாய அமைச் சர் பொ.ஐங்கரநேசனுக்கும் மன் னார் மாவட்டத்திலுள்ள விவசாயி கள் மற்றும் கால்நடை வளர்ப்போ ருக்குமிடையிலான கலந்துரை யாடல் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மன்னார், உயிலங்குளத்தி லுள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற இக் கலந் துரையாடலின்போது, மன்னார் மாவட்டத்திலுள்ள விவசாயிகளும் கால்நடை வளர்ப்போரும் தங்களு டைய பிரச்சினைகளை முன்வைத் துள்ளனர்

விவசாய செய்கைக்கான உரம் மற்றும் விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் கிடைக்கின்ற உதவி களும் உரிய முறையில் கிடைப்ப தில்லை.

மேலும், விவசாய நடவடிக்கை களுக்காக பயன்படுத்தப்படுகின்ற குளங்கள் உரிய முறையில் புனர மைக்கப்படாதுள்ளதெனவும் விவ சாயிகள் கூறினர்.

மேலும், இவ்வாறு புனரமைக் கப்படாதுள்ள குளங்களை அடை யாளம் கண்டு புனரமைப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறும் கோரி க்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, தங்களது கால் நடைகளுக்கு மேய்ச்சல் தரைகள் இல்லாமையால் தாங்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகளை நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள கால்நடை வளர்ப்போர் முன்வைத் தனர்.

மேலும், கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரையை ஒதுக்கித் தருவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


இக்கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல் வம் அடைக்கலநாதன், வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன், மன்னார் மாவட்ட விவசாயிகள் மற்றும் கால் நடை வளர்ப்போர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ம-250)

# கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

சமுதாய காவற்றுறை அலுவல கங்களுக்கும் சமூக மட்ட அமைப்பு கள் மற்றும் கிராம சேவையாளர்க ளுக்குமான கலந்துரையாடல் இன்று காலை10 மணிக்கு கரைச்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் சமூக பாதுகாப்பு மற்றும் சிறுவர், பெண்கள் ஆகியோருக்கு இழைக்கப்படும் துஷ்பிரயோகம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட வுள்ளது. (ம)



இரணைமடுக் குளத்தின் கீழ் உள்ள உருத்திரபுரம் வாய்க்கால் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளதைப் படத்தில் காணலாம். (படம்:- சிவநகர் செய்தியாளர்)

# ஒலி பெருக்கிகளின் அதிக சத்தத்தால் சிரமங்களை எதிர்கொள்வதாக விசனம்

(மல்லாவி)

வவுனியா,மன்னார்,கிளிநொச்சி, முல்லை ஆகிய மாவட்டங்களில் உள்ள இந்து ஆலயங்களில் அதிகாலை வேளைகளிலும் இரவு வேலைகளிலும் அதீத சத்தத்துடன் இயக்கப்படும் ஒலி பெருக்கிகளால் தற்பொழுது மூன்றாம் தவணைப் பரீட்சை எழுதும் மாணவர்களும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களும் மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர்.

இதன் காரணமாக பரீட்சைப் பெறுபேறுகளின் அடைவு மட்டத்தில் வீழ்ச்சி ஏற்படக் கூடுமென பெற் றோர்களும் சமூகவியலாளர்களும் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவது,

சமுதாயநலனில்சிறிதளவேனும் அக்கறையில்லாத சிலர் இந்து ஆலயங்களில் அதிகாலை வேளை களில், இரவு வேளைகளிலும் ஒலி பெருக்கியை பெரியளவில் ஒலிக்க விட்டு தற்போது பரீட்சையை எழுதும் மாணவர்களுக்கும் பரீட்சை எழுத வுள்ள மாணவர்களுக்கும் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்துகின்றனர்.

அத்தோடு பரீட்சை விடைத்தாள் களைத் திருத்தும் பணியில் ஈடுபடும் ஆசிரியர்களும் அலுவலக உத்தி யோகத்தர்களும் தங்களுடைய பணி களை வீடுகளில் வைத்து செய்ய முடியாதுள்ளது.



எனவே ஆலயங்களின் அறங் காவல் சபையினரும் இந்து மத ஒன்றியத்தினரும் இவ்விடயத்தில் கவனமெடுத்து எமது மாணவர்களு டைய கல்வி நிலை பாதிக்காத வகை யில் ஆலயங்களின் ஒலிபெருக்கி ஓசைகளைக் குறைத்து, ஒலிக்க விடுதல் உதவியாக இருக்குமென பெற்றோரும் மாணவரும் நலன் விரும்பிகள் பலரும் தெரிவித்துள்ள னர். (ம-15)

# மனித உரிமை தொடர்பான செயலமர்வு கிளிநொச்சியில்

(கிளிநொச்சி)

சிவில் சமூக அமைப்புகளுக் கான மனித உரிமைகள் தொடர்பான செயலமர்வு கிளிநொச்சி மாவட் டத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய காரியாலயத்தின் இணைப்பாளர் ரி.கனகராஜ் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத் துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயமானது கடந்த வருடம் முதல் கிளிநொச்சி மாவட் டத்தில் தனது உப அலுவலகம் ஒன்றைத் திறந்து தனது சேவையை மேற்கொண்டு வருகின்றது.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு மனித உரிமை கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவது காலத்தின் கட்டாய மாகும்.

குறிப்பாக சிவில் சமூக அமைப் புகளோடு இணைந்து எதிர்கால செயற்பாடுகளை முன்னெடுக்கும் முகமாக கிளிநொச்சி மாவட்டத் திலுள்ள சிவில் சமூக பிரதிநிதிக ளுக்கு மனித உரிமைகள் தொடர் பிலான செயலமர்வு ஒன்றை ஆணைக்குழு ஒழுங்கு செய்துள் ளது.

இதன் படி எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை பிரதான மண்டபத் தில் இடம்பெறவுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-6)

## மாற்றுவலுவுள்ளோர் தினம் அனுஷ்டிக்க ஏற்பாடு

(கிளிநொச்சி)

சர்வதேச மாற்றுவலுவுள்ளோர் தினமாகிய எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை அன்று கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் சம்மேளனத் தினால் மாற்றுவலுவுள்ளோர் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் காலை மாற்று வலுவுள்ளோர் சம்மேளனத் தினர் 5 குழுக்களாக பிரிந்து அரச மற்றும் தனியார் அலுவலகங்களுக்குசென்று மாற்றுவலுவுள்ளோர் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தவுள்ளனர்.

அன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கு கருத்தரங்கும் , கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ஏனைய மாகாணங்களை விட வட மாகாணம் சிறந்து விளங்கும்

## வடக்கு அமைச்சர் டெனிஸ்வரன் தெரிவிப்பு

(குருமன்காடு)

வட மாகாணம் எதிர்வரும் காலங் களில் ஏனைய மாகாணங்களை விட ஒரு சிறந்த மாகாணமாக திக ழும் என வட மாகாண மீன்பிடி, போக்குவரத்து அமைச்சர் பாலசுப்ர மணியம் டெனிஸ்வரன் தெரிவித் துள்ளார்.

மன்னார் நொச்சிக்குளம் கிராம மாதர் அபிவிருத்திச் சங்கமும் நொச்சிக்குளம் ஆலய சபையின தும் ஏற்பாட்டில் அமைச்சர் பா.டெனிஸ் வரனுக்கு வரவேற்பளிக்கும் வைப வம் ஒன்று கடந்த சனிக்கிழமை நொச்சிக்குளம் பலநோக்கு மண்ட பத்தில் நடைபெற்றது.

அங்கு அமைச்சர் மேலும் உரை யாற்றுகையில் ,

தமிழ்,முஸ்லிம் என்ற பிளவு கள் இன்றி ஒரு சிறந்த தமிழ் பேசு கின்ற சமூகமாக நாம் வாழும் போது தான் நிலையான அபிவிருத்தி களை செய்து தர முடியும்.

என்னால் முடியுமான வரை எனது மக்களின் தேவைகளை பாகுபாடின்றி வழங்குவதற்கும் நொச்சிக்குளம் ஆலயக் கட்டடத் திற்கு இயன்றளவு உதவிகளையும் பேருந்து நிழற்குடை அமைப்ப தற்கான முயற்சியையும் மேற்கொள் வேன் என அவர் மேலும் தெரிவித் தார். (ம-250)



# சிறுவர் அரங்கம்

649

## தன்னலமற்ற சேவை

முன்னொரு காலத்தில் வேங்கைபுரி என்ற நாட்டை வேந்தன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவர் தமது நாட்டில் இறைவனுக்காக மிகப் பெரிய ஆலயம் ஒன்றை அமைக்க எண்ணினார். இதுவரை எவருமே கட்டியிராதவாறு மிக அழகிய கோயில் கட்டுவதன் மூலம் தமது புகழ் பல்லாண்டு காலம் புகழுடன் விளங்கும் என்பது அவருடைய விருப்பம்.

இதற்காக நாடெங்கிலுமிருந்து கைதேர்ந்த சிற்பிகளை வரவழைத்தார். கோயில் கட்டுவதற்கான கற்களையும் பாறைகளையும் கொண்டுவரச் செய்தார்.


சிற்பிகள் வேலையைத் தொடங்கினர். கல்லுளிகளின் ஓசை கேட்கலாயிற்று. கோயில வேலை துரிதமாக நடைபெற்று வந்தது. மன்னன் நாள்தோறும் கோயில் வேலையை வந்து பார்வையிடுவார். நாளுக்கு நாள் கோயில் கட்டும் வேலை வளர்ச்சி பெறுவது கண்டு உள்ளம் பூரிப்படைந்தான்.

பல நாட்களுக்குப் பின்னர் ஒரு வழியாகக் கோயில் கட்டி முடிந்தது. அழகிய கோபுரமும் கோபுரத்தில் உள்ள சிற்பங்களும் பார்ப்பவர் உள்ளத்தைப் பரவசமடையச் செய்யும்படியாக விளங்கின. மன்னன் இதனைக் கண்டு பூரிப்படைந்தான். கோயில் பணி பூர்த்தியானதும் மிகப் பெரிய சலவைக்கல் ஒன்றில் கோயிலைக் கட்டிய தனது பெயரைப பொன்னால் பொறிக்கச் சொன்னான். அதனைக் கோபுர வாசற்படியில் எல்லோர் கண்களிலும் படும்படியாகப் பதித்து வைக்கச் சொன்னான்.

அன்று இரவு அரசன் தூங்கிக் கொண்டிருக்கும்போது ஒரு கனவு கண்டான். கனவில் இறைவன் தோன்றினார். மன்னன் கட்டிய கோயிலும் தோன்றியது. அதில் மன்னன பெயர் பொறிக்கப் பெற்ற சலவைக் கல்லும் இருந்தது.

இறைவன் நேரே மன்னன் பெயர் பொறிக்கப்பட்டிருந்த சலவைக் கல்லின் அருகே சென்றார். மன்னன் பெயரை அழித்துவிட்டு வேறு யாரோ ஒரு பெண்மணியின் பெயரை எழுதிவிட்டுச் சென்றார்.

மன்னன் திடுக்கிட்டுக் கண் விழித்தான். நேரே கோயிலுக்குச் சென்றான். சலவைக் கல்லைப் பார்த்தான். அவனுக்குத் தூக்கி



வாரிப் போட்டது. ஆம். அவன பெயர் அழிக்கப்பட்டு யாரோ ஊர் பேர் தெரியாத ஒரு பெணமணியின் பெயர் அதில் பொறிக்கப்பட்டிருந்தது. இதைக கண்ட அரசனுக்கு ஒருபுறம் அவமா னமாகவும் மறுபுறம் வேத னையாகவும் இருந்தது. "இவ்வளவு பாடுபட்டுப் பெரும் பொருள் செலவு செய்து இந்தக் கோயிலைக் கட்டினேன். முடிவில் என்னுடைய பெயர் பொறிக்கப்படாமல் வேறு யாரோ ஒரு பெண்மணியின் பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறதே!" என்று வேதனையடைந்தான். காவலர்களை அனுப்பி அந்தச் சலவைக் கல்லில் பெயர் பொறித்துள்ள பெண்மணியை எங்கிருந்தாலும் தேடி அழைத்து வருமாறு கட்டளையிட்டான்.

காவலர்களும் நகர் பூராவும் சுற்றித் திரிந்து கடைசியல்ஊருக்கு ஒதுக்குப்புறமுள்ள ஒரு குடிசையில் தன்னந்தனியாக வசித்து வந்த ஒரு மூதாட்டியை அழைத்து வந்தனர். அவள் பெயர் தான் அந்தச் சலவைக்கல்லில் பொறிக்கப்பட்டிருந்தது.

அந்த மூதாட்டியைப் பார்த்த அரசன், "அந்தச் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டிருக்கும் பெயர் உங்களுடையது தானா?" என்று கேட்டான்.

கிழவி கண்களை நன்கு துடைத்துக கொணடு சலவைக் கல்லைப் பார்த்தாள். பிறகு, "ஆம் அரசே அது என்னுடைய பெயர் தான்... தவறுதலாகப் பொறிக்கப்பட்டுவிட்டது போலிருக்கிறது!"

"இல்லை அம்மா, என் பெயர் தான் முதலில அந்தச் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டது. இறைவனே வந்து என் பெயரை அழித்து விட்டுத் தங்கள் பெயரை இதில் பொறித்து விட்டுச் சென்றிருக்கிறார். அதன் காரணம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை." என்றான் அரசன்.

"நான் இந்தப்பக்கம் வந்தது கூட இல்லை... அப்படியிருக்க இதில் என் பெயர் ஏன் பொறிக்கப்பட்டிருக்கிறது?" என்று வியப்புடன் கேட்டாள் கிழவி.

"தாயே, இந்தக் கோயில் பணியில் நீங்கள சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் இறைவன் தங்கள் பெயரை இதில் பொறித்திருக்கமாட்டார். தாங்கள் செய்த தொண்டு என்னவென்று கூறுங்கள்!" என்றான் அரசன்.

நெடுநேரம் யோசனை செய்து பார்த்த கிழவி, "மன்னா! இந்தக் கோயில் பணிக்காக நான் ஒன்றும் செய்யவில்லை ஆனால், ஒன்றுமட்டும் செய்திருக்கிறேன். இந்தக் கோயில் கட்டுவதற்கான கற்கள் மரங்கள் முதலியவற்றை ஏற்றிவரும் வண்டிகள் நாள்தோறும் என் வீட்டுப் பக்கமாகத்தான் வரும். அந்த சமயத்தில் வண்டியோட்டிகளுக்குத் தாகந்தீரத் தண்ணீர் கொடுப்பேன் மோர் கொடுப்பேன். குதிரைகளுக்குச் சிறிது புற்களை கொடுத்து தண்ணீர் காட்டுவேன். அவ்வளவுதான் நான் செய்தது."" என்றாள் கிழவி.

"தாயே! நான் வெறும் புகழுக்காக இந்தக் கோயிலைக் கட்டினேன். தாங்களோ புகழை விரும்பாமல் தொண்டு செய்தீர்கள். எனவே, தான் என் பெயரை அழித்துவிட்டு இறைவன் தங்கள் பெயரைப் பொறித்துள்ளார்.

தன்னலமற்ற தங்கள் தொண்டினை இந்தக் கோயிலில் உள்ள சலவைக்கல் என்றென்றும் எடுத்துக் காட்டும்.

வாழ்க தங்கள் புகழ்!" என்று கூறிய மன்னன், அந்தக் கிழவிக்கு நிறைய பொருள் பரிசாகக் கொடுத்து அனுப்பினான்.

♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦

## 11.2013 27 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1895-ஊர்ஃபா என்ற இடத்தில் 3 ஆயிரம் ஆர்மேனியர்கள் ஓட்டோமான் படைகளினால் உயிருடன் எரிக்கப்பட்டனர்.
- 1895- பாரிசில் அல்பிரட் நோபல்- நோபல் பரிசுக்கான திட்டத்தை தெரிவித்து தனது சொத்துக்களை அப்பரிசுக்கான மூலதனமாக அறிவித்தார்
- 1935-இரத்மலானை விமான நிலையத்துக்கு முதலாவது விமானம் மதராசில் இருந்து வந்திறங்கியது.
- 1940-ருமேனியாவில் இரண்டாம் கரோல் மன்னனின் ஆதரவாளர்கள் 60 பேரை தளபதி இயன் அண்டோனெஸ்கு கைது செய்து அவர்களுக்கு மரணதண்டனை நிறைவேற்றினான்.
- 1944-இரண்டாம் உலகப்போர்: ஸ்டஃபோர்ட்ஷயரில் ஆங்கிலேய விமானப்படைத் தளத்தின் ஆயுதக் கிடங்கில் ஏற்பட்ட பெரும் விபத்தில் 70 பேர் உயிரிழந்தனர்.
- 1964-பனிப்போர்: இந்தியப் பிரதமரன் ஜவகர்லால் நேரு அணுவாயுதச் சோதனைகளை நிறுத்தும்படி ஐக்கிய அமெரிக்காவையும் ரஷ்யாவையும் கேட்டுக் கொண்டனர்.
- 1971-சோவியத்தின் மார்ஸ் 2 விண்கலம் தனது துணை விண்கோள் ஒன்றை செவ்வாய்க் கோளில் இறக்கியது. இதுசெவ்வாயில் மோதி செயலிழந்தது. செவ்வாயில் இறங்கிய முதலாவது கலம் இதுவாகும்.
- 1975-கின்னஸ் உலக சாதனை நூலை ஆரம்பித்து வைத்த ரொஸ் மாக்வேர்ட்டர் ஐரிஷ் குடியரசு இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டார்.
- 1989-ஈழப்போரில் இறந்த போராளிகளை நினைவு கூரும் முகமாக மாவீரர் நாள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரால் அறிவிக்கப்பட்டது.
- 1999-நியூசிலாந்தின் முதலாவது பெண் பிரதமராக தொழிற்கட்சியைச் சேர்ந்த ஹெலன் கிளார்க் தெரிவு செய்யப்பட்டார்.
- 2001-ஹபிள் விண்வெளித் தொலைநோக்கி மூலம் ஓசிரிஸ் கோளில் ஆவியாகக்கூடிய நிலையில் ஐதரசன் மண்டலம் கண்டுபிடிக்கப்பட்டது. சூரிய குடும்பத்திற்கு வெளியே உள்ள கோள் ஒன்றில் வளி மண்டலம் கண்டுபிடிக்கப்பட்டது இதுவே முதல் தடவை.
- 2006-கனடாவில் பிரெஞ்சு மொழி பேசும் மக்களை பெரும்பான்மையாக கொண்ட கியூபெக் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் தனியான தேச இனம் என்ற அங்கீகாரத்தை கனடிய நாடாளுமன்றம் வழங்கியது.

### பிறப்புக்கள்

- 1934-யோசப் பரராஜசிங்கம், இலங்கை மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் (இ2005)
- 1940-புரூஸ் லீ, தற்காப்புக்கலை நிபுணர், நடிகர் (இ.1973)
- 1942-ஜிமி ஹென்றிக்ஸ், அமெரிக்க கிற்றார் கலைஞர் (இ.1970)
- 1963-தியாகி திலீபன், தமிழீழ விடுதலைப்புலிப் போராளி, உண்ணாநோன்பிருந்து உயிர் நீத்தவர் (இ.1987)

### இறப்புக்கள்

- 2008-வி.பி.சிங், முன்னாள் இந்தியப் பிரதமர் (பி.1931)

## தியாகி திலீபன்



தியாகி திலீபன் என அழைக்கப்படும் இராசையா பார்த்தீபன் 1963 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி யாழ்ப்பாணத்தின் ஊரெழு என்னும் ஊரில் பிறந்தார்.

இந்திய இராணுவம், அமைதிப்படை என்னும் பெயரில் இலங்கையின் வடக்கு கிழக்கில் நிலை கொண்டிருந்தபோது 1987 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15 ஆம் திகதி அன்று இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து உண்ணாவிரதப் போராட்டத்தை யாழ்ப்பாணத்தில் நல்லூரில் ஆரம்பித்தார்.

மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக மேற்கொள்ளப்படும் குடியேற்றங்களை தடுத்து நிறுத்த வேண்டும், சிறைக் கூட்டங்களிலும் இராணுவ, பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும், அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும், ஊர் காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாக களையப்பட வேண்டும், தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்கள் திறப்பதற்கான நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தே நீரும் அருந்தாது உண்ணாவிரதத்தை மேற்கொண்ட திலீபன் கோரிக்கை நிறைவேற்றப்படாமையால் உண்ணாவிரதம் ஆரம்பித்து 12 ஆம் நாள் செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி உயிர்துறந்தார்.

தமிழீழ விடுதலைப்புலிப் போராளியும் யாழ்.பல்கலைக் கழக மருத்துவ பீட மாணவருமான இவரது உடல் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்திலேயே பதப்படுத்தி வைக்கப்பட்டது.

# வீட்டுல நீங்க ஆபீஸரா....?



**கேள்வி:** அலுவலகத்திலும், வீட்டிலும் ஏன் வெவ்வேறு விதமாக நடந்து கொள்கிறோம்? சில நேரங்கள் நான் என் அலுவலத்தில் நல்லபடியாக நடந்து கொள்கிறேன், ஆனால் வீட்டில், அதே விதமாக நடந்துகொள்ள முடியவில்லை என்றும் உணரகிறேன். ஏன் இந்த இரண்டுபட்ட நிலை?

**சத்குரு:** சரி, அலுவலகத்தில் யாரோ ஒருவர் உங்களை ஒழுங்குபடுத்திக் கொண்டே இருப்பதால் ஒருவேளை நீங்கள் அலுவலகத்தில் நல்லவராக இருக்கலாம். வீட்டில் உங்களைக் கட்டுப்படுத்த சிரமப்படுகிறார்களோ என்னவோ (சிரிக்கிறார்)

ஒரு சிலர் அலுவலகத்தில் நல்லவர்களாகவே நடந்து கொள்வார்கள், வீட்டுக்கு வந்தவுடன் அவர்களின் நடவடிக்கை மோசமாகும்.

வீடு என்கிற அமைப்பைப் பற்றிய தெளிவு அவர்களிடம் இல்லை. குழப்பத்திலேயே இருக்கிறார்கள். வீட்டில் ஓய்வில் இருக்கும்போது எதைச் செய்தாலும் ரிலாக்ஸ்டாக, தாறுமாறாக செய்யலாம் என்றே பெரும்பாலான மக்கள் நினைக்கிறார்கள்.

ஓய்வு நிலையில் இருப்பது என்றால் செய்யும் செயல்கள் அனைத்தையும் திறம்பட செய்வது என்பது அவர்களுக்கு பிடிபடுவதில்லை. நாம் எவ்வளவு ஓய்வில் இருக்கிறோம் என்பதே நம் செயல்கள் அனைத்திற்கும் அடிப்படை.

உங்களால் ஓய்வு நிலைக்கு செல்ல இயலவில்லையா? உங்கள் செயலையும் உங்களால் சிறப்பாக செய்ய இயலாது. இதனால் நீங்கள் ஓய்வு நேரத்தைச் செலவழிக்கும் உங்கள் இல்லம் சிறப்பாய் இருப்பது உங்கள் அலுவலக வேலைகளையும் சிறப்பாய் செய்வதற்கு வழி வகுக்கும்.

இல்லம் என்னும் அழகிய அமைப்பை நீங்கள் உருவாக்கக் காரணமே உங்களுக்கு அது தேவைப்பட்டதால்தான். அலுவலகத்தின் பொறுப்பு கூடிப்போக உங்கள் இல்லம் உங்கள் மேல் பயணப்படும் சுமை ஆகிவட்டது. நீங்களும் பாரம் தாளாமல் துவண்டு போகிறீர்கள்.



அலுவலகம் சிறந்ததா? வீடு சிறந்ததா? அல்லது எனக்கு சமூகத்தின் மேல் தீராத ஆர்வம் இருக்கிறதே, அது சிறந்ததா? என நீங்கள் வரிசையாய் கேள்விகளை அடுக்கலாம். நாம் தெளிவாய் புரிந்து கொள்ள வேணடிய ஒரு முக்கியமான விஷயம்- ஒரு சூழ்நிலையைவிட மற்றொன்று முக்கியமானதல்ல.

ஒருவர் என்ன செய்கிறார் என்பது முக்கியமல்ல, ஆனால், அவர் அதை எப்படி செய்கிறார் என்புதே முக்கியம். எனவே, வீடு தானே என்று பிரித்துப் பார்க்காதீர்கள். உங்கள் வீடல்ல அது, உங்கள் வாழக்கை அது.

அலுவலகம் மட்டும் உங்களை ஊட்டி வளர்க்கவில்லை, உங்கள் இல்லமும் உங்களை முழுதாய் வளர்கிறது. உங்கள் வாழ்வின் ஒரு பகுதியை அக்கறையில்லாமலும், மற்றொரு பாதியை அக்கறையோடு கவனிக்கவும் விரும்புவீர்களா?

உங்கள் அணுகுமுறை இப்படி இருந்தால் உங்களுக்கு மிஞ்சப் போவது துன்பமே!

நீங்கள் அக்கறையில்லாமல் கையாளும் ஒவ்வொரு செயலும் மறுபடியும் உங்களிடமே வந்து சேரும். நிச்சயமாக வரும்.

அலுவலகத்தில் பணிநீக்கம் என்னும் விளைவு இருப்பதால் நீங்கள் அங்கு ஒழுக்கசீலராய் விளங்கலாம். ஒருவேளை வீட்டில் உங்கள் பணி நிரந்தரப்படுத்தப்பட்டதால் என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம் என்ற துணிச்சலில் நீங்கள் செயற்படலாம்.

(தொடரும்)

## ஆன்மீகம் 50

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# இந்தியாவின் பிடியிலிருந்து விலகி சர்வதேச மயப்படும் இலங். விவகாரம்

...இந்தியா என்ற ஒரு பெரிய நாடு, உறுதியான ஓர் அரசியல் நிலைப்பாட்டில் இல்லாது, தனது மாநிலம் ஒன்றின் கைப்பிடிக்குள் அடங்கிச் செயற்படுகின்ற ஒரு நாடாக, இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாடு தொடர்பில் எடுத்த முடிவின் மூலம் தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

தமிழ்நாட்டில் உள்ள தமிழ் மக்கள் இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆதரவான ஒரு நிலைப்பாட்டில் இந்திய மத்திய அரசாங்கத்தின் செயற்பாடுகளில் செல்வாக்கு செலுத்துவது நன்மை பயக்கத்தக்கது என்றே தோன்றுகின்றது.

ஆனால், மத்திய அரசாங்கத்தில் இருப்பவர்கள், அடுத்து வருகின்ற தேர்தலில் மீண்டும் பதவிக்கு வரவேண்டும் என்ற அரசியல் நோக்கத்தை முன்வைத்து, தமிழ் நாட்டுக்கு அடங்கிப் போவது பரந்த அளவில் பொருத்தமான காரியமாகாது. தமிழ் நாடு உணர்வுபூர்வமான ஒரு நிலையில் இலங்கைத் தமிழ்மக்களுக்கு ஆதரவு வழங்கி வருகின்றது.

**இந்தியா முதல் நிலையில் இருந்திருக்க வேண்டும்**

இதேபோன்று இந்திய மத்திய அரசும் உணர்நிலையைக் கடந்து, அரசியல் இலாபம் கருதிய நிலைப்பாட்டுக்கு அப்பால் இருந்து செயற்பட்டிருக்குமேயானால், கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டைப் பலனளிக்கத்தக்க வகையில் பயன்படுத்தியிருக்கலாம் என்பது ஆய்வாளர்களின் கருத்தாக இருக்கின்றது. அத்தகைய ஒரு நிலைமையில் யாழ்ப்பாணத்திற்கு மேற்கொண்ட விஜயத்தையடுத்து, மனித உரிமை விடயங்களில் சுயமான ஒரு விசாரணை நடத்த வேண்டும். இல்லையேல் சர்வதேச விசாரணையை நாட வேண்டியிருக்கும் என்று, டேவிட் கமரன் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்த இடத்தில் இந்தியா முன்னணியில் இருந்திருக்கும்.

பிரித்தானிய பிரதமர் டேவிட் கெமரன் இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்து, மனித உரிமை மீறல்கள் குறித்து சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் அத்துடன் ஜனநாயக நடைமுறைகளை சரியான முறையில் கடைப்பிடிக்க வேண்டும் என்று கடுந்தொனியில் எச்சரிக்கை செய்திருந்தார்.

இவ்வாறு இலங்கை விவகாரம், சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்லப்பட்டதன் பின்பே, இந்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம், இறுதி யுத்தத்தின்போது, இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று குரல் கொடுத்திருக்கின்றார். மனித உரிமைகளை மீறிச் செயற்பட்ட குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டும் என்று அவர் கோரியிருக்கின்றார்.

அயல்நாடு என்ற ரீதியில், மனித உரிமைகள் மீறப்பட்டிருப்பதன் மூலம், யுத்தக் குற்றச்சாட்டுக்களுக்கு முகம் கொடுத்துள்ள இலங்கையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்த ஒரு சந்தர்ப்பத்தில் - ஒரு சூழ்நிலையில் இந்தியாவே, மனித உரிமைகள் விடயம் குறித்து முதலில் குரல் எழுப்பியிருக்க வேண்டும். ஆனால், அது நடைபெறவில்லை.

சுமார் 65 ஆண்டுகளுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரன் இந்த விடயத்தை உலகத்தின் உச்சிக்குக் கொண்டு சென்றதன் பின்னர்தான் இந்தியாவினால் - அதன் முக்கியமான அமைச்சர் ஒருவரினால் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை விசாரணைகள் நடத்தி, குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்று குரல் எழுப்ப முடிந்திருக்கின்றது.

**முன்னெப்போதும் இல்லாத அளவில் இலங்கைக்கு அழுத்தங்கள்**

ஐநா மன்றத்தின் மனித உரிமைகள் பேரவையில் இரண்டு தடவைகள் அமெரிகாவினால் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட பிரேரணைகளுக்கு முன்னணியிலிருந்து இந்தியா ஆதரவு வழங்கியிருக்கின்றது. ஆனால், அதேநேரத்தில் ஐ.நாவுக்கு வெளியே, பொதுநலவாய அமைப்பு போன்ற ஓர் அமைப்பின் ஒரு மாநாட்டுச் சூழலில் இந்தப் பிரச்சினையை முதலாவது ஆளாகக் கையாண்டிருக்க வேண்டும்.

ஆனால், இந்தியாவின் பிடியில் இருந்து இலங்கை விவகாரம் சர்வதேச அரங்கிற்குள் தளம் மாறுவதற்குத் தலைப்பட்டிருக்கின்றதோ என்ற சந்தேகம் எழுந்திருக்கின்றது.



தமிழ்நாடும் சரி, தமிழ்நாட்டுடன் இணைந்து, கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என குரல் கொடுத்தவர்கள் அனைவருமே, மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்திற்கு இனியில்லை என்ற அளவில் அழுத்தம் கொடுப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தார்கள். புறக்கணிப்பின் மூலம் கொடுத்த அழுத்தங்களிலும் பார்க்க, மாநாட்டில் கலந்து கொண்டு, சாதுரியமாகச் செயற்பட்டதன் மூலம், பிரித்தானிய பிரதமர் டேவிட் கெமரன் அதிகூடிய அழுத்தத்தை இலங்கை மீது பிரயோகித்திருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது,

இலங்கை மாநாட்டில் கலந்துகொள்ளக் கூடாது, அங்கு செல்லவே கூடாது என்று தீர்மானித்திருந்த கனடா மற்றும் மொரீசியஸ் போன்ற நாடுகளில் அடியொட்டி, பிரித்தானியாவும் நடந்து கொள்ள வேண்டும் என்று அதன் பிரதமர் டேவிட் கெமரனுக்கு கொடுக்கப்பட்டிருந்த அழுத்தங்களுக்கு மத்தியிலேயே அவர், கொழும்புக்கு வந்து யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தையும் மேற்கொண்டிருந்தார்.

இலங்கைக்குச் செல்வேன். அங்கு நடைபெறுகின்ற பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வேன். அந்த நாட்டின் நிலைமைகளை வெளிச்சம் போட்டு காட்டுவேன் என்று அவர் உறுதியாகக் கூறிவிட்டே கொழும்பில் காலடி எடுத்து வைத்தார். அவர், தான் சொல்லியவாறே, இலங்கையின் மனித உரிமை மீறல்கள், ஊடக சுதந்திரம், அந்த நாட்டின் உண்மையான ஜனநாயக நிலைமைகள் என்பவற்றை அவர் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றார். இதன் ஊடாக முன்னெப்போதும் இல்லாத அளவில் இலங்கை விவகாரம் - இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயங்கள் சர்வதேச மயமாகியிருக்கின்றன.

**மனித உரிமைகளைப் பாதுகாத்து, முன்னேற்றுமாறு சீனாவும் கோருகின்றது**

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் மேம்பட வேண்டும் என்ற விடயத்தில் பொதுநலவாய அமைப்பைச் சேர்ந்த பல நாடுகள் குறிப்பாக, இந்தியா மற்றும் பிரத்தானியா போன்ற நாடுகளின் வரிசையில் எதிர்பாராதவிதமாக சீனாவும் இப்போது இணைந்து குரல் எழுப்பியிருக்கின்றது.

"மனித உரிமைகளைப் பாதுகாத்துப் பேணவும், அவற்றை முன்னேற்றுவதற்கும் இலங்கை முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்" என்று சீனாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் கின் காங் கூறியிருக்கின்றார்.

"சர்வதேச மனித உரிமை நோக்கங்களை எட்டுவதற்கு பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் கலந்துரையாடல்களின் மூலமாகவே நாடுகள் ஆக்கபூர்வமான பங்களிப்பைச் செய்ய முடியும் என்பது எமது நம்பிக்கை. அந்த வகையில் இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் முன்னேற்றப்பட வேண்டும்" என்று அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

இலங்கையுடன் மிகவும் நெருக்கமான உறவை ஏற்படுத்தி, பல மில்லியன் ரூபா நிதியை இலங்கைக்கு உதவியாக வழங்கியுள்ள சீனா, கடந்த 2011, 2012 ஆம் ஆண்டுகளில் ஐ.நா சபையில் கொண்டுவரப்பட்ட இலங்கைக்கு எதிரான மனித உரிமை பிரேரணைகளுக்கு எதிராக வாக்களித்திருந்தது. இப்போது முதன் முறையாக இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்று அது குரல் கொடுத்திருக்கின்றது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என பல முனைகளில் இருந்தும் அழுத்தங்கள் எழுந்துள்ள நிலையில் இலங்கை அரசாங்கத்தின் அடுத்த நடவடிக்கை என்னவாக இருக்கப் போகின்றது என்பது தெரியவில்லை. தொடர்ந்தும் இங்கு மனித உரிமைகள் மீறப்படவில்லை. நாங்கள் எந்தக் குற்றத்தையும் செய்யவில்லை என பிடிவாதமாக மறுக்கப்போகின்றதா அல்லது சுதந்திரமான விசாரணைகளை நடத்தப் போகின்றதா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

(செ.சிறிதரன்) (முற்றும்)

# நாட்டில் 18, 777 சிறுவர் துர்நடத்தை சம்பவங்கள்

(கொழும்பு)

2009 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையில் 18 ஆயிரத்து 777 சிறுவர் துர்நடத்தை மற்றும் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளதாக அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

தண்டனை சட்டக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள சிறுவர் துஷ்பிரயோகங்கள், 9 ஆயிரத்து 676 என்றும் சிறுவர்களை வேலைக்கமர்த்தல் சம்பவங்கள் 771 என்றும் பொறுப்பும் பாதுகாப்பும் அவசியமான சிறுவர்களின் துஷ்பிரயோகங்கள் 3 ஆயிரத்து 232 எனவும் பதிவாகியுள்ளன.

அத்துடன் கட்டாயக்கல்வி சட்டத்தை மீறிய 2 ஆயிரத்து 278 சம்பவங்களும் வேறுவிதமான துஷ்பிரயோகங்கள் 2 ஆயிரத்து 820 உம் சிறுவர் சிறுமியர் மீதான துஷ்பிரயோக சம்பவங்களின் தன்மையின் படி 418 சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

தாய் அல்லது தந்தை வெளிநாடு செல்வதால் 2010 முதல் 2012 வரையிலான காலப் பகுதியில் 24 சிறுவர் சிறுமிகள் துர்நடத்தைக்கு உள்ளாகியுள்ளனர் என அவர் குறிப்பிட்டார். (அ-2)

# ரோந்துப் பணிகளை மேற்கொள்ள கடற்படைப் படகுகள் இன்னும் தேவை

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

கடல்சார் பாதுகாப்பு, கண்காணிப்பு மற்றும் நீலக்கடலில் ரோந்துப் பணிகளை மேற்கொள்ள இன்னமும் பல கடற்படைப் படகுகள் இலங்கை கடற்படைக்குத் தேவையாகவுள்ளதாக, இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் காலை ஆரம்பமாகிய, கடல்சார் பாதுகாப்புக் கருத்தரங்கில கலந்து கொண்டு முக்கிய உரை நிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

கரையில் இருந்து தொலைவில் செயற்படவும், கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், நீலக்கடலில் ரோந்துப் பணிகளை மேற்கொள்ளவும் இன்னும் பல கடற்படைக் கப்பல்களை இலங்கை பெறவேண்டியுள்ளது.

முன்னதாக பல செல்வந்த நாடுகளிடம் இருந்து இத்தகைய கப்பல்களை வழங்கும்படி கேட்டிருக்கிறோம்.

இந்நிலையில், அடுத்த ஆண்டில் இரண்டு பே வகை ரோந்துப் படகுகளை அன்பளிப்புச் செய்யவிருக்கும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் முடிவை நன்றியுடன் வரவேற்கிறேன்.

இதன்மூலம், சட்டவிரோத ஆட்கடத்தல்களைத் தடுப்பதுடன், இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின உறுதிப்பாடு மற்றும் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்தவும் முடியும்.

இலங்கை தனது தற்போதைய வெளிவிவகாரக் கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டியதில்லை. அம்பாந்தோட்டை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு வர்த்தக நோக்கிலேயே சீனா உதவியுள்ளது.

அதனை, முத்துமாலை வியூகத்தின் கோர்ப்பாக தவறாக எடைபோடக் கூடாது. இலங்கை எப்போதுமே அணிசேராத வெளிநாட்டுக் கொள்கையைக் கொண்டுள்ள நாடு.

நாம் தொடர்ந்து எமது துறைமுகங்களுக்கு வரும் எந்தவொரு நாட்டினதும், கடற்படைக் கப்பல்கள் உள்ளிட்ட கப்பல்களுக்கும் தேவையான விநியோக மற்றும் ஏனைய உதவிகளையும் வழங்கி வருகிறோம்.

இந்நிலையில், வெளிநாட்டுக் கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டிய தேவை இலங்கைக்கு கிடையாது. இந்தியா எமது மிகப் பெரிய அண்டை நாடு. தெற்காசிய பிராந்தியத்தின் மிகவும் முக்கியமான நாடு.

எமது. கலாசார, சமூக, பொருளாதார, அரசியல் உறவுகள் வரலாற்று ரீதியானவை. அதேபோல சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவும் பல நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்தவை.

இந்த இரண்டு நாடுகளுடனும், மிகப்பெரிய பரஸ்பர உறவுகளையும், நட்புறவையும் இலங்கை கொண்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக, இலங்கையின் அபிவிருத்தியின் முக்கிய பங்காளியாக சீனா விளங்குகிறது.

சீனாவின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள அம்பாந்தோட்டை துறைமுகம் முற்றிலும் வர்த்தக நோக்கிலானதே என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ-2)

# விமான சேவையை நிறுத்துகிறது இந்திய ஜெட் விமான நிறுவனம்

கொழும்பு-சென்னை இடையிலான நாளாந்த விமான சேவையை நிறுத்த இந்தியாவில் ஜெட் எயர் வேய்ஸ் நிறுவனம் முடிவு செய்துள்ளது. எதிர்வரும் ஜனவரி 2ஆம் திகதியுடன் கொழும்பு - சென்னை இடையிலான நாளாந்த விமான சேவைகளை நிறுத்திக் கொள்ள விருப்பதாக, ஜெட் எயர்வேய்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

அதற்குப் பிந்திய நாட்களில் முன்பதிவு செய்து கொண்டவர்கள் மாற்று ஏற்பாடுகளைச் செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

சென்னை - கொழும்பு இடையில், குறைந்த கட்டண விமான சேவையை ஜெட் எயர்வேய்ஸ் நிறுவனம் நடத்தி வந்தது. இந்நிலையில் போதிய இலாபமின்மையை காரணம் காட்டி இந்த சேவையை ஜெட் எயர்வேய்ஸ் நிறுத்தியுள்ளதாக தெரிய வருகின்றது. (அ-2)

# நாட்டின் தேசப்பற்றாளர்கள் நாங்களே-மங்கள எம்.பி.

(கொழும்பு)

நாட்டில் இருக்கும் நான் உட்பட என்னுடன் இருக்கும் அணியினரே உண்மையான தேசப்பற்றாளர்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நாட்டில் இருக்கும் உண்மையான தேசப்பற்றாளர்கள் நாங்களே ஆயினும் தேசப்பற்றாளர்கள் என்பதால் இனத்தையும் மதத்தையும் விற்று வாழ நாம் விரும்பவில்லை.

அத்தோடு நாங்கள் தேசப்பற்றாளர்கள் என்று முத்திரைகளை மார்பில் ஒட்டிக்கொண்டு இருப்பதில்லை.

கொழும்பில் பொதுநலவாய நாடுகளின் மாநாடு நடைபெற்ற போது வெளிநாட்டில் இருந்து வந்த பிரித்தானிய பிரதமர் கமரூன், சனல் 4 தொலைக்காட்சியினரை விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்று அரசாங்கம் பிரசாரம் செய்தது.

மேலும் இலங்கையில் வாழும் நான், விக்ரமபாகு மற்றும் எங்கள் கட்சியின் தலைவர் ஆகியோரை புலிகளின் ஆதரவாளர்கள் என்று கூறி எமது நற்பெயரை முற்றாக அழிக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது.

உண்மையில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் எங்கு இருககின்றனர்? எமது பிரச்சினைகளுக்காக கமரூனையோ, சனல் 4 தொலைக்காட்சியையோ வேறு எவரையுமோ அரசு திட்டுவதில் எந்தப் பலனும கிடையாது என்றார். (அ-2)

# கொக்கக்கோலா நிறுவனத்திற்கு மூன்று மாத தடை விதிப்பு

கொக்கக்கோலா பேவரோஜஸ் தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள சகல அனுமதிப் பத்திரங்களையும் மூன்று மாதங்களுக்கு தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


கெப்பிடடிகொல்லாவ நீதவான் நீதிமன்றமே இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

பயன்படுத்தக் கூடிய காலத்தை குறிப்பிடாது கொக்கக்கோலா போத்தல் ஒன்றை விற்பனைக்காக, விநியோகம் செய்தமை தொடர்பான மூன்று குற்றச்சாட்டுக்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்ப்பின் படி பியகமவில் இருக்கும் கொக்கக்கோலா நிறுவனத்தில் உற்பத்தி செய்தல், களஞ்சியப்படுத்தல், விநியோகம் செய்த மற்றும் விற்பனை செய்தல் போனற நடவடிக்கைகளுக்கு மூன்று மாதங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.


இந்த நிலையில் நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு எதிராக வடமத்திய மாகாண மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுவொன்றை தாக்கல் செய்ய அந்த நிறுவனம் தீர்மானித்துள்ளது. (அ-2)

# யாழ். தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் நாவலர் விழா









(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் முன்னெடுத்த நாவலர் விழா கடந்த 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் வீதியில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாண தமிழ்ச் சங்கத்தின் உப தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் தொடக்கவுரையை தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி ஆற்றினார்.

இதனைத் தொடர்ந்து நாவலரும் தமிழ்த் தேசியமும் என்ற பொருளில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஓய்வு நிலை விரிவுரையாளர் கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு சிறப்புரையாற்றினார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் கலாநிதி எஸ். ஸ்ரீதர்ஷனன் குழுவினர் நாவலர் இசையரங்கை வழங்கினார்கள்.

இதனைத் தொடர்ந்து நாவலரின் கனவை நனவாக்குவதில் பெரும்பங்கு வகிப்பவை அவரது சமயப் பணிகளா? அல்லது தமிழ்ப்பணிகளா என்ற தலைப்பில் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தலைமையில் பட்டிமண்டபம் இடம்பெற்றது.

இந்த நிகழ்விற்கான அனுசரணையை யாழ். பெரியகடை சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ் நிறுவனத்தினரும் மண்டபத்திற்கான அனுசரணையை யாழ். மாநகர சபையினரும் வழங்கினர்.

நிகழ்வைக் கௌரவப்படுத்தும் முகமாக ஆறுமுகநாவ்லர் என்ற நாவலர் சரிதம் உரைக்கும் நூலை யாழ். கரிகணன் பதிப்பகத்தினர் இலவசமாக வெளியீடு செய்தனர்.

அத்துடன் நாவலரின் படம் பொறித்த வண்ண நாட்காட்டி கலந்து கொண்ட யாவருக்கும் இலவசமாக வழங்கப்பட்டது.

நிகழ்வு இடம்பெற்ற நாவலர் கலாசார மண்டபம் ஆறுமுக நாவலரின் இல்லம் அமைந்திருந்த இடம் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# பணிப்பெண் வேலைவாய்ப்புக்கு குடும்பப் பின்னணி கட்டாயம்

## அமைச்சர் டிலான் பெரேரா வலியுறுத்து

(கொழும்பு)

**மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காக பெண்களை அனுப்பும் போது அவர்களது குடும்பப் பின்னணி சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற சட்டம் எக்காரணம் கொண்டும் வாபஸ் பெறப்பட மாட்டாது என வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.**

ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்ஜன் ராமநாயக்க கேட்ட வாய்மொழிமூல விடைக்கான கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பெண்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பபைப் பெற்றுச் செல்வ தற்கு முன்னர் அவர்களுக்கு 5 வயதுக்கு குறைந்த குழந்தைகள் உள்ள னவா? என்பது உள்ளிட்ட சகல குடும்ப விபரங்களும் சமர்ப்பிக்கப் படல் வேண்டும்.

சமர்ப்பிக்கப்படுகின்ற விபரங்கள் தொடர்பில் பணியகம் திருத்தியடைந்தால் மட்டுமே அவரை வெளி நாடு செல்ல அனுமதிக்க முடியும்.

இச்சட்டத்திற்கு எதிராக சிலர் உச்ச நீதிமன்றத்திற்கு சென்றுள்ளார்கள். ஆனால், அந்தச் சட்டம் எக்காரணம் கொண்டும் வாபஸ் பெறப்படமாட்டாது. உச்ச நீதிமன்றமும் இதற்கு சாதகமான தீர்ப்பையே வழங்கியிருக்கிறது.

இதன் காரணமாக 50 வீதத்திலிருந்து 37 வீதமாக பெண்கள் வெளிநாடு செல்வது குறைவடைந்துள்ளது.

தாய்மார் வெளிநாடு செல்வதாலேயே சிறுவர், சிறுமியர் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாவதாகவும் பதிவாகியுள்ளது.

இதேவேளை, கடந்த ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் சவுதி அரசு வேலை வாய்ப்பு காலம் முடிந்த இலங்கையருக்கு பொது மன்னிப்பு காலத்தை வழங்கியது.

இதனைப் பயன்படுத்தி பெருந் தொகையான இலங்கையர் நாடு திரும்பியுள்ளனர். அத்துடன் சுமார் 5ஆயிரத்து 500 பேர் வரையில் தமது விசா முறைகளை சரிசெய்து கொண்டு சட்டப்படி அந்த நாட்டில் தொடர்ந்தும் தங்கியுள்ளனர்.

2012 இல் ரியாத்திலிருந்து 960 பேரை திருப்பி அழைப்பதற்காக 29.1 மில்லியன் ரூபாவை நாம் செலவு செய்துள்ளோம்.



2013 இல் ஜுலை மாதம் வரையில் ரியாத்திலிருந்து 540 பேரை அழைப்பதற்காக 12 மில்லியன் ரூபாவையும் ஜித்தாவிலிருந்து 65 பேரை அழைப்பதற்காக 2 மில்லியன் ரூபாவையும் செலவு செய்துள்ளோம்.

இதேபோன்று சவுதியில் ஒலாயா தடுப்பு முகாமில் சுமார் 140 பேர் வரையில் இருப்பதாகவே எம்மிடத்தில் பதிவாகியுள்ளது. அவர்கள் விரைவில் திருப்பி அழைக்கப் படவுள்ளனர். அந்நாட்டிலிருந்து கிடைக்கப்பெற்ற தரவுகளின்படி ஜித்தா பாலத்துக்கு கீழ் இலங்கையர் எவரும் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# வடமாகாணத்தில் 90 ஆயிரம் வாக்காளர்கள் சேர்ப்பு

(கொழும்பு)

வடமாகாணத்திலிருந்து 90 ஆயி ரம் வாக்காளர்கள் 2013 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் இடாப் பில் சேர்க்கப்படவுள்ளதாக தேர்தல்திணைக்கள ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போதே அவர்மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,2012ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியல் இவ்வருடம் டிசெம்பர் மாதம் பூர்த்தியாகிவிடும்.

2012 இல் புதிதாக சேர்க்கப்பட்ட வாக்காளர்களில் 10 சதவீதமானோர் வடமாகாணத்தைச் சேர்ந்தவர்கள்.

2013ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலும் டிசெம்பர் மாதம் 23 இல் தயாராக்கப்பட்டுவிடும்.

இவ்வருட வாக்காளர் பட்டியலில் 1.2 மில்லியன் வாக்காளர்கள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள அதே வேளை, 71 இலட்சத்து 75ஆயிரத்து 12 வாக்காளர்கள் அகற்றப்பட்டுள்ளனர். அத்துடன் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விருப்பு வாக்கு முறைமையில் மாற்றம் செய்த தேர்தல் ஆணையாளர் யோசனையை முன்வைத்துள்ளார என்றார். (அ-2)

# மகள் மீது பாலியல் துஷ்பிரயோகம்; தந்தைக்கு 100 ஆண்டுகள் சிறை

(கொழும்பு)

மகளை பாலியல் ரீதியாக வன்கொடுமை செய்த தந்தைக்கு 100 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பத்து வயதான தனது மகளை குறித்த நபர் பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த சந்தேக நபருக்கு எதிராக 12 குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டிருந்தன.

48 வயதான பாணந்துறையைச் சேர்ந்த நபருக்கே இவ்வாறு கம்பஹா நீதிமன்றம் 100 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

90ஆயிரம் ரூபா அபராதமும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஒரு இலட்ச ரூபா நட்ட ஈட்டையும் வழங்க வேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த அபராதத்தை செலுத்தத் தவறினால் மேலும் ஒன்பது ஆண்டுகள் தண்டனை அனுபவிக்க நேரிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


குடும்ப அலகில் தந்தைக்கு மிக முக்கியமான இடம் காணப்படுகின்றது. பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியது தந்தையின் கட்மையாகும். அவ்வாறான கடமையும் பொறுப்பும் உடைய தந்தை மகளை பாலியல் ரீதியாக துன்புறுத்துவது சமூகத்தினால் நிராகரிக்கப்பட வேண்டிய செயலாகும் என தண்டனை விதித்த கம்பஹா நீதிமன்ற நீதவான் பியசீலி விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். (அ-2)

## சேது சமுத்திர தாக்கம் குறித்து அறிக்கை சமர்ப்பிப்பு

சேது சமுத்திர திட்டம் காரணமாக ஏற்படவுள்ள தாக்கம் தொடர்பில் இலங்கை அரசாங்கம், இந்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது.

இலங்கையின் நிபுணர்களால் இது தொடர்பான அறிக்கை ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

இந்துக்களின் முக்கிய தளம் என்ற அடிப்படையில் சேது சமுத்திர திட்டத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணை இன்று சென்னையில் இடம்பெறவுள்ளது. இந்நிலையிலேயே இலங்கை அரசாங்கத்தின் அறிக்கை அங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (அ-2)









யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வடமாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் மாணவன் ஒருவனுக்கு பரிசை வழங்குவதையும் மாணவர்களின் கலைநிகழ்வையும் படங்களில் காணலாம்.

# சுதந்திரப் போராட்டத்தில் இலங்கைக்கு வெற்றியாம்

## வியட்நாம் கூறுகின்றது

(கொழும்பு)

இலங்கைக்கு சுபீட்சமான எதிர்காலமொன்று உள்ளதெனவும் இலங்கை தனது பயணத்தில் அனைத்தையும் வெற்றி கொள்ளும காலம் வெகு தொலை விலில்லை எனவும் வியட்நாம் பிரதிப்பிரதமர் பாம் பின் மிங் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கொழும்பு தேசிய நூலகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரை நிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

வியட்நாமின் சுதந்திரப் போராட்டத்தில் இலங்கை மக்கள் வழங்கியுள்ள ஒத்துழைப்பை வியட்நாம் மக்கள் எப்போதும் பெருமிதத்துடன் பாராட்டுகின்றனர்.

இலங்கையும் வியட்நாமும் சுதந்திரத்திற்காகப் போராடி வெற்றி கண்ட நாடுகளாகும். வியட்நாமின் தேசியத் தலைவர் தனது வாழ்நாளை சுதந்திரத்துக்காக அர்ப்பணித்தவர். இவர் இலங்கைக்கு மூன்று தடவைகள் விஜயம் செய்துள்ளார்.

இலங்கையும் சுதந்திரத்துக்காக வெற்றிகண்ட நாடு. இலங்கைக்கும் வியட்நாமுக்குமிடையில் சிறந்த நட்புறவும் கலாசார ரீதியான பிணைப்புமுள்ளது.

இரு நாடுகளுக்கிடையிலும் சிறந்த நல்லுறவு மட்டுமன்றி சர்வதேச அரங்கில்இரு நாடுகளும் ஒன்றிணைந்து செயற்பட்டு வந்துள்ளன.

இந்த வகையில் இலங்கையில் எமது தேசிய தலைவரின் உருவச் சிலையை நிறுவுவதில் இலங்கை ஜனாதிபதி மற்றும் நாட்டு மக்கள் மேற்கொண்ட செயற்பாடுகளுக்காக வியட்நாம் அரசாங்கத்தினதும் மக்களினதும் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.(அ-2)

# வடக்கு-கிழக்கில் பாரிய அபிவிருத்தி முன்னெடுப்பு

## பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இராணுவ ஆட்சி நடை பெற்றால் எவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் தேர்தலில் வெற்றியீட்ட முடியும் என புனர்வாழ்வு பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

வடக்கில் இராணுவ ஆட்சி நிலவுவதாக காண்பிக்க கூட்டமைப்பு முயற்சிக்கின்றது. முன் எப்போதுமே இல்லாத வகையில் வடக்கு-கிழக்கில் பாரியளவில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது.

இதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு நன்றி தெரிவிக்க வேண்டும். நாடு அரிசி உற்பத்தியில் இன்று தன்னிறைவு அடைந்துள்ளது. எந்தவொரு விடயத்திலும் குற்றம் குறைகாண்பது இலகு, ஆனால் அவற்றைப் பாராட்டுவது மட்டும் மிகவும் அரிது.

வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கம் மக்களுக்கு நலன்களை வழங்கியுள்ளது.

குறிப்பாக வடக்கு- கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் விடுதி பிரச்சினைக்கு இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் தீர்வு வழங்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



# உயரிய தியாகங்களின் கூட்டு நினைவு நாள்

தமிழர் மனமெங்கும் இனம்புரியாத பெரும் எழுச்சியும் ஜோதிப் பெரு ஒளி ஒன்றின் முன் நிற்பதுபோன்ற உணர்வும் ஏற்பட்டிருக்கும்.

இந்த நாட்களில் எங்கிருந்துதான் அந்த ஒளிவீச்சு மனதுக்கும் வருகின்றதோ புரியவில்லை. அதுதான் மாவீரர்கள் என்ற மகத்துவங்களின் அர்ப்பணிப்புக்களின் சக்தியோ தெரியவில்லை.

மிக நீண்ட மாவீரர் பட்டியல் விரிந்து கிடக்கிறது. தெரிந்த தெரியாத பெயர்கள் என்றும், ஆண்கள், பெண்கள் என்ற பெயர்கள், உடல் சிதறும் கணம் தெரிந்தும் நிதானத்துடன் நடந்து இலக்கை நெருங்கி காற்றுடன் கலந்தவர்கள், கடலின் ஆழத்துள் நீள் துயில் கொள்பவர்கள், வானத்தில் வல்லமை நிகழ்த்திடும் பொழுதில் கரைந்தவர்கள் என்று ஐம்பெரும் பூதங்களுக்குள்ளும் கலந்தவர்களாக ஆயிரம் விதமான அர்ப்பணிப்புக்களின் பெயர்கள். எங்கள் தேசப் புதல்வர்களின் பெயர்கள்.

என்ன செய்யப்போகின்றோம் இந்த மாவீரர்நாளிலும்....? இந்த மாவீரர்நாளிலும் போய் நின்று மனம் உருகி பூ தூவுவோம்.

வீழ்வதற்குத் தயாராக நிற்கும் கண்ணீர்த்துளிகளுடன் எங்கள் தேசத்துச் செல்வங்களை நினைத்து கைகூப்பி தொழுவோம். நெஞ்சுருகுவோம். மணியடித்து எழுந்துவரும் மாவீரர் பாடல்- **ஒளியாகி எங்கள் மூச்சாகி நாளை முடிசூடும் தமிழ்மீது உறுதி** பாடலுக்கு எல்லோரும் ஒன்று கூடி தீபம் ஏற்றி நிற்போம்.

இத்தனையும் நிச்சயமாக செய்தே ஆகவேண்டும்தான். எங்களுக்காக தங்களையே அர்ப்பணித்து மரணித்த எம் மாவீரர்களுக்கான நன்றியாக இத்தனையும் செய்தே ஆகவேண்டும். ஆனால், அதன் பின்னர்....? இத்தனையும் செய்துவிட்டு வீடு திரும்பி எல்லா நினைவுகளையும் தூக்கி எறிந்துவிட்டு மீண்டும் இயந்திர வாழ்வினுள் கரைந்துவிடப் போகின்றோமா?

ஏதோ ஒரு சடங்குக்காக போய் மலர் தூவி வந்துவிட்டால் மட்டும் போதுமா? போன மாவீரர் நாள் இதோ முந்தாநாள் தான் வந்துபோனது போல கண்ணுக்குள் நிற்கிறது. போன மாவீரர் நாளில் தூவிவிட்டு வந்த கார்த்திகைப்பூவின் வாசம் இன்னும் கைக்குள்ளுள் மணக்கிறது.

போன மாவீரர் நாளிலும் போனோம். வந்தோம். ஒரு வருடமாகிப் போகிறது. மாவீரரின் கனவை நனவாக்க என்ன செய்தோம் இந்த ஒரு வருடத்தில்...? எம் நெஞ்சைத் தொட்டு பதில் கேட்டால் வெறுமைதான் பதிலாக எழுகிறது.

இம்முறையும் அவ்வாறே போய்வந்து பூத்தூவி, பாப்புணைந்து மீண்டும் அடுத்த வருட மாவீரர் நாளில் சந்திப்பதாக சொல்லி வரப் போகின்றோமா? மாவீரர் நாள், சொல்லும் போதே நெஞ்சு விம்மவில்லையா? இதயத்துக்குள் சுடர் ஒன்று எரியும் உணர்வு மேலிடவில்லையா? ஒவ்வொருவராக கண்களுக்குள் மாவீரர் நினைவுகள் வந்து போகவில்லையா?

எத்தனை உயரிய தியாகங்களின் கூட்டு நினைவு நாள் இது. எத்தனை விதமான அர்ப்பணங்கள்.

சுற்றிவர எதிரி சூழ்ந்து நின்ற போதிலும் காயமடைந்த தன்னை சுட்டுவிட்டு ஆயுதத்தை எடுத்துக்கொண்டு தப்பும்படி இறுதி நேரத்து வேண்டுகோள் விடுத்து வீரச்சாவு கண்டவர்கள். அதனையே நிறைவேற்ற தயங்கிய தோழனிடம் தன்னைச் சுட்டு விட்டுத் தப்பும்படி உத்தரவிட்டு மரணத்தை ஏற்றுக் கொண்டவர்கள்.

எதிரிக்கு தனது முகம் தெரிந்துவிட்டால் நடக்க திட்டமிட்டிருக்கும் செயற்பாடுகள் முடங்கிவிடும் என்பதால் கொழுந்துவிட்டெரியும் தீக்குள் தமது முகத்தைக் கருக்கி மரணித்தவர்கள்.

ஆயுதமும் சயனைட்டும் இல்லாத ஒரு பொழுதில் தப்பிக்க இனி சந்தர்ப்பம் ஏதும் இல்லையென்று நிச்சயமாக தெரிந்து கொண்டு மரக்கிளையிலும் சுவரிலும் மருத்துவமனைக் கட்டடத்திலும் தமது தலைகளை பலம்கொண்டு மோதி மரணத்தை ஏற்ற வேங்கைகள்.

கடற்பயணங்களின்போது வெடித்த படகுகளில் இருந்து தான்மட்டும் நீந்தித் தப்பிக்காது நீந்தத் தெரியாத தோழனையும் காப்பாற்ற இறுதிவரை முயற்சித்து அவனுடனேயே கடலுடன் சங்கமமானவர்கள்.

வல்லாதிக்க கடற்படை சுற்றிவர நின்று சரணடைய என்று எக்காளமிட்டபோது அவன் முன்னாலேயே கப்பலை குண்டு வைத்து தகர்த்து தீயுடன் கருகியவர்கள்.

சிறியதோ பெரியதோ எதுவாகினும் அது எதிரியின் காவலரண் ஆகின் அதனை மீட்கும் முயற்சியில் வெட்டவெளியில் குண்டு மழைக்குள்ளாக இரத்தக்குளியல் செய்தவர்கள்.

தப்பி ஓடும் எதிரிகள் அனைவரையும் அழிப்பதற்காக தான் இருக்கும் இடத்தையே குறிவைத்து எறிகணைகளை வீசும்படி கூறிவிட்டு போய்விட்டார்கள்...

இப்படியாக இப்படியாக வார்த்தைகளாலும் வர்ணிப்புக்களாலும் கூறிவிடமுடியாத ஈகங்களை நினைந்து வணங்கி துதிக்கும் நாள் இது. இது வெறுமனே ஒரு திகதி அல்ல. விடுதலைக்கா ஒரு இனம் செய்துவிட்ட அளப்பெரும தியாகங்களின் மொத்த நினைவு.

விடுதலைக்காக இந்த இனத்தின் மனிதர்கள் தமது இனிய உயிர்களையும் அர்ப்பணிக்க எழுந்து நின்றார்கள் என்பதன் ஒரே நிரூபணம் மாவீரர் நாள்.

பேதங்களும் கூறுகளும் நிறைந்த தமிழர் தாயகத்தின் ஒருமுனையிலிருந்து மறுமுனைவரை ஒரே தலைமையின் கீழ் விடுதலைக்காக உயிரையும் தியாகம் தரத்தயாராக ஆயிரமாயிரமாய் தமிழினம் திரண்டது என்ற வரலாற்றுப் பதிவு தான் மாவீரர் நாள்..

எப்படியான ஒரு பொழுதில் இம்முறை மாவீரர் நாள் வந்துள்ளது. மிகவும் ஒரு அவலமான ஒரு பொழுது எங்கள் இனத்துக்கு இப்போது நிகழ்ந்துகொண்டிருக்கிறது. எங்களின் தாய்மண் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் தனது தேசிய அடையாளத்தை இழந்து குறுகிக்கொண்டிருக்கிறது.

பாரம்பரிய தமிழர்நிலம் என்ற தேசியக் கூறு மிகவும் கெட்டித்தனமாக சிங்களத்தால் அழிக்கப்பட்டு வருகிறது. எமது மக்கள் ஒருவகையான பேரின இராணுவ மேலாண்மைக்குள் முடக்கப்பட்டு இருக்கிறார்கள்.

அப்படியான வாழ்வே அவர்களுக்கு பழக்கமான ஒன்றாக ஆக்கப்பட்டும் வருகின்றது. பெருமரத்தை பற்றிப் படர்ந்து சுற்றி வளரும் சிறுகொடிகள் போல் எம் இனம் ஆக்கப்பட்டு வருகிறது.

எல்லாவற்றிலும் மேலாக எங்கும் வறுமையே கெலோச்சுகிறது.

குழந்தைகளுக்கு வயிறார உணவு கொடுக்கவும் முடியாத ஏக்கத்தில் பெற்றோர் பேதலித்துப் போயிருக்கிறார்கள்.

அன்றாட உழைப்புக்கள் ஏதுமில்லாது கையேந்தும் நிலையில் எம் இனம் வீதியில் நிற்கிறது. இப்படியான ஒரு கொடுந்துயரப்பொழுதில்தான் மாவீரர் நாள் வந்திருக்கிறது.

இந்த மக்களின் நிம்மதியான, சுபீட்சமான வாழ்வுக்காகவே மாவீரர்கள் தங்களையே ஆகுதி ஆக்கினார்கள். மாவீரர்களை வணங்கிவிட்டு அவர்கள் நேசித்த இந்த மக்களை மறந்துவிடப் போகின்றோமா? மாவீரர்கள் எம்மிடம் எதிர்பார்த்தது எது?

மாவீரன் ஒவ்வொருவனும் வீழும்போதும் அவனது கனவும், அவனது விருப்பமும், அவனது எதிர்பார்ப்பும் ஒன்றே ஒன்றுதான். தாங்கள் நெஞ்சுக்குள் தாங்கி போரிட்ட இலட்சியக் கனவை வெனிறெடுக்க நாளை நாம் ஒன்றாக கூடுவோம் என்பதுதான்.

எதிரியும் எதிரிக்கு முண்டு கொடுத்த சக்திகளும் எம்மை வென்றது ஒன்றும் பெரிதல்ல.

ஆனால், இத்தனை அழிவுக்குப் பின்னரும் நாம் ஒன்றுபடாமல் சிதறிப்போய் நிற்கிறோம் அதுதான் மோசமானது.

இந்த மாவீரர் தினத்துடன் அனைவரும் ஒன்றிணையும் சபதம் ஓங்கி ஒலிக்க வேண்டும்.

நாம் எதிரிக்கு எதிராக ஒன்றானோம் என்ற செய்தி தாயகத்தின் காற்றில் கலந்து மாவீரர் காதுகளில் போய் விழ வேண்டும். எங்களிடம் இருக்கும் ஒரே அரசியலும் மாவீரர் நாள்தான். இந்த இனத்திடம் எஞ்சி இருக்கும் ஒற்றை ஆயுதமும் மாவீரர் நாள்தான்.



மானுட வரலாற்றிலேயே இதுவரை காணப்படாத அர்ப்பணங்களும் ஈகங்களும் தியாகங்களும் நிகழ்த்தப்பட்டு அதன் விளைவாக உருவாகியிருக்கும் விடுதலை அரசியலை இன்னும் மிகவேகமாக முன்னெடுப்போம் என்று திடசங்கற்பம் பூணுவோம்.

தமிழ் தேசத்தின் இறைமை என்பதை தமது பல்லாயிரம் உயிர் அர்ப்பணிப்புக்கள் மூலம் இன்னும் இன்னும் யதார்த்தமாக்கி அதனை எம் முன்னால் ஒரு பெரும் சக்தியாக வியாபிக்க வைத்திருக்கும் மாவீரர்களுக்கான நன்றியாக நாமும் அந்த தமிழர் தேச இறைமையை இன்னும் வேகமாக சத்தியமானதாகவும் சாத்தியமானதாகவும் உருவாக்குவோம்.

வெறும் சம்பிரதாயமான நினைவாக நின்று திரும்பாமல் மனங்களுக்குள் உறுதி எடுப்போம். விடுதலைப் போரின் விழுப்புண் காயங்களாக வறுமையுடன் அல்லல்படும் போராளிக் குடும்பங்களையும் சிறையில் வாடும் எம் உறவுகளையும் கைதூக்கி விடுவோம் என்றும் மாவீரர் கண்ட கனவான சுதந்திர வாழ்வை பெற்றுத்தர ஓயாது செயற்படுவோம் என்றும் உறுதி கொள்வோம்.

-ச.ச.முத்து-

# கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை 2013 (டிசெம்பர்) மாதிரி வினாத்தாள்/ மேல் மாகாணம்


❖ பகுதி (A) இல் தரப்பட்டுள்ள நான்கு வினாக்களுக்கும் தரப்பட்டுள்ள இடைவெளிகளில் விடைகளை எழுதவும்
❖ பகுதி (B) இல் தரப்பட்டுள்ள உயிரியல், இரசாயனவியல், ஆகிய ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஒரு வினாவைத் தெரிவு செய்து மொத்தம் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.
❖ பகுதி (A) கட்டமைப்பு வினா
எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்

**விஞ்ஞானம்**
**பகுதி -II**

(நேற்றைய தொடர்ச்சி...)

### பௌதீகவியல்

9. (A) இரண்டு மரங்களுக்கிடையே இறுக்கமாக இழுத்துக் கட்டப்பட்ட கயிற்றின் மீது பழம் ஒன்று விழுந்தபோது ஏற்பட்ட அலையின் வடிவத்தைக் கீழே காணலாம்.




இங்கு அதிர்வின்போது துணிக்கைகள் அடையும் இடப்பெயர்ச்சியைப் அம்புக்குறிகள் காட்டுகின்றன.

i. இவ் ஒலியலையில் (E,F) எனக் குறிக்கப்பட்டுள்ள அலையின் இயல்பு எது? (புள்ளி 1)

ii. A,C இற்கு இடைப்பட்ட நேர்கோட்டுத் தூரத்தை அழைக்கும் பெயர் யாது? (புள்ளி 1)


iii. வளியினூடாக ஒரு வகை அலை பயணிக்கின்றது?
a. வளியில் பயணிக்கும் பொறிமுறை அலை வகை எது? (புள்ளி 1)
b. அவ் அலையின் தன்மையை விளக்குக? (புள்ளி 1)

iv. பொறிமுறை அலைக்கும் மின்காந்த அலைக்கும் இடையில் காணப்படும் ஒற்றுமை ஒன்றையும் வேற்றுமை ஒன்றையும் குறிப்பிடுக? (புள்ளிகள் 2)

v.பின்வரும் உபகரணங்களில் பயன்படுத்தப்படும் மின்காந்த அலைவகைகளைக் குறிப்பிடுக?
a. லித்தோரிப்டர் (சிறு நீரகக் கற்களை உடைப்பதற்கு)
b.கைத்தொலைபேசி (புள்ளிகள் 2)

iv. மனிதனுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் இயற்கையில் தோன்றும் பொறிமுறை அலையொன்றின் பெயரைக் குறிப்பிடுக? (புள்ளி 1)

B




படத்தில் வெள்ளொளிக் கற்றையொன்று அரியத்தினூடாக பயணிக்கும் முறையைக் காட்டுகின்றது


i. A,B ஆகிய இடங்களில் காணக் கூடிய நிறங்கள் எவை? (புள்ளிகள் 2)

ii. நீங்கள் மேலே கூறிய நிறங்கள் அவ்விடங்களில் அமைவதற்கு ஒ ளிக்கதிர்களில் உள்ள எவ்வியல்பு காரணமாக அமைகின்றது? (புள்ளி 1)

iii. இத்தோற்றப்பாட்டை எவ்வாறு அழைப்பர்? (புள்ளி 1)

iv. திரை வைக்கப்பட்டுள்ள இடத்தில் குவிவு வில்லையை வைக்கும் போது ஒளிக்கதிர்கள் ஒருங்குகின்றன. வில்லையின் குவியத்தில் திரை வைக்கப்படும் போது தோன்றும் ஒளிப்பொட்டின் நிறம் யாது (புள்ளி 1)

(C)




பருமட்டாக வரையப்பட்ட டைனமோவொன்றின் அமைப்பை மேலே காணலாம். அதன் அருகில் நேரத்துடன் மின்னோட்டம் மாறுபடுவதைக் காட்டும் வரைபு தரப்பட்டுள்ளது.

i. கம்பிச்சுருளில் மின்னோட்டம் தூண்டப்படுவதற்குத் தேவையான காரணியொன்றை குறிப்பிடுக? (புள்ளிகள் 2)

ii. படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு கம்பிச்சுருளின் அமைவு உள்ள போது தோன்றிய மின்னோட்டத்தின் அளவை அருகிலுள்ள வரைபின் எப்புள்ளி காட்டுகின்றது? (புள்ளி 1)

iii. உமது விடைக்கான காரணத்தைக் குறிப்பிடுக? (புள்ளி 1)

vi. வரைபில் B,D சந்தர்ப்பங்களில் டைனமோவில் உற்பத்தி செய்யப்படும் மின்னோட்டத்தின்
a. ஒத்த இயல்பையும் (புள்ளி 1)
b. ஒவ்வாத இயல்பையும் குறிப்பிடுக. (புள்ளி 1)

10. A.கதவின் கைப்பிடியை கையால் தொடும்போது கை குளிர்ந்ததையும் கதவைத் தொடும்போது அவ்வாறு உணர முடியாமலும் இருந்தது. இவ்விரண்டு சந்தர்ப்பங்களினதும் சூழல் நிலைமை மாறவில்லை எனக் கொள்க

i. பித்தளை கைப்பிடியின் வெப்பநிலை 30 °C ஆகவும் கையின் வெப்பநிலை 36.9 °C ஆகவும் காணப்பட்டது எனின் கைப்பிடியை கையால் பிடிக்கும் போது கை குளிர்ந்தமைக்கான காரணம் யாது? (புள்ளி 1)

ii.கதவைத் தொட்ட போது அவ்வாறான குளிர்ச்சி உணராமைக்கான காரணத்தைக் குறிப்பிடுக? (புள்ளி 1)


iii. பித்தளைக் கதவின் பிடியை கையால் தொடர்ந்து பிடித்துக் கொண்டிருக்கும் போது அதன் வெப்பநிலை 35°C வரை அதிகரித்தது எனின் அதுபெற்றுக் கொண்ட வெப்பத்தின் அளவைக் கணிக்க? (புள்ளிகள் 2)

(பித்தளையின் தன்வெப்பக் கொள்ளளவு 4000 $Jkg^{-1}C^{-1}$ கைப்பிடியின் திணிவு 100 g ஆகும்)

B. i. மாணவன் ஒருவன் கதிரையின் மீது ஏறிநின்றான். நான்கு கால்களைக் கொண்ட இக்கதிரையின் ஒரு காலின் தொடுமேற்பரப்பின் நீளம், அகலம் 2 cm ஆக உள்ளபோது கதிரையின் ஒரு காலினால் நிலத்தின் மீது ஏற்படுத்தப்படும் அமுக்கத்தைப் பஸ்கால் அலகில் காண்க? (புள்ளிகள் 2)
(கதிரையின் நிறை புறக்கணிக்கத்தக்கது)

ii. மாணவன் இருந்த கதிரையின் கால் 2 cmஅளவு நிலத்தினுள் அமிழ்ந்தது
a.கதிரை நிலத்தினுள் அமிழ்வதைத் தடுக்க நீர்மேற்கொள்ளும் உபாயமொன்றைக் கூறுக? (புள்ளி 1)
b.இவ் உபாயத்தின் மூலம் கதிரை நிலத்தினுள் அமிழாமல் இருந்தமைக்கான காரணம் யாது? (புள்ளி 1)

C.வீட்டில் உள்ள நீர்த்தாங்கி உருக்கினால் செய்யப்பட்ட கூட்டினுள் பொருத்தப்பட்டுள்ளது. நீர்த்தாங்கியில் 1000 லீற்றர் நீர் காணப்பட்டது. நீரின் அடர்த்தி 1000 $Kg\ m^{-3}$ ஆகும். நீர் தாங்கியில் நீர் காணப்படும் உயரம் 1 m ஆகும்.




i. நீரின் நிறையைக் கணிக்க (புவியீர்ப்பு ஆர்முடுகல் $g=10ms^{-2}$) (புள்ளிகள் 2)

ii. திரவத்தின் மூலம் ஏற்படுத்தப்படும் அமுக்கத்தின் விசேட இயல்புகள் இரண்டைக் குறிப்பிடுக? (புள்ளிகள் 2)

iii. தாங்கியின் அடியில் நீரினால் ஏற்படுத்தப்படும் அமுக்கத்தைக் குறிப்பிடுக? (புள்ளிகள் 2)

E. தோட்டத்தில் உள்ள மாமரத்திற்கு வரும் பறவைகளை விரட்டுவதற்கு கவண் ஒன்றைச் சிறுவன் பயன்படுத்தினான்.

i. கவண் ஒன்றை அமைக்கப்பயன்படுத்திய இறப்பர் கொண்டுள்ள இயல்பொன்றைக் குறிப்பிடுக? (புள்ளி 1)

ii. இழுக்கப்பட்ட இறப்பரில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள சக்தி யாது? (புள்ளி 1)

iii. கவணினால் நிலைக்குத்தாக மேல்நோக்கி எறியப்பட்ட கல்லின் ஆரம்ப வேகம் $20ms^{-1}$ ஆகக் காணப்பட்டது. புவியீர்ப்பு ஆர்முடுகல் $10ms^{-2}$ ஆகும். கல்லு மீண்டும் நிலத்தை அடையும் போது கொண்டுள்ள வேகத்தைக் காண்க. (வளியின் தடையை புறக்கணிக்க) (புள்ளி 1)

iv. கல்லின் நிறை 10g ஆக உள்ள போது கவணில் இருந்து கல் புறப்படும் போது அது கொண்டுள்ள இயக்கச் சக்தியைக் காண்க? (புள்ளிகள் 2)

# ஐப்பசி மாதம் பிறந்தவர்களின் குணாதிசயங்கள்




(சென்றவாரத் தொடர்ச்சி...)

நீங்கள் உங்கள் கடந்த கால வாழ்க்கையில் நடந்தவற்றை உன்னிப்பாகச் சிந்தித்துக் கொண்டே எதிர்கால வாழ்விற்கான திட்டங்களை வகுத்துக் கொள்வீர்கள். உங்களுக்கு ஒரு வகையான தீர்க்க தரிசன ஞானம் உண்டாகும்! எனவே, உங்கள் வாழ்க்கையையோ, உங்களுக்கு அந்தரங்கமாக இருப்பவரின் வாழ்க்கையையோ ஏதாவது ஒரு செயல் எதிர்காலத்தில் ஏற்பட்டு பாதிக்கும் என்பதைக் கூட முன்னதாக அறிந்து கொள்ளும் ஆற்றலும் உங்களுக்கு உண்டாகும்.

எனவே நீங்கள் செய்யும் செயல்கள் சிறப்பானவையாகவே அமையும். எதையும் அரைகுறையாகச் செய்யமாட்டீர்கள். நீங்கள் ஜோதிட சாஸ்திரத்திலும் வல்லவர்களாக விளங்கக் கூடும். நீங்கள் எந்தெந்தக் காலத்தில் என்னென்ன நடக்கும் என்பதைக் கணித முறைப்படிக் கணித்தும் தீர்க்க ரீதியில் சிந்தித்தும் கூறுவீர்கள்.

ஆயினும் நீங்கள் சிந்தித்தவைகளைத் தெளிவாக எடுத்துச் சொல்லக் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கும்! கார்த்திகை விருச்சிகக் காரர்கள் பலருக்கு காதுகளும் கண்களும் சற்று மந்தமாக இருக்கும் என்று சொல்வது உண்டு. உண்மையில் செவிடு என்று அர்த்தமல்ல இவர்கள் பிறந்த சமயத்தில் இடியும் மின்னலும் மழையுமாக இருந்திருக்குமாகையால் பிற ந்த சமயத்தில் குழந்தையாக இருந்த இவர்களுடைய காதுகளின் சவ்வுத் தோல் (Ear- drum) சிதைவுறக் கூடும் என்ற காரணத்தால் சொல்வார்கள்.

உண்மையில் இவர்கள் ஏதாவது ஒரு செயலில் இறங்கி விட்டால் அதே கவனமாய் இருப்பார்கள். மற்றவர்களின் பேச்சையும் செயலையும் கவனிக்க மாட்டார்கள். மற்றநபர்கள் பேசினால் அந்த பேச்சை காதில் வாங்கிக் கொள்ளாமலேயே கருமமே கண்ணாக இருப்பார்கள். இதுவே அவர்கள் சொல்வதற்கு அர்த்தமாகும்.

பொதுவாக நீங்கள் கல்வியிலோ அற்ப அறிவிலோ சிறந்து விளங்குவீர்கள். தன்னையும் தன் சுற்றுப்புறத்தையும் மறந்து கவனம் செலுத்துவீர்கள். இளமையிலேயே உல்க அனுபவத்தை பெற்று வயதில் மூத்தவர்கள் அடைந்த அனுபவத்தையும் கூட இளமைப் பருவத்திலேயே அடைந்து விடுவீர்கள். சமநீதி, சமதர்மம் என்பவற்றில் உங்களுக்கு விருப்பம் அதிகம் உண்டாகும். உங்களில் பலருக்குச் சிறு வயதில் தாயின் ஆதரவை விட தந்தையின் ஆதரவே அதிகமாக இருக்கும். தந்தையிடம் அதிக மரியாதையும், அன்பும் கொள்வீர்கள்.

உங்களில் பலருக்கு இளவயதில் சில வகைச் சோதனைகளால் சோர்வடைய நேரும். ஆயினும் சகிப்புத் தன்மையால் முன்னேற்றமடைய மார்க்கம் உண்டாகும். நீங்கள் பொதுவாக பொறுப்பான காரியங்களை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். நீங்கள் அவசரமும் ஆத்திரமும் இல்லாமல் செயற்படுவீர்கள்.

சமய சந்தர்ப்பம் கருதிச் செயல்களை செய்வதோடு சிலர் தங்கள் கொள்கையை விட்டாவது தன் காரியத்தைச் சாதித்து கொள்வார்கள்.

எல்லாவற்றிலும் சமநோக்குடைய நீங்கள் ஆக்க வேலைகளில் ஊக்கமுடையவர்களாகத் திகழ்வீர்கள். அவசரத்திலும் ஆத்திரத்திலும் உங்களில் பலர் தங்கள் அறிவைச் சரிவரப் பயன்படுத்தத் தவறி விடுவதும் உண்டு. ஆயினும் மனதில் ஆத்திரம், அவசரம் ஆகியவை அதிக நேரம் தங்கியிராது. நீங்கள் மனவுறுதி மிகுந்தவர்கள்.

வைராக்கிய சீலர்கள். ஒரு விடயத்தில் நீங்கள் ஒரு முடிவிற்கு வந்து விட்டால் அதை நீங்களாகவே மாற்றிக் கொள்ள நினைத்தாலும் மாற்ற முடியாமற் போய்விடும். நீங்கள் பொருள் நிலையிலும் வாழ்க்கை முறையிலும் தன்னை விடத் தாழ்ந்தவர்களிடமும் நெருங்கிப் பழகக் கூடியவர்களாக விளங்குவீர்கள். உங்களுக்குப் பானங்கள் அருந்துவதில் மிகவும் பிரியம் உண்டு. உங்களால் தாகத்தைத் தாங்க முடியாது.

உங்களுடைய மனதைப் பணத்தாலும் பொருளாலும் மாற்ற இயலாது. உங்களுக்கு ஞான மார்க்கத்தில் மனநாட்டம் உண்டாகும். உங்களுக்குக் கடவுள் நம்பிக்கை அதிகம் இருக்கும். நீங்கள் பகுத்தறிவுவாதியாக பலப்படப் பேசினாலும் உள்ளூரக் கடவுள் நம்பிக்கை ஊடுருவி நிற்கும். பக்கா நாஸ்திகர்களாக இருந்தாலோ பிற்காலத்தில் பெரும் பக்தர்களாக மாறி விடுவீர்கள்.

பொதுவாக நீங்கள் உண்மைக்கும் சத்தியத்திற்கும் கட்டுப்பட்டவர்கள். மாந்திரீக விடயங்களையும் மதிப்பவர்கள். உங்களில் பலர் கடவுள் தெய்வ பக்தி ஆகியவற்றைத் தவிர ஏனையவை அனைத்தையம் பெரிதாகக் கருதமாட்டீர்கள். கண்ணியமும் தாராள குணமும் உடைய நீங்கள் பொருளாதார விடயத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பீர்கள். உங்களுக்கு சாமர்த்தியம் அமைந்திருப்பதைப் போலவே சில சமயங்களில் அகம்பாவமும் சுயநலமும் கூட இயல்பாகத் தோன்றக் கூடும். நீங்கள் எல்லோரிடமும் சரளமாகப் பழகிவிட மாட்டீர்கள். பழகியவர்களிடம் உங்கள் சொந்த அந்தரங்க விடயங்களில் எதையும் அவ்வப்போது வெளியிடவும் மாட்டீர்கள். உங்கள் குறிக்கோளை பிறருக்காக விட்டுக் கொடுக்கவும்மாட்டீர்கள்.

தன் சாமர்த்தியத்தையும் அனுபவத்தையும் கல்வித் திறனையும் சமயத்திற்குப் பயன்படுத்திக் கொள்வதில் நீங்கள் மிகவும் வல்லவர்களாகவே திகழ்வீர்கள்.

தன்னைப் பற்றிப் புறங் கூறுபவர்களையும் தனக்குக் கேடு விளைவிப்பவர்களையும் வஞ்சம் தீர்த்துக் கொள்வதில் உங்களில் சிலர் வல்லவராவீர்கள். சந்தர்ப்பம் கருதி அழிவுச் செய்யும் வேலையைக் கூட சிலர் இழிவாகக் கருத மாட்டார்கள். பழி வாங்கும் வேலையக் கூட சிலர் அழிவாகக் கருத மாட்டார்கள். பழி வாங்கும் உணர்ச்சி உங்கள் பிறவியிலேயே வேரூன்றியிருக்குமாதலால் அதை வளர விடாமல் தவிர்த்துக் கொள்வதே நல்லதாகும்.

நீங்கள் பிறவியிலேயே நீறு பூத்த நெருப்பைப் போன்றவர்கள். உங்களுக்கு கோபம் வருவது தெரியாது. வந்துவிட்டால் உங்களுக்கே உங்கள் தலைகால் தெரியாது. கோபத்தையடக்குவது நீண்ட நாட்கள் பழகினால் தான் முடியுமே தவிர அடக்க அடக்க கோபம் பொங்கிக் கொண்டேயிருக்கும். (தொடரும்)

# பொருட்களின் விலை அதிகரிப்புக்கு ஒருபோதும் இடமளியோம்

## வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு

அத்தியாவசிய பொருட்களின் விலையை அதிகரிப்பதற்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்,

"பொருட்களின் விலை உயர்வடை யும் என்ற அச்சம் பொதுமக்களுக்களிடையே ஏற்பட்டுள்ளது. ஊடகங்களிலும் செய்தி வெளியிடபட்டுள்ளது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை அதிகரிப்பதற்கு இடமளிக்கப்போவதில்லை என நான் பொறுப்புடன் கூறிக் கொள்கின்றேன். பண்டிகை காலம் வரை தேவையான உணவுப் பொருட்களை நாம் விநியோகித்துள்ளோம். அச்சம் கொள்ள வேண்டாம் என பொதுமக்களிடம் கூறுகின்றோம். வரிப்பணம் அதிகரிக்கப்பட மாடடாது. பொருட்களின் விலை அதிகரிக்கப்படமாட்டாது. அரிசி விலை அதிகரிக்கப்படவுள்ளதாக பல கருத்துக்கள் கூறப்பட்டன. அரிசிக்கு நிர்ணய விலையொன்று காணப்படுகின்றது. 60 தொடக்கம் 70 ரூபாவும், சம்பா 70 ரூபாவாகவும், நாட்டரிசி 60 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வரவு செலவுத் திட்டத்தில் நெல்லின் கொள்வனவு விலையை அதிகரிக்க வரவு செலவுத் திட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. நிர்ணய விலை தொடர்பில் வர்த்தகர்களை அசௌகரியத்திற்குள்ளாக்க கூடாது எனவும் நுகர்வோர் அதிகார சபை தீர்மானித்துள்ளது"

இதேவேளை, பால்மா விலையை அதிகரிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

"மூன்று மாதங்களாக நிறுவனங்கள் பால்மா விலையை அதிகரித்து தருமாறு வேண்டுகோள் விடுத்த வண்ணமுள்ளன. உலக சந்தையில் ஒரு தொன் பால்மாவின் விலை 5 ஆயிரம் டொலர்களாக அதிகரித்துள்ளது. ஒரு தொன் 3 ஆயிரத்து 700 டொலர்களாக காணப்பட்ட போதே நாம் விலை தொடர்பில் தீர்மானித் தோம். கடந்த ஆண்டு ஏழு மாதங் களுக்குள் பால்மாவை இலாபகரமாக கொண்டு வந்துள்ளனர். 6 மாதங்கள் அதிக விலையில் பால் மாவை கொண்டு வந்துள்ளனர். நியா யத்தை நிலை நாட்டுவதற்கு நாம் இருக்கினறோம்." என்றார். (அ-2)

# இலங். தமிழர் தொடர்பில் சென்னையில் மாநாடு

(கொழும்பு)

இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் தமிழ்நாடு தனிமைப்படுத்தப்படுவது தொடர்பில் இந்திய காங்கிரஸ் கட்சி சென்னையில் எதிர்வரும் 30 ஆம் திகதி மாநாடு ஒன்றை அமைச்சர் பி. சிதம்பரம் தலைமையில் ஒழுங்கு செய்துள்ளது.

இலங்கை தமிழர்களின் உரிமைகளும் இந்தியாவின் நிலைப்பாடும் என்ற தலைப்பில் நடத்தப்படவுள்ள இம் மாநாட்டில் இந்த புத்திஜீவிகள், கட்சி பிரதிநிதிகள் உட்பட்ட பலரும் பங்கேற்கவுள்ளனர்.

அமைச்சர் சிதம்பரத்தின் மகனான கார்த்தி சிதம்பரத்தின் தகவல்படி, இலங்கை தமிழர் பிரச்சினையில் இந்திய அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து முரண்பட்ட கருத்துக்கள் வெளியாகியுள்ள நிலையிலேயே இந்த மாநாடு நடத்தப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ-2)

# வடக்கு வாக்காளர் பதிவு தொடர்பில் தேசப்பிரியவுடன் கலந்துரையாடல்

(கொழும்பு)

வடக்கில் வாக்காளர்களாக இன்னும் பதிவு பெறாமல் இருக்கும் வாக்காளர்கள் தொடர்பில் தேர்தல் ஆணையாளரை அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தேசிய தலைவரும் அமைச்சருமான றிசாத் பதியுதீன் தலைமையிலான பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

ராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல் செயலகத்தில் வைத்து தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவை அமைச்சர் றிசாத் பதியுதீன் தலைமையில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக், அமைச்சரின் இணைப்பாளர் முஜாஹிர் மற்றும் சவாஹிர் அன்சாரி; முஹம்மத் மபூஸ் ஆகியோர் சந்தித்துள்ளனர்.

வடக்கில் இடம்பெயர்ந்தும், மீள்குடியேறியுமுள்ள மக்கள் தம்மை வாக்காளர்களாக பதிவு செய்து கொள்வதில் எதிர்கொள்ளும் சிரமங்கள் தொடர்பில் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

18 வயதை அடைந்தும் வாக்காளர்பட்டியலில் பெயர்கள் உள்வாங்கப்படுவதிலுள்ள தடைகள் பற்றி தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவின் கவனத்திற்கு அமைச்சருமான றிசாத் பதியுதீன் கொண்டு வந்தார்.

இதன்போது கருத்துரைத்த தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, இவ்விடயம் தொடர்பில் மாவட்ட தேர்தல் உதவி ஆணையாளர்களுடன் தான் கலந்துரையாடுவதாகவும் கூறினார். (அ-2)

# அவசர பொலிஸார் மீது தாக்குதல்

(கொழும்பு)

அவசர பொலிஸ் இலக்கத்துக்கு தொடர்பினை ஏற்படுத்தி, பின்னர் பொலிஸார் குறித்த இடத்திற்கு விரைந்து சென்றதும் பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம காலை பள்ளக்கட்டுவையில் இடம் பெற்றது.

பள்ளக்கட்டுவையில் இரு பெண்கள் மோதல்களில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாக, பொலிஸ் அவசர பிரிவு 119 இற்கு தொடர்பு கொள்ளப்பட்டு பொலிஸாரை அவ்விடத்திற்கு வரவழைத்து, 'அவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத் தாக்குதல்களில் இரு பொலிஸார் கடுமையான தாக்குதல்களுக்குள்ளாகி, தெமோதரை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப விசாரணைகளில் இருவரை கைது செய்துள்ளனர். பள்ளக்கட்டுவையில் எத்தகைய மோதலும் இடம்பெறவில்லையென்றும், பொலிஸாரை தாக்குவதற்கே அவசர பிரிவு இலக்கத்திற்கு அறிவிக்கப்பட்டதென்றும் விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

காயப்பட்டவர்களின் நிலை ஆபத்தானதாக இல்லையென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## சிறு நன்னாரி

Botanical Name- Hemidesmus indicus

Family-Asclepiadaceae

Engl-Indian Sarasaparilla

Sinh-Iramusu



இதன் வேர் நல்ல மணமுடையதால் இதற்கு நன்னாரி என்ற பெயர் உண்டு. இது சுமார் ஒரு மீற்றர் தூரம் வரைக்கும் பல கிளைக் கொடிகளுடன் தரையோடு ஒட்டிப் படரும். கணுக்களில் வேர் விடுவதில்லை. கொடி சுமார் 2,3 மில்லிமீற்றர் ப்ருமனும் சிறிது கருமை கலந்த சிவப்பு நிறமும் உடையது. கொடி இலைகளைக் கிள்ளினால் பால் வரும். கணுக்களில் இரண்டு இலைகள் எதிர் எதிராக இருக்கும்.

கத்திபோல் நீண்டுள்ள இலை 3/4 சென்ரிமீற்றர் அகலமும் 4.5 சென்ரிமீற்றர் நீளமும் உடையது. இலையின் நடுநரம்பு நாமம் போன்ற நல்ல வெள்ளைக் கோடு ஒன்றை உடையது. நல்ல மணமுடைய இதன்வேர் அதிக நீளமாகவும் பக்கம் நோக்கி பல கிளைகளுடன் படர்ந்திருக்கும். சுமார் 1/2 முதல் ஒரு சென்ரிமீற்றர் குறுக் களவு உள்ளதாக இருக்கும்.

வேரின் பட்டை அதிக கனமுடையது. மலர்கள் சிறியவை. பச்சை– கருஞ்சிவப்பு நிறமுடையவை. மஞ்சரிகள் இலைக் கோணங்களில் சோடியாகக் காணப்படும். கனிகள் பிளவுடையவை. விதைகள் முட்டை வடிவானவை. இது பல்லாண்டு வாழும் ஏறுகொடியாகும். இத்தாவர விளக்கத்தை உடைய் இனமே தூய இனமாகும்.

ஆனால் பல இடங்களில் Cryptolepis buchananii எனும் தாவரத்தை நன்னாரி என்று பயன்படுத்துகிறார்கள். அது தவறு. தூய இனத்தில் இருக்கும் வேதியற் சத்துக் கள் இதில் காணப்படமாட்டாது.

மேலும் மருந்துக் கடைகளில் விற்கப்படும் நன்னாரி வேரானது சிறு நன்னாரி வேரல்ல. அது பெருநன்னாரி எனும் Decalepis hamiltonii எனும் ஏறுகொடித் தாவரத்தின் வேராகும்.

இவ்வேர் மாகாளிக் கிழங்கு என்று அழைக்கப்படுகின்றது எனும் தூய நன்னாரி வேரின் மருத்துவக் குணங்களையும் வேதியற் பொருட்களைக் காட்டிலும் குறைவாகவே காணப்படுகின்றது.



Cryptolepis buchananii

யாழ்.மாவட்டத்தில் பொதுவான வேலியோரங்களிலும் தோட்டவெளி ஓரங்களிலும் பரம்பல் கூடுதலாக அவதானிக்கப்படுகின்றது. இதன்வேரோடு கொடியை பிடுங்கி நட்டும் பயிராக்கலாம்.

இந்தியாவில் ஒரு சில குறவர்கள் காடுகளில் மலைகளில் இருந்து இந்த வேரைப் பச்சையாக வெட்டி எடுத்துவந்து விற்பனைக்கு ஒரு சில இடங்களில் காணலாம்.

### மருத்துவப் பயன்கள்

❖ நன்னாரி வேரைப் பறித்தவுடன் மண் நீக்கி அலச வேண்டும். பின்னர் அதன் மேலுள்ள கறுப்புத் தோலையும் உள்ளே நடுவில் உள்ள நரம்பையும் நீக்கிவிட்டு பயன்படுத்த வேண்டும்.

❖ அலசி சுத்தம் செய்த பச்சை நன்னாரி வேர் 20 கிராமை முதல் நாள் இரவில் 1/4 லீற்றர் காய்ச்சிய நீரில் ஊறவைத்து மூடி வைக்க வேண்டும். காலையில் எடுத்து கசக்கி பிழிந்து வடிகட்டி பனங்கற்கண்டு அல்லது தேன் கலந்து அருந்தவும். தோல், நரம்புகளுக்கு சுறுசுறுப்பு தரும். உடலை உரமாக்கும்.

❖ காய்ந்த நன்னாரி 25 கிராம் எடுத்து இரவில் ஊறவைத்து காலையில் வடிகட்டி சாப்பிடவேண்டும். 2 மணிநேரம் வெந்நீரில் ஊறவைத்து வடிகட்டியும் 30 தொடக்கம் 60 மில்லி காலை, மாலை அருந்தலாம். இரத்தத்தை சுத்தி செய்யும், பசியைத் தூண்டும்.

### நன்னாரி தேநீர்

❖ 25 கிராம் இடித்து தூள் செய்த நன்னாரி வேரை 1/4 லீற்றர் நீரிலிட்டுக் காய்ச்சி 100 மில்லி லீற்றராக குடிநீர் காய்ச்சி இறக்கி



Decalepis hamiltonii

வடிகட்டி இதனுடன் பால், சீனி சேர்த்து காலை, மாலை அருந்த இனிமையாக இருக்கும். தோல்வியாதிகள், தாகம், உடற்சூடு தீரும். உடல் பலம் பெறும். சிறுநீர் நன்கு வெளிப்படும். குழந்தைகள் முதல் வயோதிபர் வரை யாவரும் பயன்படுத்தலாம்.

### நன்னாரி சர்பத்

நன்னாரி வேர் 200 கிராம் எடுத்து ஒரு லீற்றர் கொதிக்கும் வெந்நீரில் இட்டு 4 மணிநேரம் ஊறவைக்கவேண்டும். அதன் பின் அடுப்பில் இட்டுக்காய்ச்சி அரை லீற்றராக வற்றிவரும் போது இறக்கி வடிகட்டிக் கொள்ளவும்.

இதனுடன் 400 கிராம் சர்க் கரை விட்டுக் காய்ச்சி பதமாக இறக்கி கொள்ள சர்பத் ஆகிவிடும். 30 மில்லிலீற்றர் சர்பத் தும் 60 மில்லிலீற்றர் தண்ணீரும் கலந்து அருந்த தாகம், பிரமேகம் வெள்ளை, சிறுநீர் எரிச்சல் தீரும், உஷ்ணகாலத்திற்கு உகந்த பானம். நரம்புரமாக்கியாகவும் அமையும். உலர்ந்த நன்னாரி வேர்களை நடுநரம்பு நீக்கி இடித்து அரித்து (பலமுறை) வைத்துக் கொள்ளவும். ஒன்று தொடக்கம் 2 கிராம் காலை, மாலை பாலில் அருந்த மேற்கூறிய பயன்களைத் தரும்.

நன்னாரி, வெட்டிவேர் இரண்டையும் சம அளவு எடுத்து கசாயம் வைத்துக் குடித்தால் பித்தம், உடற்சூடு தணியும். நன்னாரி, சதகுப்பை இரண்டையும் சம அளவு எடுத்து கசாயம் வைத்துக்குடித்தால் சிறுநீரக நோய்கள் குணமாகும்.

நன்னாரி, நெருஞ்சில் இரண்டையும் சமஅளவு எடுத்து கசாயம் வைத்துக்குடித்தால் சிறுநீரகக் கற்கள், பித் தப்பை கற்கள் கரையும். நன்னாரி, தனியா, சோம்பு மூன்றையும் சம அளவு எடுத்து பொடி செய்து தினமும் சாப்பிட்டு வந்தால் உடற்பருமன் குறையும். நன்னாரி வேரை நெல்லிக்காய் சாற்றில் ஊறவைத்து உலர்த் திப் பொடி செய்து தினமும் இரண்டு கிராம் அளவுக்குச் சாப்பிட்டு வந்தால் கொழுப்பு கரையலாம். இதயம் வலுவடையும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

# இணைப்பாளர் நியமனம்

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் யாழ் மாவட்ட மேலதிக இணைப்பாளராக வல்வெட்டித்துறை நகரசபை ஊழி யர் க.தர்மகுலசிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளர்.

இவருக்கான நியமனத்தெரிவு கடந்த 23 ஆம் திகதிய முகாமைத்துவசபை கூட்டத்தின் போது நடைபெற்றதாக சங்கத்தலைவர் எ. லோகநாதன் தெரிவித்துள்ளார். இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்திற்கான மேலதிக மாவட்ட இணைப் பாளராக வெல்லாவெளி பிரதே ச சபையின் முகாமைத்துவ உதவியாளர் சி.பகிரதன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (அ-2)

சித்திர வேலவர் துணை

**வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவில் கோப்பாய்**

**ஆலய தரும பரிபாலன சபை பொதுக் கூட்ட அறிவித்தல்**

ஆலய தரும பரிபாலன சபையின் 16.11.2013 ஆம் திகதிய கூட்டத் தீர்மானத்துக்கமைய மகா சபைப் பொதுக் கூட்டத்தை 16.12.2013 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடத்துவதற்கு முடிபு செய்யப்பட்டுள்ளதால் 2014 ஆம் ஆண்டுக்கான அங்கத்துவத்தைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு அங்கத்தவர்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

1. புதிதாக அங்கத்துவம் பெற விரும்பும் அடியார்கள் ரூபா நூற்றியிருபது (120/=) செலுத்தி அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்ளவும்.

2. ஏற்கனவே அங்கத்துவம் பெற்றவர்கள் ரூபா அறுபது (60/=) செலுத்தி அங்கத்துவத்தைப் புதுப்பிக்கவும்.

3. ஆயுட்கால அங்கத்துவம் பெற்றுக் கொள்பவர்கள் ரூபா ஆயிரம் (1000/=) செலுத்தி அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்ளவும்.

குறிப்பு:-

✷ அங்கத்துவத்தைப் புதிதாகப் பெறுபவர்கள் அலுவலகத்திலோ அல்லது செயலாளரிடமோ விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பூரணப்படுத்தி ஒப்படைக்கவும்.

✷ அங்கத்துவத்துக்குப் பணம் செலுத்துபவர்கள் அலுவலகத்திலோ அல்லது செயலாளர், பொருளாளரிடமோ (திரு.க.சின்னராசன்) பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்.

✷ அங்கத்துவத்தைப் புதுப்பிப்பவர்களும் புதிதாகப் பெறுபவர்களும் 10.12.2013 இற்கு முன் தமது அங்கத்துவக் கடமைகளைப் பூர்த்தி செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**திரு.சோ.விஸ்வலிங்கம்**

**செயலாளர், ஆலய தர்ம பரிபாலன சபை கோப்பாய்.**

**வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுன்னாகம்**

**2014 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்**

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தைகள்,கருவாட்டுக் கடைகள், மீன் வெட்டுமிடம் என்பவற்றை 01.01.2014 தொடக்கம் 31.12.2014 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ இ | விபரம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள் வித் தொகை (வற் வரி தவிர) | மாத வாடகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 1 | சுன்னாகம் மத்திய மரக்கறிச் சந்தை (வாகன தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 7301001.00 | |
| 2 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை | 1000.00 | 10000.00 | 245000.00 | 250.00 |
| 3 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7500.00 | 39700.00 | 250.00 |
| 4 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை இல 05 | 1000.00 | 10000.00 | 1221000.00 | 250.00 |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 5 | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5000.00 | 74500.00 | 250.00 |
| 6 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம் | 750.00 | 7500.00 | 50000.00 | |

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் -

27.11.2013 - 09.12.2013 பி.ப 2.00 மணிவரை

கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதி -

10.12.2013 நண்பகல் 12.00 மணிவரை

கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி -

10.12.2013 பி.ப 2.00 மணிக்கு

கேள்வி சம்பந்தமான மேலதிகமான விபரங்களை

2013.10.23ம் திகதிய வல்ம்புரி, உதயன், தினக்குரல் பத்திரிகையிலும், எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

**தி.பிரகாக்ஷ்,தவிசாளர்**

**வலி தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்**

# கிளி.காந்தி கிராமமும் பறி போகின்றதா?

## அப்பகுதி மக்கள் அச்சம்!

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்டத்தின் கோணாவில் கிராம அலுவலர் பிரிவிலுள்ள காந்தி கிராமத்தை முழுமையாக பறித்தெடுப்பதற்கான முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.**

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸவரனின் பணிப்புக்கமைய நில அளவைத் திணைக்கள அதிகாரிகளினால் 282 ஏக்கர் காணிகள் அளவீடு செய்து எல்லையிடப்பட்டுள்ளன.

இவ்வாறு அளவீடு செய்யப்பட்டுள்ள நிலங்களில் 1961ஆம் ஆண்டு முதல் 216 குடும்பங்கள் நிரந்தரமாக வசித்து வருகின்றன. அப் போது சரவோதய நிறுவன அனுசரணையுடன் வன்செயலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களே அங்கு குடியேற்றப்பட்டன.

தற்போது அங்கு வாழும் சகல காணி உரிமையாளர்களுக்கும் சுவர்ண பூமி காணி ஆவணம் நேர்ப் திட்டத்தின் மூலம் 105 நிரந்தர வீடுகளும் அமைத்து வழங்கப்பட்டுள்ளன.

கடந்த ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக வாழ்ந்து வருகின்ற இம் மககளை வெளியேற்றி காந்தி சேவா சங்கத்தினர் ஊடாக யாரோ நில



அபகரிப்பாளர்களுக்குக் கையளிப்பதற்கான தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

கடந்த மாதம் மூன்று ஆடம்பர வாகனங்களில் இராணுவ உயரதிகாரிகள் சிலரும் மஞ்சள் அங்கி அணிந்த பெரும்பான்மை இன முக்கியஸ்தர்கள் சிலரும் குறித்த கிராமத்தின் கோவிலுக்கு வந்ததாகவும் அவ்விடத்தில் அக் கிராமத்தின் வரைபடத்தை விரித்து வைத்து கிராம எல்லைகளைப் பற்றி விளக்கம் பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதன் பின்னரே கரைச்சிப் பிரதேச செயலாளரை அக் கிராமத்திற்கு எல்லையிடப் பணித்ததாகவும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

இக் காந்தி கிராமம் பறிக்கப்படுமாயின் மிக வறிய நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற 216 குடும்பங்கள் நிர்க்கதிக்கு உள்ளாக்கப்படுவர் என்பதுடன் தமது பூர்வீக நிலத்தையும் சொத்துக்களையும் இழக்க நேரிடும் எனவும் அஞ்சுகின்றனர்.

எதிர்காலத்தில் சிங்களக் குடியேற்றமோ அல்லது சிங்கள முதலீட்டாளர்களின் தொழில் மையங்களோ உருவாகும் அபாய நிலையும் ஏற்படும் என தெரிவிக்கின்ற அவர்கள் இவ் அபகரிப் பிற்கு தமிழ் உயரதிகாரிகளே துணை போகின்றமை குறித்து விசனத்தையும் தெரிவிக்கின்றனர். (ம-4)

## யு.என்.எச்.சி.ஆரின் கொடுப்பனவை இதுவரை பெற்றுக் கொள்ளாதோருக்கு

(முல்லைத்தீவு)

யுத்தத்தால் இடம் பெயர்ந்து மீள் குடியேற்றம் செய்யப்பட்டு முல்லைத் தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் வசித்து வரும் U.N. H.C.R. நிறுவனத்தினால் வழங்கப்படும் 20 ஆயிரம் ரூபாவைப் பெறுவதற்கு தகுதியுடையவர்களில் இது வரை 20 ஆயிரம் ரூபாவை பெற்றுக் கொள்ளாதவர்கள் உரிய ஆவணங்களுடன் இன்று புதன்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு வருகை தருமாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் இ.திலீபன் தெரிவித்துள்ளார்.

கொடுப்பனவிற்கான பெயர்ப் பட் டியலில் பெயர் விபரங்கள் உள்ளதா என உறுதிப்படுத்திக் கொள் ளுமாறும் அவர் மேலும் தெரிவித் தார். (ம-267)





## வீதி சீரின்மையால் பயணிப்போர் சிரமம்

(பூநகரி)

மீன்பிடியில் ஈடுபடும் 300 இற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் மீன்பிடியில் ஈடுபட்டுவரும் மன்னார் வீதியில் இருந்து பள்ளிக்குடாதுறைக்குச் செல்லும் வீதி மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதால் மேற்படி தொழிலாளர்கள் உட்பட வியாபாரிகளும் பெரும் சிரமமடைவதாக பள்ளிக்குடா கடற்றொழிலாளர் சங்கத்தினர் கவலை தெரிவிக்கின்றனர்.

கடற்கரையை அண்மித்த பகுதிகளில் தேர்தல் காலத்துக்கு முன்னதாக பறிக்கப்பட்ட கிறவல் மண் கும்பிகள் பரவப்படாது, கடந்த இரு மாத காலமாக வீதியில் தொடர்ந்தும் இருப்பதாகவும் உரிய அதிகாரிகள் இது தொடர்பில் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து உதவ வேண்டுமெனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ம-84)





கிளி.பூநகரி மகாவித்தியாலயத்தின் ஆரம்பப்பிரிவு கண்காட்சி நேற்றுமுன்தினம் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்கள், ஆசிரியர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் மாணவர்கள் பார்வையாளர்களுக்கு விளக்கமளிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூநகரி செய்தியாளர்)

## வவுனியா அட்டமஸ்கட மதகுருவுக்கு எதிராக மேலும் ஒரு முறைப்பாடு

(குருமன்காடு)

வவுனியா அட்டமஸ்கட மதகுருவுக்கு எதிராக 12 வயது சிறுவன் ஒருவன் நேற்று நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா அட்டமஸ்கட சிறுவர் இல்லத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெற்றதாக சிறுவர்கள் வழங்கிய முறைப்பாட்டையடுத்து அதன் முகாமையாளரான விகாராதிபதி கைது செய்யப்பட்டு முன்னதாகவே தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந் நிலையில் 12 வயது சிறுவன் ஒருவன் தனக்கு துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாகவும் தான் சித்திரவதைக்கு உள்ளாகியுள்ளதாகவும் முறைப்பாட்டை மேற்கொண்டுள்ளான். நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, வவுனியா பொலிஸிலும் முறையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட சிறுவன் தெரிவிக்கையில்,

நான் குடும்பநிலை காரணமாக அட்டமஸ்கட சிறுவர் இல்லத்தில் மூன்று வருடங்களாக தங்கி இருந்தேன்.

நான் விளையாடிக் கொண்டிருந்த போது பழைய ஆணி இருந்த கட்டை ஒன்றினால் எனக்கு அடித்தமையால் காலில் காயம் ஏற்பட்டது. காலுக்கு மருந்து கட்டாது பன்டேச் போட்டார்கள். அதன்பின் என் கால், கை எல்லாம் காயம் ஏற்பட்டுவிட்டது. இப்பொழுதும் அது மாறவில்லை. எனக்கு தலையிலும் அடித்து பெரிய காயம் ஏற்பட்டது. எனக்கு தேங்காய் பால் குடிக்க தந்தார்கள். அதன் பின் அது மாறிவிட்டது. என்னைப் போல என்னுடைய அண்ணாவுக்கும் அடிப்பார்கள். அவருக்கும் காயங்கள் இருக்கு. எங்கள் இல்லத்தில் இருக்கும் இருண்டு பேர் என்னை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துவார்கள். இதே மாதிரி மற்றவர்களும் செய்கிறார்கள் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பில் சிறுவனின் உறவினர் கருத்துத் தெரிவிக்கையில்,

''இவன் பல விடயங்களை சொல்லு றான் இல்லை. இவனுக்கு அங்கு கன கொடுமைகள் நடந்திருக்கு. ஆணி இருந்த கட்டையால அடிச் சதில் இருந்து இவன்ர உடம்பில ஒரே புண் வருகிறது. சரியான முறை யில் மருந்து கட்டவில்லை. கறல் கட்டிய ஆணி என்றதால் இவனுக்கு வருத்தமாக இருக்கு. இது சம்பந்த மாக முறைப்பாடு செய்ய வேண்டாம் என தொலை பேசி யில் மதகுரு இவனை மிரட்டியுள்ளார்'' என தெரிவித்தார்.

சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் எஸ்.றுவான் தெரிவிக்கையில், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் குறித்த சிறுவன் உறவினருடன் வந்து முறைப்பாடு செய்துள்ளதாகவும் தற்போது வவுனியா பொலிஸில் முறைப்பாட்டுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-250)

## தொழிலாளர் ஸ்தாபனத்தால் உபகரணங்கள் வழங்கப்பட்டன



(பூநகரி)

பூநகரி பிரதேச கடற்றொழிலாளர்கள் 100 பேருக்கு வெளி இணைப்பு இயந்திரங்கள், வலைகள், வேறு உபகணரங்கள் உட்பட 200இலட்சத்திற்கு மேற்பட்ட பொருட்கள் நேற்றுமுன்தினம் ஜெயபுரம் கடற்றொழில் கூட்டுறவுச் சங்க சமாச அலுவலகத்தில் வழங்கப்பட்டன.

சர்வதேச தொழிலாளர்கள் ஸ்தாபனத்தால் (I.L.O நிறுவனம்) 50% மான மானிய அடிப்படையில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் அனுசரணையோடு இவை வழங்கப்பட்டன.

150 இலட்சம் பெறுமதியான 50 வெளி இணைப்பு இயந்திரங்கள் 50 பயனாளிகளுக்கும் 30 பயனாளிகளுக்கு வலைத் தொகுதிகளும் 20 பயனாளிகளுக்கு ஜி.பி.எஸ் கருவிகளும் என 100 பயனாளிகளுக்கு இவ் உதவிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பெருந்தொகையான கடற்றொழிலாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இப்பொருட்கள் வழங்கும் வைபவத்தில் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் விரிவாக்க பணிப்பாளர், யாழ்.மாவட்ட கடற்றொழில் விரிவாக்கப் பணிப்பாளர், பூநகரி பிரதேச செயலர், I.L.O. நிறுவன அலுவலர் உட்பட பலர் கலந்து கொண்டு இவ் உபகரணங்களை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (ம-84)

பலத்தினால்தான் சமாதானத்தைப் பெறமுடியும்
பலம் என்பது ஒற்றுமையால் கிடைக்கக் கூடியது.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# வடக்கு மாகாண அரசிடம் கூட்டுச் செயற்பாடு அவசியம்

**இதனை இதனால் இவன் முடிக்கும்
என்றாராய்ந்து
அதனை அவன் கண்விடல்**
என்றார் வள்ளுவர்.

வள்ளுவர் தந்த குறட்பாக்களில் மிகவும் முக்கியமான குறள் எதுவென்று யாரேனும் நம்மிடம் கேட்டால் மேற்படி குறளையே நாம் சுட்டிக்காட்டுவோம்.

அந்த அளவிற்கு அந்தக் குறள் முகாமைத் துவ எண்ணக்கருவை அப்படியே தன்னுள் அடக்கியுள்ளது.

இந்தக் குறள் தொடர்பில் தமிழ் மக்கள் ஆழமாகச் சிந்திக்கவேண்டும். அதிலும் குறிப் பாக எங்கள் அரசியல் தலைமைகளில் இடம் பெற்றிருக்கக்கூடிய பிரதிநிதிகள் அத்தனை பேரும் பொருத்தமானவர்களா? தமிழ் மக் களின் உணர்வுகளை மதிப்பவர்களா? நேர்மைத்தனத்துடன் தமிழ் மக்களின் பிரச் சினைகளை கையாளுகின்றார்களா? என்று ஆராய்ந்தால், வெளியில் நடிப்பு உள்ளூர ஆட்சியாளர்களுடன் தொடுப்பு என்ற உண்மை நிலைகள் தெரியவரும்.

இது ஒரு சாராரைக் குறிக்கும். இன்னொரு சாராரோ தமிழ்ப் பற்றில் அக்கறை இருந்த போதிலும் இராஜதந்திர வியூகங்களை நகர்த் திச் செல்வதில் இடர்பாடுகளைச் சந்திக்கின்ற னர். இதற்கு வடக்கு மாகாண அரசு நல்ல உதாரணம்.

வடக்கு மாகாண அரசில் இடம்பெற்றுள்ள பலரும் தமிழ் மக்களின் உணர்வுகளை உணர்ந்தவர்கள். ஆனாலும் அவர்களுக்கு அரசியல் புதிய பாடமாக இருப்பதால் எதனை, எப்படி நகர்த்துவது என்பதைப் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கின்றனர்.

இதன் காரணமாக வடக்கு மாகாண அமைச்சர்கள், உறுப்பினர்கள் தனித்தனியாக இயங்கும் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள னர்.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை கூட் டுச் செயற்பாடுகளே வெற்றியைத் தரக்கூடி யவை.

ஆனால் கட்டுப்பாட்டை இழந்த செயற்கைக் கோள்கள் போல மாகாண சபை உறுப்பினர்க ளும் அமைச்சர்களும் இயங்குகின்றனர்.

இதன் காரணமாக மாகாண அரசுக்கி டையே உள்ளகக் கருத்து முரண்பாட்டை ஏற்படுத்துவதில் சிலர் தீவிரம் காட்டுகின்றனர்.

இன்னும் சிலர் ஆளுநருக்கும் மாகாண அரசுக்கும் இடையே முரண்பாட்டை ஏற்படுத்தி மாகாண அரசால் எதுவும் செய்ய முடியாது என்ற இயலாமைப்பாட்டைக் காட்ட முற்படுகின் றனர்.

இவையெல்லாம் அரசியலில் நடக்கக்கூடி யவை என்பதால் உள்ளக ஒற்றுமை என்பது மிகவும் அவசியமானதாகும்.

இது விடயத்தில் வடக்கு மாகாண முதல மைச்சர், சபையின் தவிசாளர், அமைச்சர்கள், உறுப்பினர்கள் இரண்டு கிழமைக்கு ஒரு தடவையேனும் கூடி நிலைமையை ஆராய வேண்டும்.

இவ்வாறு ஆராய்வதன் மூலம் வடக்கு மாகாண அரசின் செயற்பாட்டுக்குள் எவரும் இடைபுக முடியாது.

உள்நுழைதல், இடைபுகுதல் என்ற விடயங் கள் ஆட்சியில் இருக்கக் கூடிய பலவீனங்க ளால் ஏற்படுவதாகும்.

எனவே வடக்கு மாகாணத்தில் நடைபெறும் அத்தனை விடயங்கள் குறித்தும் மாகாண அரசு அறிந்து வைத்திருந்தால் - அது தொடர் பில் கவனம் செலுத்தினால் பிறரின் தலை யீட்டுக்கும் முரண்பாட்டிற்கும் இடமே இராது.

# அரச வைத்தியசாலைகளில் பயிற்சி மருத்துவர்கள் நியமனம்

நாடெங்கிலுமுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்ற வென ஆயிரத்து 43 மருத்துவ பட்டதாரிகள் உள்ளகப் பயிற்சி மருத்துவர்களாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங் கள் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைத்து நேற்று வழங்கப் பட்டது.

இதேவேளை, மருத்துவ நிபுணத் துவ சேவையைக் கிராம மட்டத்துக்கு விஸ்தரிக்கும் நோக்கின் முதற்கட்ட மாக கரவனல்ல, குளியாப்பிட்டி எல்பிட்டி வைத்தியசாலைகளில் உள்ளகப் பயிற்சி மருத்துவர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இந்த உள்ளகப் பயிற்சி மருத்துவர் களுக்கு அரசாங்க மருத்துவ அதிகாரி கள் சங்கத்தின் ஒத்துழைப்புடன் விசேட பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதுடன் தமிழ் மொழிப் பயிற்சியும் வழங்கப் பட்டுள்ளது.

இவர்களில் பெரும்பாலானவர்கள் வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்று வதற்கு சுயவிருப்பின் பேரில் முன்வந்துள்ளனர் என்று அமைச்சின் அதிகாரியொருவர் கூறியுள்ளார். (அ)

# ஆடுகளம் ஜெயபாலனை சந்தித்தார் பிரபா எம்.பி

மிரியானை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கவிஞரும் நடி கருமான வ.அ.ச. ஜெயபாலனை பாராளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் நேற்று முற்பகல் 11.00 மணியளவில் சந்தித்து கலந்துரை யாடியுள்ளார்.

தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து சுற்றுலா விசா விதிமுறைகளை மீறினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் குடிவரவு குடியகல்வு திணைக்களத் தினால் கவிஞர் ஜெயபாலன் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, தடுப்பு முகாமில் தன்னை எவ்வித அசௌகரியமும் இன்றி கண்ணியமாக குடிவரவு திணைக்கள அதிகாரிகள் நடத்தினார் கள் எனவும் பாராளுமன்ற உறுப்பின ரிடம் ஜெயபாலன் தெரிவித்துள்ளார். (செ-11)

# மரதன் ஓட்டப்போட்டி

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் நடத்தப்படும் மாபெரும் மரதன் ஓட்டப் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கி ழமை காலை 7 மணிக்கு ஊர்காவற் துறை பிரதேச சபை தலைமை அலு வலக முன்றலில் ஆரம்பமாகவுள்ளது.

இம் மரதன் ஓட்டம் செருக்கன் சந்தி ஊடாகச் சென்று புளியங்கூடல் சந்தி சர வணை சந்தியை அடைந்து ஊர்காவற் றுறை பிரதான சந்தி வழியாக முடிவிட த்தை வந்தடையும்.

இப் போட்டியில் பங்குபற்ற விரு ம்புவோர் பிரதேச சபை தலைமை அலு வலகம் மற்றும் ஊர்காவற்றுறை , நாரந்தனை, அனலைதீவு, எழுவை தீவு உப அலுவலங்களில் பெயர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஊர்காவற்றுறை பிரதேச சபை கேட்டுள்ளது. (அ-2)

# கலைமுகம் வெளியீடு



(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக் கலாமன்றத்தி னால் வெளி யிடப்படும் கலைமுகம் எனும் மும் மாத இதழின் ஒக்டோபர்- டிசெம்பர் மாதங்களுக் குரிய மலர் வெளி வந்துள்ளது. கலை இலக்கிய சமூக இதழாக வெளியிடப் படும் இம்மலரில் தவத்திரு தனிநாய கம் அடிகளாரின் நூற்றாண்டு நினைவையொட்டிய **தமிழ், தமிழர், தமிழ்த்தேசியம் தனிநாயகம் அடிக ளார் ஒரு பார்வை** எனும் சிறப்புக் கட் டுரை அடங்கிய கட்டுரைகள், கவிதை கள், சிறுகதைகள், நூல் மதிப்பீடுகள், பக்தி எனும் அம்சங்களை உள்ளடக்கிய படைப் புக்களும் இடம்பெற்றுள்ளன. (அ-5)

# பொதுக்கூட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கடல் உணவு ஏற்று மதியாளர் சங்க பொதுக்கூட்டம் எதிர் வரும் 30 ஆம் திகதி காலை 10 மணி க்கு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வள துறைத் திணைக்களத்தில் நடைபெறவுள்ளதாக சங்கத்தலைவர் ம.குணசிங்க ராசா தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தின ராக முல்லை.மாவட்ட அரச அதிபர் நா.வேத நாயகன் கலந்து கொள் ளவுள்ளார்.

எனவே ஏற்றுமதியாளர்கள் அனை வரையும் இப்பொதுக் கூட்டத்தில் தவ றாது கலந்து கொள்ளுமாறு அறிவிக் கப்பட்டுள்ளது. (ம-267)

# விரத கால சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் விநாயகர் விரதகால விஷேட சிறப்புச் சொற் பொழிவு நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை பிற்பகல் 5 மணிக்கு நடைபெற வுள்ளது.

கந்தரோடை கற்பொக்குணை வீர கத்தி விநாயகர் ஆலயத்தில் நடை பெறவிருக்கும் இச் சொற்பொழிவை சொற்பொழிவாளர் நி. பாபுதரன் வழங் கவுள்ளாரென இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தர்ப்பணா சுதர்சன் அறிவித்துள்ளார். (அ)

# பரிசளிப்பு விழா திகதி மாற்றம்

கொக்குவில் இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழா நிகழ்வுகளை டிசம்பர் மாதம் 7 ஆம் திகதி சனிக்கிழமை நடத்துவது என தீர்மானிக்கப்பட்டி ருந்தது. தவிர்க்க முடியாத காரணங் களால் முன்னராக் எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடத்துவதற்கு உத்தேசித்துள்ளதாக கல்லூரி அதிபர் வே. ஞானகாந்தன் அறிவித்துள்ளார். (அ)

# வாகனங்கள் சோதனையிடப்பட்டன

யாழ்ப்பாணம்- காங்கேசன்துறை வீதியில் பயணித்த வாகனங்கள் அனைத்தும் இடைமறிக்கப்பட்டு படையினரால் சோதனையிடப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில் பயணித்த அனைத்து வாகனங்களும் இணுவில் வைத்தியசாலைக்கு முன்பாக இடைமறிக் கப்பட்டதுடன், வாகனங்களில் பயணித் தவர்கள் அனைவரும் இறக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் படையின ரால் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் பாடசாலைக்கு செல்லும் மாணவர்களும் ஆசிரியர்களும் மற்றும அரச அலுவலர்களும் உரிய இடங்க ளுக்கு செல்வதில் சற்று நேர தாமத மானது. (செ-11)

# மண்டப திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர்திண்ணபுரம்சிவன்கோயில் மாணிக்க வாசக சுவாமிகள் மடலா யத்துடன் இணைந்த புதிய ஸ்ரீ மனோன்மணி அம்பாள் மண்டப திற ப்பு விழா எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற் பகல் 7 மணிக்கு மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் ஆயுட் கால தலைவர் லயன் ஈ.எஸ்.பி நாக ரத்தினம் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரைகளை நல் லூர் ஞானசம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமி கள், வேதாந்த மட ஸ்ரீ சிவகுரு நாத குரு பீட 8 ஆவது குருபீடாதிபதி ஸ்ரீ வேத வித் யாசாகரர் சுவாமிகள், கோயில் பிரதம சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ வி. ஈஸ்வரக் குருக்கள், தொண்டை மானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரம ஸ்ரீலஸ்ரீ மோகன தாஸ்சுவாமிகள் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

மேலும் **தானங்களில் சிறந்தது அன்னதானம்** எனும் கருப்பொருளில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல் வர் கலாநிதி ஆறுதிருமுருகனும் **ஈழத்து மடாலயங்கள்** எனும் கருப்பொருளில் வலம்புரியின் பத்திரிகை ஆசிரியர் ந.விஜயசுந்தரமும் சிறப்புப் பேருரை களை வழங்கவுள்ளனர். (அ-5)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## கடவுளைத் தேடுங்கள்



❖ பூமியின் நான்கு திசையிலும் தேடிச் சென்றாலும் ஒரு இடத்திலும் கடவுளைக் காண முடியாது. அவர் உள் ளத்தின் ஆழத்தில் உறைந்திருக்கிறார்.

❖ பிறருடைய குற்றத்தைப் பற்றிப் பேசுபவன் கால த்தை வீணாகக் கழிக்கிறான். அதனால், அவன் தன் நிலையிலிருந்து தாழ்ந்து விடுகிறான்.

❖ கடின உழைப்பும், விடாமுயற்சியும் கொண்டவ னுக்கு எல்லாம் உண்டாகும். அது இல்லாதவனுக்கு ஒன் றும் கிடைக்காது.

❖ பழுங்கள் நிறைந்த மரம் எப்போதும் கனத்தினால் தாழ்ந்து வளையும். அதுபோல, பெருமைப்பட வாழ வேண்டுமானால் அடக்கமும், பணிவும் கொண்டிருங்கள்.


❖ வாழ்வில் முதலில் கடவுளைத் தேடுங்கள். பிறகு பொருளைச் சம்பா தியுங்கள். இதனைப் பின்பற்றினால் நிம்மதியை அடையலாம்.

# பேரறிவாளன் தொடர்பான விவகாரம் உச்ச நீதிமன்றில் முறையிடப்படும்

## தொல்.திருமாவளவன் தெரிவிப்பு

(சேலம்)

**பேரறிவாளனிடம் சி.பி.ஐ அதிகாரிகள் வாக்கு மூலம் பெற்றமை தொடர்பான விவகாரத்தை உச்ச நீதிமன்றுக்கு எடுத்துச் செல்லவிருப்பதாக, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் கூறியுள்ளார்.**



ஏற்காடு இடைத் தேர்தலில் திமுக வேட்பாளருக்கு ஆதரவாக பிரசாரம் செய்வதற்காக சேலத்துக்கு நேற்று முன்தினம் வந்த திருமாவளவன் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

நவம்பர் 27 ஆம் திகதி உலககெங்கும் வாழும் தமிழர்கள் மாவீரர் நாளைக் கடைப்பிடிக்கின்றனர். சர்வதேச சமூகத்தின் ஆதரவைத் திரட்டுவதை இலட்சியமாகக் கொண்டு, அதற்கு உறுதி ஏற்கும் நாளாக இந்த ஆண்டு மாவீரர் நாளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்றதன் மூலம் இந்திய அரசு தமிழர்களுக்கு துரோகம் இழைத்துவிட்டது. அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் ஐ.நா. மனித உரிமை ஆணையக் கூட்டம் ஜெனவாவில் நடைபெறவுள்ளது. அதற்குள் இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணையைத் தொடங்க வேண்டும் என்று பிரித்தானிய பிரதமர் கமரூன் தெரிவித்திருப்பது வரவேற்கத்தக்கது.

நடைபெறவுள்ள நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் போர்க் குற்ற விசாரணையை வலியுறுத்தி தீர்மானம் இயற்ற வேண்டும். இந்த விடயத்திலும் தமிழக அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து போராட வேண்டும். நாடாளுமன்றத் தீர்மானத்துக்காக பிரதமர் மன்மோகன் சிங்கை நேரில் சந்தித்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மனு அளிக்கும்.

இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள கொளத்தூர் மணியை நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும்.


முள்ளிவாய்க்கால முற்றம் சுற்றுச் சுவர் இடிப்பு தொடர்பாக கைது செய்யப்பட்ட பழ.நெடுமாறன் உள்ளிட்டோர் மீதான பொய் வழக்குகளை வாபஸ் பெற வேண்டும்.

ராஜீவ் கொலைக குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பேரறிவாளனி டம் வாக்கு மூலம் பெற்றது தொடர்பாக சிபிஐ முன்னாள் அதிகாரியின் பேட்டி, பல உண்மைகளை அம்பலப்படுத்தியுள்ளது.

எனவே, இந்த வழக்கில் பேரறிவாளன் உள்ளிட்டோரின் தண்டனையை இரத்து செய்வதுடன் அவர்களை விடுதலை செய்யவும் வேண்டும். இந்த விவகாரம் தொடர்பாக பேரறிவாளனின் தாய் அற்புதம்மாளிடம் ஆலோசனை நடத்தி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யவுள்ளோம் என்றார். (2)

# தாய்லாந்து பிரதமரை பதவி விலகக் கோரி மக்கள் போராட்டம்

## அந்நாட்டு பிரதமரால் அவசர காலநிலை பிரகடனம்



(தாய்லாந்து)

தாய்லாந்தில் பிரதமர் யிங்லக் ஷினாவத்ரா பதவி விலகக் கோரி தொடர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ள போராட்டக்காரர்கள் நிதியமைச்சகம் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சக அலுவலகங்களைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இதனையடுத்து தலைநகா பாங்கொககில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு பிரதமர் அறிவித்துள்ளார்.

தாய்லாந்து பிரதமராக யிங்லக் ஷினவத்ரா பதவி வகிக்கிறார். கடந்த 7 ஆண்டுகளுக்கு முன்னர் இவரது சகோதரர் தக்ஷின் ஷினவத்ரா இராணுவ ஆட்சி கவிழ்ப்பினால் பதவி இழந்தார்.

அவர் தன் மீதான வழக்குகளில் இருந்து தப்பிக்க தற்போது வெளிநாட்டில் தங்கியுள்ளார். இந்த நிலையில் அவர் நாடு திரும்ப வழி வகுக்கும் வகையில் பாராளுமன்றத்தில் சரசசைக்குரிய மன்னிப்புமசோதாவை முனனதாகவே யிங்லக் ஷினவத்ரா கொண்டு வந்துள்ளார்.

இம்மசோதா கீழவையில நிறைவேறியது. ஆயினும மேலவையில் நிராகரிக்கப்பட்டது. தனது சகோதரர் மீண்டும் நாடு திரும்ப வழி வகுக்கும் சட்டத்தை கொண்டு வந்துள்ள பிரதமர் யிங்லக் ஷினவத்ராவை பதவி விலக வலியுறுத்தி பொது மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

தலைநகர் பாங்கொக்கில் கடந்த 7 நாட்களாக நடந்து வரும் இந்த போராட்டம் நேற்றுமுன்தினம் தீவிரம் அடைந்தது. பாங்கொக்கில் சனம்லுவாங் பகுதியில் உள்ள ஜனநாயக நினைவு சின்னத்தில் இருந்து காலையில் பேரணி புறப்பட்டது.

அதில் சுமார் 5 இலட்சம் பேர் கலந்து கொண்டனர். அவர்கள் 13 அரசு அலுவலகங்கள் மற்றும் தொலைக்காட்சி நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.இதையொட்டி பாராளுமன்றம் உள்ளிட்ட முக்கிய அலுவலகங்களுக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

ஆனால் அதையும் மீறி போராட்டக்காரர்கள் நிதித்துறை மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சக அலுவலகங்களின் வாசற் கதவுகளை உடைத்து உள்ளே புகுந்து முற்றுகையிட்டனர்.

உடனே அங்கிருந்த பாதுகாவலர்கள் ஓடிவிட்டனர். அதனைத் தொடர்ந்து போராட்டக்காரர்கள் அந்த அலுவலகங்களை கைப்பற்றினர். பிரதமர் யிங்லக் ஷினவத்ரா பதவி விலக வேண்டும்."இராணுவம் வரவேண்டும்" என்பன போன்ற கோஷங்களை அவர்கள் எழுப்பினர்.

போராட்டம் வலுவடைந்ததை தொடர்ந்து பிரதமருக்கும், அவரது அரசுக்கும் நெருக்கடி முற்றியுள்ளது. எனவே தலைநகர் பாங்கொக் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. அதற்கான உத்தரவை பிரதமர் யிங்லக் ஷினவத்ரா பிறப்பித்துள்ளார்.


பொதுமக்களின் இந்த போராட்டத்துக்கு எதிர்க் கட்சியான ஜனநாயக கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளன. பொதுமக்களின் எழுச்சிமிகு போராட்டத்தால் தாய்லாந்து அரசுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. (2)



**வத்திக்கானிற்கு விஜயம் மேற்கொண்ட பராகுவே ஜனாதிபதி ஹொராசியோ கார்ட்ஸ், போப் பிரான்சிசை சந்தித்தார். அப்போது போப் பிரான்சிஸ் அவருக்கு நினைவுப்பரிசு வழங்கியதைப் படத்தில் காணலாம்**

# இரு சரக்குக் கப்பல்கள் மூழ்கின!

## 10 மாலுமிகள் பலி; 16 பேர் மாயம்



சீனாவில் இரண்டு சரக்குக கப்பல்கள் மூழ்கியதில் 10 மாலுமிகள் உயிரிழந்தனர். 16 மாலுமிகளை காணவில்லை.

கிழக்கு சீனாவின்ஷிஜியாங் மாகாணத்தில் சரக்குக் கப்பல் ஒன்று கற்களை ஏற்றிக் கொண்டு கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு 9 மணியளவில புறப்பட்டது. அந்தக் கப்பலில் 12 மாலுமிகள் இருந்தனர்.

யான்டாய் நகரம் அருகே பயணித்துக் கொண்டிருந்தபோது குறித்த கப்பல் கடலில் மூழ்கியது. இதில் 3 பேர் உயிரிழந்தனர். 9 மாலுமிகளை காணவில்லை.


மற்றொரு விபத்து வட சீனாவின் டியான்ஜின் நகராட்சியில் பதிவு செய்யப்பட்ட மற்றொரு சரக்குக் கப்பல் நேற்று முன்தினம் அதிகாலை 2.30 மணியளவில் வெய்ஹாய் நகரம் அருகே கடலில் மூழ்கியது. அந்தக் கப்பலில் இருந்த 14 மாலுமிகளில் 7 பேர் உயிரிழந்தனர். 7 பேரை காணவில்லை.

பலத்த காற்று மற்றும் அலைகளின் சீற்றத்தால் குறித்த இரு கப்பல்களும் கவிழ்ந்திருக்கக்கூடும் எனத தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்துகளில் பலியான 10 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

நீரில் மூழ்கி காணாமற் போன 16 பேரையும் தேடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாக ஷண்டாங் மாகாண கடலோர காவற்படை உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (2)

# பாக். வெளியுறவு அமைச்சர் ஈரானுக்கு இருநாள் பயணம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ ஷெரீப்பின் ஆலோசகர் மற்றும வெளியுறவுத்துறை அமைச்சர் சரட் அஜீஸ் இரண்டு நாள சுற்றுப்பயணமாக ஈரான் பயணித்துள்ளார்.

இவர் அங்கு நடைபெறவுள்ள பொருளாதார ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்திலும் கலந்து கொள்வார்.

மேலும் பல மில்லியன் டொலர் செலவில் உருவாகும் ஈரான் மற்றும் பாகிஸ்தான் நாடுகளுக்கிடையேயான எரிவாயு குழாய் குறித்தும் ஈரான நாட்டு தலைமை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார். (2)

# முதல் போப்பாண்டவரின் அஸ்தி பேழை; மக்கள் தரிசிப்பு



முதல் போப் செயிண்ட் பீட்டரின் அஸ்தி பெட்டி பொதுமக்கள்பார்வைக்கு வைக்கப்பட்டது.

இயேசு கிறிஸ்துவின் 12 திருத்தூதர்களில்ஒருவராக கருதப்படுபவர் சென் பீட்டர்.

இவர் தான் முதலாவது போப். இவரது அஸ்தி பெட்டி நேற்று முன்தினம் புனிதர் பீட்டர் தேவாலயத்தில் மக்கள் தரிசிப்புக் கென வைக்கப்பட்டது.அஸ்தியை தரிசிக்க ஏராளமானவர்கள் சென் பீட்ட ர்ஸ் சதுக்கத்தில் கூடினர்.

இதற்கு முன்னதாக சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றது, இதில் உலகெங்கிலும் இருந்து வந்திருந்த சுமார் ஆயிரத்து 200 கார்டினல்கள், தலைமை குருக்கள், ஆர்ச் பிஷப்புகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (2)

# ஜப்பான் தூதுவரை அழைத்து சீனா கடும் கண்டனம்

(பீஜிங்)

தீவுகள் பகுதியை வான் பாதுகாப்பு மண்டலமாக சீனா அறிவித்ததை ஜப்பான் ஏற்க மறுத்துள்ளது.அதற்கு சீனா, ஜப்பான் தூதரை அழைத்து கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

**வான் பாதுகாப்பு மண்டலம**

சீனா தன்னிச்சையாக கிழக்கு சீன வான்வெளியை பாதுகாப்பு மண்டலம் என அண்மையில் அறிவித்தது.

எனவே அவ்வழியாக பறக்கும் விமான்ங்கள் தங்களது பயண விபரத்தைத் தமக்கு தெரிவிக்க வேண்டும். தவறினால் நடவடிக்கை எடுப்போம என்று சீனா எச்சரிக்கை விடுத்தது.

இது வழமையான சர்வதேச விமான சேவைக்கு பாதிப்பு ஏற்படுத்தாது என்றும் சீனா விளக்கம் அளித்தது.

ஜப்பான் மற்றும் அமெரிக்க நாடுகளின் இந்த விமர்சனம் சீனாவுக்கு அதிருப்தியைக் கொடுத்துள்ளது. இதன் எதிரொலியாக சீனாவிலுள்ள ஜப்பான் நாட்டு தூதரை அழைத்து கண்டனம் தெரிவித்தது. (2)

# இந்தியா - மே.தீவுகள் இன்று பலப்பரீட்சை

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. முன்னதாக 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரை இந்திய அணி 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இரு அணிகள் இடையேயான 3 போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடரில் கொச்சியில் நடந்த முதல் ஆட்டத்தில் இந்தியா 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்திலும், விசாகப்பட்டனத்தில் நடந்த 2-வது ஒருநாள் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் 2 விக்கெட்டுக்கள் வித்தியாசத்திலும் வெற்றிபெற்றன. இதனால் தொடர் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் காணப்படுகிறது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 3-வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி உத்தரபிரதேச மாநிலம் கான்பூரில் இன்று (புதன்கிழமை) நடக்கிறது.

டெஸ்ட் தொடரை வென்றது போல இந்திய அணி இன்றைய ஆட்டத்திலும் வென்று தொடரை கைப்பற்றுமா? என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

அதே நேரத்தில் டெஸ்ட் தொடரை இழந்த மேற்கிந்தியத் தீவுகள், ஒருநாள் தொடரையாவது கைப்பற்றிவிட வேண்டும் என்ற ஆவலில் உள்ளது.

இரு அணிகளும் சிறப்பாக விளையாடுவதால் தொடரை வெல்ல கடும் போராட்டம் இருக்கும். துடுப்பாட்டத்தில் சிறப்பாக இருக்கும் இந்திய அணி பந்துவீச்சு, களத்தடுப்பில் பலவீனப்பட்டு காணப்படுகிறது. இதை சரி செய்தால்தான் தொடரை வெல்ல இயலும்.

துடுப்பாட்டத்தில் ரெய்னா, யுவ்ராஜ் திணறி வருகிறார்கள். இருவரும் நல்ல நிலைக்கு திரும்புவது அவசியமாகிறது. வீராட் ஹோலியின் ஆட்டம்தான் இந்திய அணிக்கு மிகவும் பக்கபலமாக இருந்து வருகிறது.

பிராவோ தலைமையிலான மேற்கிந்தியத் தீவுகள் அணி, இந்தியாவுக்கு எல்லா வகையிலும் சவால் கொடுத்து விளையாடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. லெண்டில் சிம்மன்ஸ், பவெல், டரன் சமி, சாமுவேல்ஸ் போன்ற சிறந்த வீரர்கள் அந்த அணியில் உள்ளனர்.


இரு அணிகளுமே தொடரை கைப்பற்ற கடுமையாக போராடும் என்பதால் ஆட்டம் விறுவிறுப்பாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இரு அணி வீரர்களின் விபரம் வருமாறு :-

**இந்தியா:** தோனி (தலைவர்), ஷிகார் தவான், ரோகித் சர்மா, வீராட ஹோலி, யுவ்ராஜ் சிங், ரெய்னா, ரவீந்திர ஜடேஜா, அஸ்வின், புவ்னேஸ்வர் குமார், முகமது ஷமி, மோகித் சர்மா, அமித் மிஸ்ரா, அம்பதி ராயுடு, வினய் குமார், ஜெய்தேவ் உன்கட்.

**மேற்கிந்தியத் தீவுகள் :** டுவெயின் பிராவோ (தலைவர்), பவெல், சார்ல்ஸ், சாமுவேல்ஸ், டரன் பிராவோ, லெண்டில் சிம்மன்ஸ், டரன் சமி, ஹோல்டர், சுனில் நரேன், வீராசாமி பெருமாள், ராம்போல், ரினோ பெஸ்ட், நார்சிங் டியோனரின்.

## ஸ்ரெயினுக்கு அபராதம்



தென்னாபிரிக்க அணியின் முன்னணி வேகப்பந்து வீரர் ஸ்ரெயின் பாகிஸ்தானுக்கு எதிராக கடந்த 22-ந்தேதி நடந்த 20 ஓவர் போட்டியில் அவர் பாகிஸ்தான் வீரர் அகமது ஷேசாத்தை தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார்.

விசாரணையில் இது உறுதி செய்யப்பட்டது.

இதைத்தொடர்ந்து குறித்த போட்டியில் இருந்து பெற்ற பணத்தல் 10 சதவீதம் அபராதமாக விதிககப்பட்டுள்ளது.

# புதிய திட்டங்களுடன் அடுத்த போட்டி : லீமன்



அவுஸ்திரேலியாவில் இடம் பெற்றுவரும் ஆஷஸ் தொடரின் இரண்டாவது போட்டியில் அவுஸ்ரேலிய அணி புதிய திட்டங்களோடு களமிறங்கும் என அவுஸ்ரேலிய அணியின் பயிற்றுவிப்பாளர் டெரன லீமன் தெரிவித்துள்ளார்.

இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது போட்டியில் அவுஸ்திரேலிய அணி மிகச்சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்தி 381 ஓட்டங்களால் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றிருந்தது.

இந்நிலையிலேயே டெரன் லீமன் இவ்வாறு தெரிவித்துள்ளார். முதலாவது போட்டி இடம் பெற்ற பிறிஸ்பேன் ஆடுகளம் அதிக வேகமுடையதாக காணப்பட்ட போதிலும் அடுத்த போட்டி இடம்பெறவுள்ள அடிலெய்ட் ஆடுகளம் மெதுவானதாக துடுப்பாட்டத்திற்குச் சாதகமானதாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் இது தொடர்பில கருத்துத் தெரிவித்த அவர்,

அவுஸ்ரேலிய அணி இன்னமும் முன்னேற வேண்டிய தேவையுள்ளதாகவும் தொடர்ந்தும் முன்னேற விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

பிறிஸ்பேன் போட்டியில் அவுஸ்திரேலிய அணி சிறப்பாக விளைபாடியதாகவும் ஆனால் அடுத்த போட்டி வித்தியாசமானதாக அமையுமெனவும் குறிப்பிட்ட டெரன் லீமன், அடுத்த போட்டிக்காக சிறந்த சில திட்டங்களைக் கொண்டுள்ளதாகவும் அவற்றை அமுல்படுத்த விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

முதலாவது போட்டியில் இரு அணிகளும் ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்த நிலையில், தனது அணி வீரர்கள் ஆக்ரோஷமாக விளையாடுவதை வரவேற்பதாக குறிப்பிட்ட டெரன் லீமன், குறித்த எல்லையைத் தாண்டி அவர்களது ஆக்ரோஷம் செல்லாத வரை பிரச்சினைகளில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## மன அழுத்தம் காரணமாக டிராட் அணியிலிருந்து விலகல்



இங்கிலாந்து அணியில் இருந்து ஜொனதன் டிராட் மன அழுத்தம் காரணமாக விலகப்போவதாக நாளிதழ் ஒன்று அறிவித்துள்ளது.

அவுஸ்திரேலிய நாட்டிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி, அங்கு வரலாற்றுச் சிறப்புமிக்க ஆஷஸ் போட்டிகளில் பங்குபற்றி வருகிறது.

இதுவரை ஒரு டெஸ்ட் போட்டி நடைபெற்று முடிந்துள்ளது. அதில் அவுஸ்திரேலிய அணி 381 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இந்நிலையில், இங்கிலாந்து அணியில் இடம்பெற்றுள்ள ஜொனதன் டிராட் மன அழுத்தம் காரணமாக சிகிச்சை பெறுவதற்காக தான் போட்டியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

இதுகுறித்து நாளிதழ் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில், தற்போது உள்ள நிலையில் விளையாடுவது என்பது சரியாக இருக்கும் என எனக்கு தோன்றவில்லை. தான் 100 சதவீதம் சரியாக இல்லை. எனவே, கடந்த காலங்களில் விளையாடியது போன்று சிறப்பாக செயல்பட முடியாது என்பதை நான் நன்றாக அறிவேன் என்று அவர் கூறியுள்ளதாக தெரிவித்துள்ளது.

மேலும் கிரிக்கெட்டில் இருந்து தற்காலிகமாக ஓய்வு பெறுவது என்பதே தனது முதல் விருப்பமாக உள்ளது என்றும் அதனாலேயே மீண்டும் பழைய நிலைக்கு திரும்புவதில் உரிய கவனம் செலுத்த முடியும் எனவும் கூறியுள்ளதுடன், தனது சக வீரர்கள் சிறப்பாக விளையாட தான் வாழ்த்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

## கெய்ல் விலகல்

மேற்கிந்தியத் தீவுகளின் அதிரடி மன்னன் கிறிஸ் கெய்ல், கொச்சியில் இந்தியாவுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியின் போது அவருக்கு தசைப்பிடிப்பு ஏற்பட்டது.

இதனால் எஞ்சிய போட்டிகளில் இருந்து விலகினார்.

கெய்ல் 4 வாரங்கள் வரை ஓய்வில் இருக்க வேண்டும். இதனால் நியூசிலாந்துக்கு எதிரான 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் அவர் பங்கேற்கமாட்டார்.



# இங்கிலாந்து பிறீமியர் லீக் உதைபந்தாட்ட போட்டி

தற்போது இடம்பெற்றுவரும் இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரில் நேற்று முன்தினம் நடந்த வெஸ்ட் ப்ரோம்விச் அல்பியன் அணிக்கும் அஸ்ரன் வில்லா அணிக்குமிடையிலான போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

இப்போட்டியின் 3ஆவது நிமிடதில் வெஸ்ட் ப்ரோம்விச் அல்பியன் அணியின் ஷேன் லோங் கோலொன்றைப் பெற்றுக் கொடுத்து அவ்வணிக்கு 1:0 என்ற முன்னிலையைப் பெற்றுக் கொடுத்தார்.

மீண்டும் 11ஆவது நிமிடத்தில் ஷேன் லோங் கோலொன்றைப் பெற்று வெஸ்ட் ப்ரோம்விச் அல்பியன அணி 2:0 என்ற முன்னிலையைப பெற உதவினார்.

முதற் பாதியில் மேலதிக கோல்கள் பெறப்படாத நிலையில், முதற் பாதி முடிவில் வெஸ்ட் ப்ரோம்விச



அல்பியன் அணி 2-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

எனினும் இரண்டாவது பாதியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய அஸ்ரன் வில்லா அணி சார்பாக போட்டியின் 67ஆவது நிமிடத்தில் கரிம் எல் அஹமடி முதலாவது கோலைப் பெற்றார். அதன் பின்னர் 76ஆவது நிமிடத்தில் ஆஷ்லி ஆர்.வெஸ்ட்வூட் கோலொன்றைப் பெற அஸ்ரன் வில்லா அணி 2-2 என்ற கணக்கில கோல் எண்ணிக்கையைச் சமப்படுத்தியது.

அதன் பின்னர் இரு அணிகளும் கோல்களைப் பெற்றுக் கொள்ளாத நிலையில் இப்போட்டி 2:2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

## ஆல் ரவுண்டர் தரவரிசை அஸ்வின் முதலிடம்

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் அடிபபடையில் வீரர்களின் தர வரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது. இதன்படி துடுப்பாட்ட வரிசையில் தென்னாபிரிக்க வீரர் டி வில்லியர்ஸ் முதலிடததில் நீடிக்கிறார்.


இந்திய வீரர்கள் புஜாரா ஆறாமிடத்திலும், வீராட் ஹோலி 20-வது இடத்திலும் உள்ளனர். பந்துவீச்சாளர்



கள் வரிசையில் தென்னாபிரிக்க வீரர் ஸ்ரெயின் முதல் இடத்தில் தொடருகிறார்.

இந்திய வீரர்கள் அஸ்வின் ஐந்தாமிடத்திலும், பிரக்யான் ஓஜா ஒன்பதாமிடத்திலும் இருக்கின்றனர். சகீர் கான் 20-வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். சகலதுறை வீரர்கள் வரிசையில் இந்திய வீரர் அஸ்வின் தொடர்ந்து முதலிடத்தில் காணப்படுகிறார்.

# செங்கல்பட்டு ...







முகாமில் உள்ளேயே நினைவு சின்னம் அமைத்து நவம்பர் 27 நாளில் மாவீரகளுக்கு அஞ்சலி செலுத்துவர்.

அணி அணியாக விளக்குகள் வைத்து மாவீரர்களுக்கு சுடர் வணக்கம், மலர் வணக்கம் செய்து வந்தனர். மஞ்சள் சிவப்பு வண்ண தோரணங்களை நினைவு சின்னம் சுற்றிலும் கட்டியிருந்தனர்.

கடந்த ஆண்டும் மாவீரர் தினத்தை சிறப்பு முகாமில இருந்த அனைவரும் அனுசரித்தனர். இதனால் யாருக்கும் இடையூறு இல்லை. காரணம் இது அவர்கள் தனிப்பட்ட நிகழ்வாகவே அனுசரித்து வந்தனர்.

இந் நிலையில், மாவீரர் நர்ளை அனுசரிக்க எல்லா ஏற்பாடுகளும் முடிந்து விட்ட நிலையில், நேற்று தமிழக காவல்துறை மாவீரர் நாளை அனுசரிக்க தடை விதித்தது. இறந்த உறவுகளுக்கு முகாமில் அஞ்சலி செலுத்தக் கூடாது என்று உத்தரவிட்டது.

அதை தொடர்ந்து மாவீரர் நிகழ்ச்சி ஏற்பாடுகளை அதிரடியாக இடிக்கத் தொடங்கிய்து . இதை பார்த்த ஈழத் தமிழர்கள் அதிர்ச்சியில் உறைந்தனர். பொலிஸாரைக் கண்டித்து முழக்கமிட்டனர்.

ஆனால் எதையும் காதில் வாங்கிப் போட்டுக் கொள்ளாத தமிழக பொலிஸார் , மாவீரர் நாளுக்காக அங்கு நிறுவப்பட்டிருந்த நினைவு தூபி மற்றும் கொடிக் கம்பங்களை இடித்து அகற்றியது. தோரணங்களை கிழித்து எறிந்தது.

இறந்த சொந்தங்களுக்கு கூட அஞ்சலி செலுத்த இந்த அரசு தடை விதித்துள்ளதை முகாம்வாசிகள் கடுமையாக எதிர்த்துள்ளனர். பொலிஸாரின் இந்த அராஜக நடவடிக்கையை கண்டித்து 45 ஈழத் தமிழர்கள் பட்டினிப் போராட்டத்தில் ஈடுபட உள்ளனர்.

தமிழக அரசு இப்போது ஈழத் தமிழர்களுக்காக அனுசரிக்கப்படும் அனைத்து நிகழ்வுகளையும் தடை செய்து வருகிறது . முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் சுற்றுப் புற சுவன அண்மையில் தமிழக அரசு இடித்ததும் குறிப்பிடத்தக்கது. (செ-11)


## பதவி வெற்றிடம்

கிளிநொச்சி நகரப் பகுதியில் இயங்கவுள்ள அச்சகத்துறைக்கு கணனி தமிழ் தட்டச்சு மற்றும் ஈமெயில், இணையம் ஆகியவற்றில் சிறப்பான தேர்ச்சியும் முன்னனுபவமுள்ளவர்களிடம் இருந்து (இரு பாலாரும்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமையுடையவர்கள் முழுப்பெயர், முகவரி, பிறந்ததிகதி, தே.அ.அ.இல, கல்வித் தகைமை, தொலைபேசி இலக்கம் உள்ளிட்ட விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை விளம்பர இல:- C-5575, மே/பா வலம்புரி இல.3, 2-ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக் கு எதிர்வரும் 30-ந் திகதிக்கு முன்னதாக தபாலில் அனுப்பி வைக்கவும்.

குறிப்பு : கிளிநொச்சி நகரை அண்மித்து வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(இ)


# பல்கலையை...

அனைவருக்கும் அசம்பாவிதங்களைத் தவிர்க்கும் நோக்கில் கட்டாய விடுமுறை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# உயர் கோபுர...

நகர் கிராமத்தில் அமைந்துள்ள தொலைத்தொடர்பு(டவர்) கோபுரத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அதிகாலை இனம் தெரியாதவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் தேசிய கொடியான புலிக்கொடியினை ஏற்றியுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த புலிக்கொடி படைத்தரப்பினரினால் உடனடியாக அகற்றப்பட்டது.

இந்த நிலையில் மாவீரர் தினத்தையொட்டி மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா பகுதிகளில் உள்ள பல தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கும் ஆயுதம் ஏந்திய இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

புலிக்கொடியினை ஏற்றிவிடக்கூடாது என்ற நோக்கில் குறித்த பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டுள்ளது. (செ-11)


நாளைய தினத்துடன் அரியவாய்ப்புக்கள் கை நழுவத்தான் போகின்றன.

கையிலுள்ள காசுடன் கனடாவில் படிக்க உழைக்க - 3 பகுதிகளாகப் பணம் செலுத்த

எண்ணி 25 நாட்களுள் இத்தாலி சென்று படிக்க, உழைக்க

சட்ட ஆலோசனை பெற இறுதிநாள்

28-11-2013 பி.ப. 5.30 வரையாகும்.

இதன் பின்னர் இவ்வளவு மலிவாக, இலகுவாக நீங்கள் பிற நாடு செல்ல வாய்ப்புக்கள் அறவே கிட்டாது. அப்போ உங்கள் எதிர்காலம்?

குறிப்பு :

யாழ்ப்பாணத்திலேயே பல்வேறு தொழில்சார் கற்கை நெறிகள், தொழில் வாய்ப்புக்கள் காணப்படுகின்றமையை எமது இளைய சமூகத்தின் கவனத்திற்கு அறியத் தருகின்றோம். இவ்வடிக்குறிப்பு கௌரவ இயக்குநர் சபைக்கட்டளைப்படி இங்கே பிரசுரமாகின்றது.

(C-5583)

திசைகாட்டி பிறைவேற் லிமிட்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 021 221 9016, 021 568 9090

www.thisaivisa.com



Big Opportunity



மன்னார், வவுனியா, திருகோணமலை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் O/L, A/L பயின்றவராயின் இன்றே இணையுங்கள்.

மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிடங்கள்

வயதெல்லை 18-30

அனுபவம் அவசியமற்றது.

தொடர்பு : 0772712511, 021 4993166

(4272)


# தூக்குத்...

நீதிக்கு முற்றிலும் முரணான விதத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்களை சித்திரவதை செய்து, காவல் துறையினர் பெற்ற ஒப்புதல் வாக்கு மூலங்களின் அடிப்படையில் தடா நீதிமன்றம், தடா எனும் கொடிய அடக்கு முறைச் சட்டத்தின் மூலம் 26 பேருக்கு மரண தண்டனை விதித்தது.

தடா வழக்கில் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு கிடையாது. அதனால் உச்சநீதிமன்றத்தில் செய்யப்பட்ட மேல்முறையீட்டில் 19 பேர் விடுதலை செய்யப்பட்டனர். 4 பேருக்கு தூக்குத் தண்டனையும், 3 பேருக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டது. மரணக் கொட்டடியில் இருந்த நளினிக்கு தூக்குத் தண்டனை குறைக்கப்பட்டாலும் 22 ஆண்டுகளாகியும் விடுதலை செய்யப்படவில்லை.

தற்போது தமிழக மக்களையும், ஏன்? இந்தியாவில் உள்ள மனித உரிமை ஆர்வலர்கள் அனைவரையும் அதிர்ச்சிக்கு ஆளாக்கும் விதத்தில், இந்த வழக்கை விசாரித்த மத்திய புலனாய்வுத் துறையின் காவல்துறை கண்காணிப்பாளர் கேரளத்தைச் சேர்ந்த தியாகராஜன் வாக்குமூலம் தந்துள்ளார்.

மனித மனங்களை உருக்கும் உணர்ச்சிமயமான ஒளிப்படமான "உயிர் வலி"யில் தியாகராஜன் தன் மனசாட்சியைப் பாரமாக உலுக்கிக் கொண்டிருந்த உண்மையை இப்போது கூறுவதாகவும், பேரறிவாளனின் ஒப்புதல் வாக்கு மூலமாக நான் பதிவு செய்த போது, பற்றரி செல்கள் எதற்கு என்னை வாங்கச் சொன்னார்கள் என்பது தனக்குத் தெரியாது என்று கூறியதை தான் பதிவு செய்யவில்லை என்றும்; பேரறிவாளனின் கருணை மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு, மரண தண்டனையில் இருந்து அவர் விடுபடுவார் என்று நினைத்ததாகவும், தற்போது அவர் தூக்குத் தண்டனையை எதிர்நோக்கி இருப்பதால், தன் நெஞ்சில் உறுத்தும் முள்ளாகிய இந்த உண்மையைக் கூறுவதாகவும் தெரிவித்துள்ளார்.

பொய்யின் அடிப்படையிலேயே வழக்கு சோடிக்கப்பட்டது என்று இந்த வழக்கு விசாரணையின்போது, என்னைப் பிரண்ட சாட்சியாக அரசு வழக்கறிஞர் அறிவித்த நேரத்தில் நான் ஆணித்தரமாகக் கூறினேன்.

முருகன், சாந்தன் மீதும் இட்டுக்கட்டிய பொய்களை காவல்துறையிடம் தந்ததாக ஒப்புதல் வாக்குமூலமாக்கி, இந்த வழக்கைப் புனைந்தனர் என்பது வெட்ட வெளிச்சமாகி விட்டது.

தியாகராஜனுடைய வாக்குமூலத்துக்குப் பிறகாவது மத்திய உள்துறை அமைச்சகம் மேலும் நீதி குழிதோண்டிப் புதைக்கப்படாமல் இருக்க, குடியரசுத் தலைவருக்கு உண்மையை தெரிவித்து, மூவரின் மரண தண்டனையை ரத்துச் செய்ய வேண்டும்.

ஒரு உண்மை புலப்பட்டுவிட்டது. இந்த வழக்கில் ஏற்கெனவே நீதி தூக்கிலிடப்பட்டு விட்டது என்பதுதான் அந்த உண்மையாகும். அநீதியின் கொடுங்கரங்கள் அவர்களுக்கு மேலும் துன்பம் விளைவிக்காமல் காக்க அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று வைகோ வலியுறுத்தியுள்ளார். (செ-11)

# கைதான...

ளது.

இதேவேளை கைது செய்யப்பட்ட நா. ஜர்சன் (வயது 22), ர. கஜீவன் (வயது 21), மு. அசோக்குமார் (வயது 35), அ. பிரதீபன் (வயது 30) ஆகிய நான்கு பேருக்கும் புனர்வாழ்வு அளிக்கப்படவுள்ளதாக தெரிய வந்துள்ளது.

மேலும் கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட 47 பேரும் தொடர்ந்து புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் மாவீரர் வாரத்தை முன்னிட்டு இந்த வருடமும் பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரின் கைது நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மனித உரிமை ஆணைக் குழுவில் இச்சம்பவம் தொடர்பில் உறவினர்களால் முறைப்பாடொன்றும் செய்யப்பட்டுள்ளது. (செ-4,6)

# நெடுந்தீவு...

ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவருக்கு வயது 47.

இதேவேளை, இவரது மரணத்தில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் கொலையா? தற்கொலையா? என்பது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் வடக்கு மாகாண சபையின் எதிர்கட்சித் தலைவரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளருமான கந்தசாமி கமலேந்திரன் தெரிவித்தார். (செ-6)

# இராணுவக்...

மாணவர்கள் மீதும் மூர்க்கத்தனமாக தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதைவிட யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் உட்பட பல மாணவர்களையும் கைது செய்து புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைத்திருந்தனர்.

இந்நிலையில் தற்போது வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெற்று ஆட்சி அமைத்துள்ள நிலையில் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் மாவீரர் நாள் நினைவுகள் அமையவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உட்பட்ட முள்ளிவாய்க்காலில் இராணுவக் காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி உள்ளிட்ட வன்னி மாவட்டங்களில் முன்னர் தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவீரர் துயிலும் இல்லங்கள் அமைந்திருந்த இடங்களில் இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வடக்கில் பலர் கைது செய்யப்பட்டுமுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக யாழ் பல்கலைக் கழகத்தின் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஆர். இராசகுமாரன் உள்ளிட்ட ஐந்து பேர் நேற்றுவரை பயங்கரவாத குற்றத் தடுப்ப பிரிவினரால் அழைக்கப்பட்டு விசாரணைகளுக் உட்படுத்தப் பட்டிருந்தனர்.

இதில்நேற்றுமாலை இராசகுமாரன் விடுதலை செய்யப் பட்டுள்ளார். (செ-4,6)

# இரு மோட்டார்...

யாழ் நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும், யாழிலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுமே வேகக் கட்டுப்பாட்டையிழந்து நேருக்கு நேர் மோதுண்டுள்ளன.

விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிளில் பயணித்த வடமராட்சி பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த ப.பத்மசீலன் (வயது - 26), யோ.பிறேம் (வயது - 26), அச்சுவேலியைச் சேர்ந்த செ.ஜெயக்குமார் (வயது - 32) ஆகிய மூவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (செ-6,134)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.